அதிகாரம் மக்கள் கையில்



மக்கள் மேம்பாட்டு திட்டம்

வளர்ச்சித்திட்ட அறிக்கை '96

சாந்தன்பாறை கிராமப் பஞ்சாயத்து




கிராமங்களே இந்தியாவின் உயிர்நாடி


என்று கனவு கண்ட மகான்

59-5


SANTHANPARA GRAMA PANCHAYAT



ട്രാൻസെക്ട് -1




ട്രാൻസെക്ട്.2.


കുത്തനെ ചരിവ്
ഉരുൾപൊട്ടൽ
കുത്തനെ ചരിവ്
കുത്തനെ ചരിവ്
ചെറിയചരിവ്
നിരന്ന ഭൂമി
കുത്തനെയുള്ള ചരിവ്
ഉരുൾപൊട്ടൽ
ഉരുൾപൊട്ടൽ
കുന്നുകൾ
കുന്നുകൾ
കുന്നുകൾ


பஞ்சாயத்து உறுப்பினர்கள்




திருமதி. தமிழரசி



திரு. சோதி சசி.



K.K. மாத்யூ.




திரு. ந. மோகன்.




வல்சா ஜோயி.




திருமதி. லீலாவதி
இராமமூர்த்தி.




திரு. மூக்கன் பெரியசாமி



திரு. K.G. கவில் குமார்



பி. ஏ. நூதம்





அஸீபத்திரி . வாசகர்களுக்கு அடிக்கல் நாட்டு விழா

5 - 11- 1996


கிராம பஞ்சாயத்து அலுவலக ஊழியர்கள்

1) P.A. நுஜும் (செயலாளர்), 2) V.K. ஜேக்கப் (தலைமை எழுத்தர்),
3) P.A. ரோசம்மாள் (முதுநிலை எழுத்தர்) 4) K.G. அந்தோணி (முதுநிலை எழுத்தர்),
5) சஜு ஜோசப் (இளநிலை எழுத்தர்), 6) சாலமோன் ஜார்ஜ் (இளநிலை எழுத்தர்),
7) K. காளியப்பன் (பியூன்), 8) S.S. கருப்பசாமி (முழு நேர சுத்திகரிப்பாளர்),
கதிஜா பீவி.P.P (பகுதி நேர சுத்திகரிப்பாளர்), 10) சேர்மன்.T.V (பகுதி நேர சுத்திகரிப்பாளர்).





டி. பாலீ



வீ. ஏ.ஜையா டி.ஆர்.பி.

தமிழ் மொழி பெயர்ப்பாளர்

சமர்ப்பணம்



திரு. S. சாமித்துரை

தோற்றம்.


மறைவு. 31-7-'95

"இதயத்தில் என்றும் இனிய எண்ணங்களாய் நாட்டின் முன்னேற்றமே
நெஞ்சின் குறிக்கோளாய், நல்ல இக்கிராமத்தின் நடு நாயகனாய்
அன்பாய், அறிவாய், அரவணைக்கும் அருமைத் தோழனாய், கடமை
உணர்வில் கலந்து இருக்கையிலே அகால மரணம் எனும் பிரிவால்
நம்மை விட்டு சென்ற அன்புத் தலைவருக்கு இதய அஞ்சலி"

IDUKKI DISTRICT

SHOWING PANCHAYATS

SCALE 1 CM : 2.5 KM



REFERENCE	
———	DISTRICT BOUNDARY
—·—·—	TALUK BOUNDARY
·····	PANCHAYAT BOUNDARY
~~	RIVERS
——·——·——	STATE HIGHWAYS
———	OTHER ROADS
■	DISTRICT HEADQUARTER
•	TALUK "
ELAPPARA Pt.	NAME OF PANCHAYAT


தொகுப்புரை

முற்றிலும் புதுமையான ஓர் அறிமுகம். முன்கால அனுபவங்களோ அனுபவஸ்த்தர்களின் வழிகாட்டல் அறிவுரைகளோ என்று எதையும் தொடராத ஒரு செயல்பாடாகும். சிறந்தவர்களின் உதவிகளோ தேவையான காலங்கள் கொடுக்காமல் குறைந்த காலம் கொண்டு தீர்க்க கூடிய கடினமான பணியாகும். அதுவே இந்த வளர்ச்சி திட்ட அறிக்கை தயாரித்தலாகும். இந்த ஊர் பிறந்த கதையும் அதனைச்சார்ந்த சமூகவலாச்சாரங்களையும் அறிவதற்காக பல முன்னோர்களிடமிருந்தும் பல குறிப்பேடுகளிலிருந்தும் சேகரிப்பதற்காக தேடியலைந்த புனிதப்பயணங்கள், ஏடுகளிலிருந்து கிடைக்காத இக்கிராமத்தின் நிலவடிவமைப்பற்றி படிப்பதற்காக நடத்திய கல்விப்பயணம். குறைந்த அனுபவ அறிவை மட்டுமே முதல் கூட்டாக்கி நடத்திய வருவாய் நில வரைபட தயாரிப்புகள், கிராம வளர்ச்சி பற்றி மக்களின் ஆர்வங்கள் வெளியாக்கப்பட்ட சிறப்பு கிராமசபைகளில் உயர்ந்து வந்த விவாதங்கள், அரசு அலுவலகங்களில் நூற்றுக்கு மேற்பட்ட பதிவேடுகளைப்புரட்டி மனுக்களாக்கிய பல்வேறு இன விபரங்கள்- இவற்றை எல்லாம் ஒன்றாக இனைத்து இக்கிராமபஞ்சாயத்தின் வளர்ச்சி திட்ட அறிக்கையை உருவாக்குதல் எனும் சீரிய பணி. அவற்றை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு வீர நடை போட்ட ஒரு சிறு செயற்குழுவினர், எங்களின் முயற்சிகள் முற்றிலும் வெற்றி என முழங்கவில்லை.. மாபெரும் இலட்சியத்தை முன்நிறுத்தி நாங்கள் நடத்திய முயற்சியின் வெற்றி தோல்விகளைக் குறித்து மதிப்பீடு நடத்துவது வளர்ச்சி திட்ட கருத்தரங்கில் பங்கு கொண்டு விவாதம் நடத்துகின்ற கிராம சபைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், தொடர்ந்தும் நமது கிராமத்தில் 9-ஆம் ஐந்தாண்டு திட்டத்தின் சான்று இதுமட்டுமே என்று குறிப்பிடுகிறேன்.

அபிவிருத்தி என்றால் நியாயமான வனர்ச்சித்திட்டமும், விரைவான பொருளாதார உயர்வும் என்றுதானே அர்த்தம். நமது பஞ்சாயத்தின் ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டம் ஒரு நடுநிலையான வளர்ச்சி திட்டமாக அமைவதற்கு அடிப்படை சான்று என்ற நிலையில் இந்த அறிக்கை உதவும் என நாங்கள் நம்புகின்றோம். இதனைத்தயாரிக்க அனைத்து வகையிலும் உதவிய ஒவ்வொருவருக்கும் இதய பூர்வமான நன்றிகளை உரித்தாக்குவதோடு தொடர்ந்தும் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் அமர்வுகளில் ஒவ்வொருவருக்கும் மனமுவந்து ஒன்றுபட வேண்டுகிறேன்.

இவ்வறிக்கையும் விவாதங்களின் மூலம் மலர்கின்ற மணமுள்ள மலர்களாய் இக்கிராமத்தில் சரியான வளர்ச்சிக்கு உதவும் எனும் ஆவலுடன்...

T.P. வர்க்கீஸ்
தொகுப்பாளர் (EDITOR)



சாந்தன் பாறை கிராம பஞ்சாயத்து ஆட்சிக்குழு 1995.

1. திரு. சேனாதி சசி, தலைவர்
2. திருமதி. தமிழரசி சேகர், துணைத்தலைவர்
3. திரு. ந. மோகன், சேர்மன்
4. திரு. K.K. மாத்யூ, கிராமபஞ்சாயத்து உறுப்பினர்
5. திருமதி. வல்சா ஜோயி, கிராமபஞ்சாயத்து உறிப்பினர்
6. திருமதி. லீலாவதி இராமமூர்த்தி, கிராம்பஞ்சாயத்து உறுப்பினர்
7. திரு. K.G. சுனில் குமார், கிராமபஞ்சாயத்து உறுப்பினர்
8. திரு. மூக்கன் பெரியசாமி, கிராமபஞ்சாயத்து உறுப்பினர்

பேரூராட்சி ஊழ்யினர்: திரு. M.V. குட்டப்பன்

வளர்ச்சி திட்டஅறிக்கை தயாரித்த உட்குழு:

1. திரு. T.P. வர்க்கீஸ், (கன் வீனர்) 2. திரு. ஆப்ரகாம் ஐசக்,DRP.(மாவட்ட பயிற்சியாளர்). 3. திரு.N.S.V. இராஜயா, DRP. (மாவட்ட பயிற்சியாளர்) 4. திருமதி. வல்சா ஜோயி-பஞ்சாயத்து உறுப்பினர் 4. திரு. D.பாலி- பஞ்சாயத்து. மேம்பாட்டுதிட்ட சிறப்பாளர், 7. திரு. எல்சி குரியாகோஸ், 8. திரு. C.K. சாஜு 8. திரு. N.V. ஜோர்ஜ், 9. திருமதி. அன்னம்மா மாணி, 10. திரு. G. ஆண்டனி, 11. திரு. T.K. மணி.

நில வரைபடம் தயாரிப்பு:

1. திரு. T.K. மணி, 2. திரு. K.K. ஸ்கரியா, 3. திரு. N.S.V. இராஜயா DRP

வரலாறு தயாரிப்பு

1. திரு.ஆப்ரகாம் ஐசக், DRP, 2. திரு.N.S.V. உதயகுமார், LRP, 3. திரு.K.G. சுனில்குமார்,DRP

தமிழாக்கம்..

1. திரு.ச.ந.ய. இராஜையார்(மாவட்ட பயிற்சியாளர்) 2. திரு. ச.ந.ய. உதயகுமார், க.த.ட. (ஊரகப் பயிற்சியாளர்), 3. திரு. ந.ந. இராமலிங்கம்இ க.த.ட., 5. திரு. க. ஆரோக்கியதாஸ், க.த.ட. 5. திரு. ங. இராஜன் மோஸஸ், சுவிசேசகர், 6. திரு.ங.இ. அருண்குமார், 7. திருமதி.ஜான்லிராஜன்இ 8. செல்வி. ப. வேளாங்கண்ணி, 9.திரு. சுகுமாரன்.

கடந்த கால சாந்தன் பாறை பஞ்சாயத்து நிர்வாகிகள்

1964

1. T. இராஜராம் - தலைவர்
2. I. பொன்னையா
3. R.S. சுஞ்சீவி
4. P.A. மத்தாய்
5. K.C. மரியாம்மா
6. S. ஜார்ஜ
7. மதுரை வீரன்
8. செல்லமுத்து
9. செல்லையா
10. இன்னாசிமுத்து

1979

1. P. அழகர்சாமி - தலைவர்
2. M.K. ஜான் - துணைத் தலைவர்
3. K.K. மாத்யூ
4. K. இரத்தினாகரன் பிள்ளை
5. S. சாமித்துறை
6. K. சுப்பையா
7. K. நடராஜன்
8. சுசீலா பாப்பன்.

1988

1. S. சாமித்துரை - தலைவர்
2. P. அழகர்சாமி - துணைத்தவைவர்
3. K.K. மாத்யூ
4. E.S. ராஜு
5. T.K. சுதாகரன்
6. செந்திலா சந்திரன்
7. L. மாரிமுத்து
8. பேச்சியம்மாள்.

உள்ளே

1. முன்னுரை
2. பொது விபரங்கள்
3. சமூக கலாச்சார சரித்திர குறிப்புகள்
4. நில வடிவமைப்பு
5. விவசாயம், சிறு நீர்ப்பாசன திட்டம்
6. விலங்கின பாதுகாப்பு
7. மீன் வளர்ப்பும், பிடித்தலும்
8. தொழிற்சாலை
9. எரி பொருள்
10. போக்குவரத்து
11. வீட்டு வசதி மற்றும் சமூக நலம்
12. பொது சுகாதாரம்
13. குடி தண்ணீர்
14. கல்வி
15. கலாச்சாரம் (கலை - பண்பாடு)
16. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலம்
17. பெண்கள் நலம்
18. கூட்டுறவு
19. பொருளாதாரம்
20. வனங்களிலிருந்து..
21. முடிவுரை.

முன்னுரை

இந்தியாவில் குடியாட்சியின் மூலம் பாராளுமன்ற ஜனநாயகம் ஆரம்பிக்கப்பட்டு அரை நூற்றாண்டுகள் ஆகிறது. ஆனாலும் அரசு நலத்திட்டங்கள் தீர்மானிக்க மக்களின் பங்கு எவ்விதத்திலும் பயன்படாமலும் உறுதி படுத்தாமலும் இருந்து வந்தது. குறைந்த அளவுள்ள மையக்கருத்துகளின் அடிப்படை ரீதியில் அரசு பல வித துறைகளில் முக்கியமாக அபிவிருத்தி திட்டங்கள்மூலம் மேம்பாட்டு திட்டத்திலும் செயல்முறைகளிலும் இதுவரையில் நிலை நிறுத்தப்பட்டது. இதன் படி ஒவ்வொரு பிர தேசத்தின் தேவைகள் எதிர்பார்ப்பிற்கும் பொருந்திய அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைபடுத்தி செயல்படுத்துவதில்லை. மேலிருந்து தீர்மானித்து செயல் படுத்துவதால் திட்டங்கள் முழுமையாக காலாகாலங்களில் தீர்க்கப்படாமை, ஊழல், தகுதியானவர்களுக்கு திட்டங்களின் பலன்கள் கிடைக்காமை, போன்றவை அபிவிருத்தி திட்டங்களின் தடங்கலாகின்றது. மேலும் இடம், பொருள், நீர் போன்றவையும் கூட நஷ்டப்படுகிறது. தொழில்பாடுகளையும் இணைத்து நாட்டின் முன்னேற்ற திட்டங்கள் வகுப்பதிற்குப்பதிலாக ஒவ்வொரு இலக்கியங்களுக்கும் அவர்களுக்கு தோன்றும்படி திட்டங்கள் நடைமுறைப் படுத்தி திட்டசெயல்முறைகள் மக்களிலிருந்து இருதியாக்கப்பட்டு விட்டிருந்தது. ஒவ்வொரு ஐந்துவருடங்கள் ஆகும்போது தேர்தல்வருகிறது. இதில் வாக்களிப்பதற்காக திட்டங்கள் வாயளவில் வாரிவழங்கவும் அதேபடி நின்று போகவும் உள்ளதிலிருந்து இது முழுமையாக செயல்படுத்த அதிகாரத்திற்கு ஒப்பமாக திட்டங்களை மேன்மைபடுத்த வேண்டும் என்ற தேவை உயர்ந்து வந்தது பஞ்சாயத்துராஜ் இயக்கம் நடைமுறைக்கு வந்ததோடு அதிகாரப்பதிர்வு பெருமளவில் நடைமுறையில் வருவதற்கும் மேம்பாட்டுத்திட்டங்கள் செயல்முறைப்படுத்துவதற்கான முன்னுரைகள் வகுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கேரளத்தின் அபிவிருத்தி பிரச்சினைகள் விவாதித்து செயல்படுத்த மிகவும் கடுமையான பொருளாதார சிக்கல்களை அனுபவித்து வருகின்ற நமது மாநிலம் விவசாயம், பெரிய மற்றும் சிறிய பரம்பரை தொழில்களும், நிறுத்தப்பட்டு வருகிறது. தகர்கின்றது. வரையறுக்கப்பட்ட அனைத்திற்கும் மூலதனமாகிய சேவை இலாக்காக்களில் (சுகாதாரம், கல்வி) சமூக பலன்கள் கூட சவாலாகின்றது. கேரளத்தின் விவசாய, சிறுதொழில், மேகலைகளில் உற்பத்திகளை பெறுக்கவும் சேவை மற்றும் நலத்துறைகளில் உள்ள பணிகளை உறுதிப்படுத்தாமல் சமூகங்கள் முன்னேற வாய்ப்பில்லை.

இந்த லட்சியத்தை அடைவதற்காக மக்கள் மேம்பாட்டுத்திட்டம் செயல்முறைகளாக்கப்பட்டு ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்ட மொத்ததொகையின் நாற்பது சதவீதம் பஞ்சாயத்துராஜ் வழி ஊராட்சி அலுவலகங்கள் தயாராக்குகின்ற நலத்திட்டங்களுக்காக செலவாக்கப்படும். மக்கள் விவாதஅடிப்படையில் திட்டங்கள் உருவாக்கவும், முன்னுரிமைகள் வழங்கவும் மக்கள் பங்கேற்போடு அதை நடைமுறைப்படுத்த இதன் மூலம் செயல்படுத்துவதோடு இதன் பயிற்சிகள் பிரச்சாரங்கள் இதரகுழக்களின் சேவைகள், மற்றுமுள்ள செயல்களின் மூலம் கேரளத்தில் ஒருபுதிய அபிவிருத்திபண்பாடு வளரச்செய்வதற்கும் மக்கள்மேம்பாட்டுத்திட்டம் அடிக்கல் நாட்டுகின்றது.

நமது பஞ்சாயத்தில் இதற்காக நடத்திய முதல்நிலைப் பயிற்சி 19.9.96-ல் நடந்தது. மாவட்ட அளவில் பயிற்சி பெறப்பட்ட ஏழு நபர்கள் (D.R.P.) வருப்புகளுக்கு முன்னிலை வகித்தது. பத்து அரசு ஊழியர்களும், 15 பெண்களும் அடக்கிய 92 நபர்கள் பயிற்சியில் பங்கெடுத்தனர். தொடர்ந்து 21.10.96 முதல் 2.10.96 வரை எட்டு வார்டுகளிலும் சிறப்பு கிராமசபைகள் கூடியது. கிராமசபைகளில் அபிவிருத்தி பிரச்சனைகள் குறித்து மக்களின் எதிர்பார்ப்புகள் ஆலோசனைகள் சிறப்பாக நடந்தது..

சிறப்பு கிராமசபைகளின் விவரங்கள்

வார்டு	தேதி	பங்கெடுப்பு			அரசு ஊழியர்கள்	பஞ்சாயத்து உறுப்பினர்கள்
		ஆண்	பெண்	மொத்தம்		
1.	22-9-96	78	20	98	4	3
2.	21-9-96	160	40	200	6	5
3.	29-9-96	250	100	350	8	4
4.	2-10-96	200	155	355	4	4
5.	22-9-96	120	80	200	4	3
6.	2-10-96	265	210	475	7	4
7.	29-9-96	160	50	210	4	4
8.	29-9-96	120	110	230	4	3
	மொத்தம்	1353	765	2118	-	-

கிராமசபைகள் முழுமையானதோடு பஞ்சாயத்தின் பலதரப்பட்ட நிலைகளை குறித்த விபரங்க சேகரிப்பதற்கான செயல்கள் ஆரம்பித்தது. ஒவ்வொரு டி. ஆர். பி. களின் தலைமையில் ஆ குழுக்களாக செயல்பட்டு விபரக்கணக்குகள் சேகரிப்பை சிறப்பான முறையில் முழுமையாக்கினர் நவம்ப 12, 13, தேதிகளில் இலாக்காக்கள் சந்திப்பும் தொடர்ந்து பொருளாதார நிலைரைப்படங்களும் அத குறிப்புகளும் இடம்பெற்று பூர்த்தியானது. அபிவிருத்தி அறிக்கை தயாரிப்பது குறித்துள்ள பயிற் (இரண்டாம் நிலைப் பயிற்சி) 14.11.96ல் நடைபெற்றது. இவ்வகுப்பில் 54 நபர்கள் பங்கெடுத்தெடுத்தன பயிற்சிக்கு பின் அபிவிருத்தி மேகலைகளை குறித்து கிராமசபை அறிக்கைகளும் கூடுதலான விபரங்கள சேகரித்து அபிவிருத்தி அறிக்கை எழுதி தயாரிப்பதற்காக செயற்குழுவினரை மூன்று குழுக்களாக பிரித் செயல்படுத்தப் பட்டது. இக்குழுவோடு வரலாறு இலாக்காக்கள் சந்திப்பு, பொருளாதார ரீதியான நிலவரை படங்கள் தயாரிப்பு போன்றவற்றிற்காக நியமிக்கப்பட்ட குழுக்களின் செயலின் விவாதங்களும் சேர்ந்து இந் அபிவிருத்தி அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்படுகின்றது.

நமது கிராம பஞ்சாயத்தின் ஒன்பதாம் ஐந்தாண்டுதிட்டத்தின் செயல்முறைகளுக்கு இவ்வறிக்க முழுமையாக உதவும் என்று முழுமனதோடு நாங்கள் கருதுகின்றோம்.

அன்புடன்..

சேனாபதி சசி
கிராம பஞ்சாயத்து தலைவ

பொதுவான விபரங்கள்

1. பஞ்சாயத்தின் பெயர்... சாந்தான்பாறை கிராம பஞ்சாயத்து.
2. உட்பட்ட வில்லேஜ்..... சாந்தான்பாறை வில்லேஜ் முழுதும்
   பூப்பாறை வில்லேஜின் முக்கிய பகுதிகளும்

3. பேரூராட்சி டிவிஷன்....சாந்தள்பாறை.
4. பேரூராட்சி.....தேவிகுளம்
5. மாவட்டபஞ்சாயத்து டிவிஷன்.....ராஜகுமாரி
6. தாலுகா.....உடுமன்சோலை
7. மாவட்டம்.....இடுக்கி
8. சட்டப்பேரவை தொகுதி....உடுமள்சோலை
9. பரப்பளவு.....78.71. ச.கி.மீ
10. மக்கள் தொகை.....13,889 (91 கணக்குப்படி)
11. மொத்த வார்டுகள்.....8 (எட்டு)
12. பஞ்சாயத்து தலைவரின் பெயர்.....சேனாபதி சசி
13. பஞ்சாயத்து துனைத்தலைவர் பெயர்....தமிழரசி சேகர்

பூப்பாறையைத் தலைமையிடமாக கொண்டுள்ள சின்னக்கானல் பஞ்சாயத்திலிருந்து 195 சாந்தன்பாறையை தலைமையிடமாகக்கொண்டு சாந்தன்பாறை பஞ்சாயத்து உருவாக்கப்பட்டது. மு (நாமினேட்) ஆட்சிக்குழுவின் தலைவர் திரு. சேதுராம் ஆவார். தொடர்ந்து 1963ல் நடைபெற்ற மு தேர்தலில் திரு. டி. இராஜாராம் பஞ்சாயத்து தலைவராக பொறுப்பேற்றார். 1979ல் நடைபெற்ற தேர்த திரு.ட. அழகர்சாமி பஞ்சாயத்து தலைவராகவும் 1988 திரு. ந. சாமித்துரை பஞ்சாயத்து தலைவராக உள்ள ஆட்சிக்குழுக்கள் பொறுப்பேற்றது. புதிய பஞ்சாயத்துராஜ் சட்டத்தின் அடிப்படையில் 199 செப்டம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் இப்போதுள்ள கிராமபஞ்சாயத்து ஆட்சிக்குழு பொருப்பே வந்தது.

சமூக கலாச்சார சரித்திரக் குறிப்புகள்

சென்னை மாகானத்தின் தென் மேற்கில் முக்கால் பகுதியும் அடர்ந்த காடுகளாகவும் கொடியமிருகங்களும் மட்டுமே வாழ்ந்த கேரள(இன்றைய அமைப்பின்) த்தின் கிழக்குப்பகுதியில் அமையப்பெற்ற வனப்பகுதி. கி.பி. 1700 ல் பாரதத்தின் வடக்கிலிருந்து சமஸ்க்ருதமும் தெற்கில் தமிழும் மூலமொழிகளாக கொண்டிருந்தது. நிலவிலிருந்து கோத்திரவர்க்கமுறை மாறி (சாதி) சம்பிரதாயம் வந்தது. சொந்தமாக இடம் கைவசம் வைத்திருக்கின்றவர்களுக்கும், விவசாயம் செய்பவர்களுக்கும், வணிகர்களுமே மேல் சாதியினர், மற்றவர்கள் தொழிலுக்கேற்ப சாதிமுறைகளை சொல்லிவைக்கப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து கிறிஸ்த்தவர்களும் முஸ்லீம்களும் வியாபாரம் செய்வதற்காக வந்துசென்றனர், எனவே அவர்களும் மேல்சாதியாகவே கருதப்பட்டது. இந்த காலத்தில் ஆங்கிலேய ஆதிக்கம் வேருன்றியது, ஆங்கிலேயர்களின் கொடுமைகளுக்கும் அதிக வரி அடைக்க முடியாததலும் உட்பட்டு அவர்களை எதிர்த்து போராட சக்தி இல்லாததினாலும், நகர வாழ்க்கை வெறுத்த சிற்றரசர்களும், ஜமீன்தார்களும், நாட்டாண்மைகளும் மேற்கூறிய பகுதிகளில் தங்களின் பாதுகாப்பிற்காகவும், உரிமைகளை என்றாவாது நிலைநாட்டவும் வேண்டி காடுகளில் கோட்டைகட்டியும், குகைகளிலும் வசிக்கநேரிட்டது.

இவர்களை தேடி காவலர்களும், வேட்டையாட்களும் வந்துசென்றுகொண்டிருந்தனர், வருகின்றகூட்டம் திரும்பிச்செல்கையில் இருக்காது, வேட்டையாடுகின்ற ஆளை தந்தம் புலித்தோல், எலும்பு, பல், கோரோசனை, மான்கொம்பு, காட்டுமாமிசங்கள் மற்றும் வனங்களில் கிடைக்கின்ற இதரப்பொருட்களின் மூடைகளை சுமற்று செல்கின்றவர்களை கத்தியுமாக காத்திருந்து கொன்றுவிட்டு பொருட்களை கடத்திச்செல்ல ஒருகொள்ளைக்கும்பலின் பார்வை படர்ந்திருந்த இக்காட்டுப்பகுதியின் ஒருமூலையில் உள்ள ஒருநடுப்பாறையில் பலனாகப் பாறைகள் பலகொண்டு வீடுபோன்ற அமைப்புக்கொண்டு அடுக்கிவைத்து அதனுள் சாந்தன் என்ற ஒருமுனிவர் தவமிருந்தும் முனீஸ்வரன் என்ற தெய்வத்தை வணங்கியும் வந்தார்.

இவர் குறைந்த ஆடைகளும், காதில் காடுக்கானும், பெருத்தமூக்கும், அகன்ற பாதங்களும், கையில் உடுக்கையும் கருமைநிறமும் கொண்ட துறவியைப் போன்றவராக இருந்தார் அம்முனிவர். இம்முனிவரே இக் கிராமத்தின் முதல்மனிதராவார். இவரது மரணத்திற்குப்பின் இவரது உடலை அவர் உபயோகித்த பொருட்களையும் சேர்த்தே பெரிய முதுமக்கள் தாழி என்ற குலுமையில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது. 1985-ல் டாங்கிமேடு பகுதியில் அடுக்குப்பாறை அமைந்த முனீஸ்வரன் கோயிலிற்கு மண் எடுக்கத்தோண்டிய போது இம்மண்குலுமை காணப்பட்டது.

இதனுள் மண்ணுடன் உடுக்கையின் அழியாத பகுதிகளும் மூன்றுகிராம் அளவுள்ள கடுக்காணும் சிறிய அளவான தங்கத்தகடும் இருந்தது. இம்மண் குலுமை இப்போதும் சாந்தன்பாறை முனீஸ்வரன் கோயிலில் காணப்படுகிறது. இன்றய சாந்தன்பாறை டவுன் பகுதிக்கும் டாங்கிமேடு பகுதிக்கும் இடையே உள்ள நீண்ட பாறையில் சாந்தன் என்ற முனிவர் வசித்து வந்ததினால் இக்கிராமம் "சாந்தன்பாறை" எனப்பெயர்பெற்றது என முதியவர்கள் கூறுகின்றனர். வழிப்போக்கர்களை கொள்ளையடித்து கொலைசெய்து வந்தவர்களில் அய்யர் தேவர் முக்கியமானவராக இருந்தார்.

அலையாமல் மனிதர்களை வேட்டையாடி உடல்களை கழுதைகுளத்தில் இட்டுவிடுவார். அதன்பின் கிடைத்த பொருட்களுடன் உடுமன்சோலைப்பகுதியில் மாடம் கட்டி வைத்தியம் செய்துவந்த ஒருவைத்தியரிடம் சென்று உணவுமற்றும் உறக்கம் போன்றவை நிகழ்த்தவும் செய்தார். அதோடு மதுமயக்கம் கொண்டு மங்கைகளையும் இவர்கள் இஷ்டத்திற்கு ஒய்வுமாடத்திற்கு கடத்திவந்து கண் முழிக்கவைத்தனர். இந்த நபரை பிடிக்க சென்னை மாகான (பிரவசியா) காவலதிகாரிகள் வந்து சென்றுள்ளனர். மார்த்தாண்ட வர்மாவை கண்டு அஞ்சி ஓடிய கோட்டயம் மகாராஜா வந்து வாழ்ந்த காட்டுப்பகுதியே ராஜாக்காடு என்றும், அவரது மக்கள் வாழ்ந்த இடம் ராஜகுமாரி என்றும், ராணுவத்தளபதி வாழ்ந்த இடம் சேனாபதி எனவும் கூறுகின்றனர்.

கோட்டயம் மகாராஜாவின் மகள் ராஜகுமாரி தினமும் பூக்களைப்பறிக்கவும் அப்பூக்களை பாறையிலிட்டு கட்டுவதற்கும் பயன்படுத்திய இடமே பூப்பாறை (பாலம்) எனவும் ஒரு ஐதீகம் உண்டு, மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்கள் சதுரங்கம் விளையாடியபாறையே இன்று சதுரங்கப்பாறை என அழைக்கப்படுவதாகவும் கூறுகின்றனர்.

ஆங்கிலேயர் 1877-ல் தேவிகுளத்தில் தேயிலை உற்பத்தி ஆரம்பித்தனர். பண்ணையார், பூப்பாறை போன்ற பகுதிகளிலும் தேயிலை விவசாயம் பரவியது. அந்த காலத்திலே ஏலம் விலை உயர்வான நறுமணப் பொருள் எனப்புறிந்து பேத்தொட்டி, தளம், கள்ளிப்பாறை, புத்தடி, சதுரங்கப்பாறை ஆகிய இடங்களிலிருந்து காட்டு ஏலக்காய்களைப் பறித்து கூடன்பாறையில் கொண்டுவந்து ஏழு நீர்த்தொட்டிகளிலிட்டு காய்களைக் கழுவி சுத்தம் செய்து சமமான பாறைகளில் கந்தகம் சேர்த்து உலர்த்தி எடுத்து விற்பனைக்கு தயார் செய்தனர். இந்த முறையை கந்தகக்காய் முறை என்று அழைத்தனர். இது போடிநாயக்கனூர், தேவாரம், கோம்பை, போன்ற இடங்களுக்கு விற்பனைக்கு கொடுத்தனுப்பினர். இங்குமக்கள் ஜீவிதம் மிகவும் குறைந்து இருந்தது. தேவாரம், கோம்பை, திருநெல்வேலி போன்ற இடங்களிலிருந்தும் வறுமையில் வாடுகின்ற மக்களை அழைத்துவந்து கங்காணிமார்களின் கமிஷன் நிபந்தனை அடிப்படையில் "போயிட்டு வருகிற" வேலையில் உட்படுத்தி ஏலம் விவசாயம் ஆரம்பித்தனர். ஏலக்காட்டு வேலைக்கு வருகிறவர்களுக்கு அன்று "போயிட்டு வருகிற வேலை" என்றே கூறிவந்தனர். காலையில் நெடுந்தூரம் நடந்து வந்து மாலை நேரங்களில் இருள் சூழ்ந்த பின்பே தங்கள் இருப்பிடம் சென்றடைவார்கள்.

ஏலக்காட்டு வேலைகளுக்கு 1925-26 ல் ஒரு நாளைக்கு மூன்று ஆட்களுக்கு ஒரு ரூபாய் கூலியாக இருந்தது. இந்தக் காலங்களில் கங்காணி முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. தினமும் போய்வருவது நாளடைவில் முடியாத கஷ்டமானதால் இங்கேயே தங்குவதற்கு தொடங்கினார்கள். பேத்தொட்டி, புத்தடி, கூடன்பாறை, ராஜாப்பாறை, கோரம்பாறை, போன்ற இடங்களில் (தமிழ் மொழி பேசுகின்றவர்களாகிய) தமிழர்கள் கூட்டு வாழ்க்கை ஆரம்பித்தனர்.

இன்றய பூப்பாறை-போடி மெட்டு சாலை 1963 மார்ச் 30 ல் திறக்கப்பட்டது. அது வரையிலும் தமிழ் நாட்டிற்கான போக்குவரத்தும், சுமைகளும், கழுதைகள் மூலம் கொண்டுவருவது 18- ஆம்படிமெட்டு, உச்சிலித்து, சாக்குலுத்துமெட்டு, குதிரப்பாஞ்சான்மெட்டு போன்ற வழி மார்க்கங்களில் கால் நடை மூலம் சென்றுவந்தனர். கூடன்பாறைக்கும் தேவாரம் எல்லைக்கும் இடையில் தொண்டைமான்கோட்டை ஒன்று உள்ளது. பதினெட்டாம்படிமெட்டின் இறக்கத்தில் 18 படிகள் கருங்கல் கொண்டு கட்டப்பட்டுள்ளது. இப்படிகள் தேவாரம் ஜமீன்தாரோ அல்லது சிற்றரசர் தொண்டைமானோ கட்டியிருக்கலாம் என கூறப்படுகிறது. கோடை வாசஸ்தலமாக கருதப்பட்டு இங்கு வந்து ஓய்வெடுக்க வேண்டி கட்டப்பட்ட இடமாகும் எனவும் கூறுகின்றனர். தற்போது 10 படிகளே காணப்படுகிறது. இம் மலைத்தொடரில் உயரம் கூடிய பகுதிகளில் இரண்டு பாறைகள் கதவு போன்று காணப்படுகிறது இப்பகுதி "கதவு கல் மேடு" என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் எங்கேயோ இழுக்க இழுக்க வந்துகொண்டே இருக்கும்படியான நீண்டசங்கிலித்தொடர் இருப்பதாகவும் கைவிடும்போது மீண்டும் பழைய நிலையில் முழுமையாக உட்செல்கின்றபடியும் இருப்பதாக முன்னோர்கள் கூறுகின்றனர். இதனை காணச்சென்ற குழுவினர் இச்சங்கிலியை காண முடியவில்லை.

நூறு ஆண்டுகளுக்கு முன்புள்ள ரெவின்யூ அறிக்கைகளின்படி திருவிதாம்கூரில் உட்பட்டுள்ள நிலங்களாக இருந்தது. காட்டுப்பகுதிகளான இப்பகுதியில் ஏலம்விவசாயம் ஆரம்பித்ததோடு ராஜஸ்தாளிலிருந்து பட்டா வழங்க தொடங்கினர். கொடிய மிருகங்களும், பல வகை வனப் பொருட்களும் இருந்தது. இப்பகுதியில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட அரசு ஸ்தாபனம் பாரஸ்ட் ரேஞ்சி ஆபீஸ் (வன இலாகா அலுவலகம்) நிறுவப்பட்டது. வனங்களிலுள்ள பல வகை பொருட்களையும் பழங்குடியினரை கொண்டு) சேகரித்து அரசருக்கு காணிக்கையாக்கினர். இதுவே முதல்பணியாகக் கொண்டிருந்தனர். காடுகளில் சொந்தமாக குடியேரியவர்களுக்கு எதிராக எல். சி. கேஸ் எடுத்து அன்றைய காட்டுவாசிகளே ஆவார்கள். விவசாயங்களுக்காக நிலப்பதிவுகளை ரேஞ்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. நூறு ஆண்டுகளுக்கு முன்பே பூப்பாறை பகுதி கச்சேரி சாந்தன்பாறையில் செயல்பட்டு வந்தது.

அரசு அனுமதியுடன் வனங்களில் நுழைந்தவர்களுக்கு கோட்டயம் பே.ஷ்க்கார் வழியாக அரசருக்கு அறிக்கை கொடுத்தனுப்பட்டது. செம்புத்தகட்டில் எழுதிய பட்டா வழங்கியும் வந்தது. எல்.சி.கேஸ் உள்ள நபர்களுக்கே அந்நிலம் பட்டா இட்டுத்தரப்பட்டது. 1929 ல் ஸ்ரீ மூலம் திருநாள் மகாராஜா தேவிகுளம் காணவந்தபோது பூப்பாறை பகுதி கச்சேரியை சாந்தான்பாறை வில்லேஜாக மாற்றவும் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு வில்லேஜின் பொருப்புக் கொடுக்கப் பட்டது. மன்னராட்சி காலத்திலேயே சாந்தான்பாறையில் ஒரு (ரூரல் டிஸ்பன்சரி) கிராமிய மருத்துவக் கூடம் இருந்தது. தேவிகுளத்திலிருந்து வாரத்தில் ஒருநாள் மருத்துவர் வந்து போவார். பெரும்பாலும் கம்பௌன்டரே சிகிச்சை அளித்து வந்தார் .

சாந்தன்பாறையில் தபால்அலுவலகம் அன்று அஞ்சல்நிலையம் என்றே பெயர்சூட்டப்பட்டது. இது நூறாண்டுகளாக செயல்பட்டு வந்துள்ளது. கோட்டயம் அஞ்சல் கோட்ட அதிகாரியின் கீழே இந்த நிலையம் இயங்கி வந்தது. சின்னக்கானல் அஞ்சல்நிலையத்திற்கு வருகின்ற தபால் உருப்படிகளை அஞ்லோட்டக்காரன் மூலம் சாந்தான்பாறைக்கு கொண்டு வருவதும், இங்குள்ளவற்றை சின்னக்கானலுக்கு கொண்டு செல்லப்பட்டது.

அஞ்சலோட்டக்காரனின் கையில் முத்திரை பதித்த மெயில் பைகள் எடுப்பதோடு பைனட்டில் மணி பொருத்திய பீட் கைப்பிடியும் எடுத்துவருவார். மணி ஒலித்து ஓடிவருகின்ற அஞ்சலோட்டக்காரனை கண்டவுடன் அனைவரும் வழிவிட்டு கொடுக்கவேண்டும். யாராவது வழிமறிக்கவோ கொள்ளையடிக்கவோ செய்தால் அவர்களை இப் பைனட் கொண்டு குத்திக்கொன்றாலும் இதற்கு விசாரனையோ கேலோ கிடையாது. 1930 ல் அஞ்சலோட்டக்காரருக்கு ஒரு மாதம் ஐந்து ரூபாய் முதல் ஒன்பது ரூபாய் வரையிலும் சம்பளமாக கொடுக்கப்பட்டது. 1929 ல் சாந்தான்பாறையில் வந்து அஞ்சலோட்டக்காரனாக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது 1000 ரூபாய் வரையிலும் ஓய்வூதியம் பெற்று வருசின்ற புத்தன் புரைக்கல் குஞ்சன் என்பவர் 88 வயதோடு இன்று இங்கு வாழ்ந்து வருகிறார்

காலநிலை:

ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன் கடுமையான குளிர் மற்றும் கடும் மழையும் பெய்து வந்தது. எட்டு மாதங்களுக்கு கூடுதலாக கோடைப்பனியும், சாரல்மழையும் பெய்ததினால் மனிதவாழ்க்கைக்கு சரியான வரைமுறையுடன் கூடிய வாழ்க்கைத் தரம் மேம்படவில்லை. நடுப்பகலிலும் சூரியமுகம் காணாமல் அன்று வாழ்ந்தவர்கள் பட்ட இன்னல்களை சொல்லில் கூற இயலாது. பெரும்பாலும் மஞ்சுமூடிய இப்பகுதி இருந்தது. படிப்படியாக இக்காலநிலையும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் குடிபுகுதல்:

1948- 50 ல் எழைவிவசாயிகளாகவும், அரசு ஊழியர்களாகவும் மிகவும் குறைவான விரல் எண்ணிக்கையிலடங்குபவர்களை மலையாளிகளாக இங்கு வாழ்ந்தனர் என்றால் பெரும்பாலும் தமிழர்களே விவசாயம் செய்யவும் முன்வந்தனர். செய்தி மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் முற்றிலும் இல்லாமலிருந்து செய்தித் தாள், வானொலி போன்றவையும் இல்லாமலிருந்தது. சுதந்திரப் போராட்டங்களில் இங்குள்ளவர்களுக்கு சரியான தொடர்புகொள்ளவும் செய்தி அறியவும் முடியாமல் போனது. தேச உணர்வுபற்றியும், மகாத்மா காந்தி பற்றியும் அறிந்திருந்தார்கள். மகாராஜாவின் பிறந்த நாளை விழாவாக கொண்டாடி இருந்தனர். சுதந்திர தினமான 1947 ஆகஸ்ட் 15 ல் 15 பேர் தப்புக்கொட்டிக்கொண்டு சாந்தன்பாறையில் உள்ள குறுக்குவழிகளில் எல்லாம் அறிவித்து இருந்தனர்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் உண்டான பற்றாக்குறையை போக்க அன்றைய உணவு மந்திரி மாண்புமிகு இக்கண்டவாரியார் அவர்களை சேர்மனாகக் கொண்டு ஒருசத்துணவு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் படி இப்போதுள்ள ஆனையிரங்கல் அனைக்கட்டுப் பகுதிகடுத்துள்ள நிலங்களை நெல்விளைவிக்க அனுமதி அளிக்கப்பட்டிருந்து. மூவாற்றுப்புழை, பெரும்பாவூர் கோதமங்கலம் ஆகிய இடங்களில் இருந்து வந்து நெல் விவசாயம் செய்திருந்தனர். காலநிலையும் எதிர்பார்ப்புகளும் ஆனைகளின் தொந்தரவுகளும், அனைக்கட்டு கட்டப்படுகிறது என்ற அறிவிப்புகளின் உட்பயமும் இந்த நெல் விவசாயம் நின்றுபோனது. அனேகமானோரும் தங்களின் சொந்த ஊர்களுக்கே திரும்பச்சென்றனர். சிலர் செம்மன்னார், ராஜகுமாரி, முள்ளன்தண்டு, சாந்தன்பாறை போன்ற பகுதிகளில் வாழத்தொடங்கினார்கள்.

திரு. பட்டம் தானுப்பிள்ளை திருக்கொச்சி முதலமைச்சராக இருந்தபோது தேவிகுளம், உடும்பன்சோலை, பீர்மேடு, தாலுக்காக்களில் குடியேற ஆர்வமுட்ட தீர்மானிக்கப்பட்டது. தேவிகுளம் கமிஷனராக இருந்த ச.ந. கிருஷ்ணப்பிள்ளை இதற்காக அனைத்து ஒத்துழைப்புகளும் கொடுக்க வன இலாக அதிகாரிகளுக்கு கட்டளையிட்டார். இதனால் மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் இங்கு வந்து குடியேற தொடங்கினர். காட்டிலும் மேட்டிலும் உள்ள போதை மற்றும் தேவையற்ற புல் பூண்டுகளை அகற்றி நெல், கப்பை, தைலப்புல் சேம்பு, சேனை போன்ற விவசாயம் செய்ய ஆரம்பித்தனர். மலேரியா, நிமோனியா, போன்ற நோய்கள் விவசாயிகளை மேலும் வலுவிலக்கச்செய்தது, தங்கள் வசித்த குடிசைகளைச்சுற்றி அகலுகள் வெட்டியும் உயர்ந்த மரக்கம்புகளினால் மாடங்கள் கட்டியும் வாழ்ந்து தங்களின் உயிர்களை பாதுகாத்தனர். கூட்டு வேலைகள் செய்தும் உள்ளதை பங்கிட்டும் எல்லாமதத்தினரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தனர். 1970-80 ல் ஏலம் குருமிளகு போன்ற விவசாயம் முதன்மை பெற்றது

1948 ல் பூப்பாறை பகுதியில் மக்கள் வசிக்கவில்லை என்றாலும் கிருஷ்ணன் என்பவர் ஒரு மாடக்கடை நடத்தி வந்தார். போக்குவரத்திற்காக குறுக்குவழிகள் வெட்டி அதனை இரண்டு அடி கூட்டி ஓரளவு ஜீப் வாகனம் போய் வரும் அளவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பூப்பாறை மேற்குப்பகுதியில் சாம் மத்யூவும் சாந்தன்பாறையில் இப்போதுள்ள யூனியன் வங்கி சந்திப்பில் குமரபிள்ளையும் பலசரக்குக்கடை மற்றும் தேனீர் கடையும் நடத்திவந்தனர். 1952 ல் காடுநிறைந்து கற்றாளை முளைத்த பாறை பகுதியில் திரு. M.K. அடிமை அவர்கள் கட்டிடம் கட்டி வியாபாரம் ஆரம்பித்தார்.

கொச்சிக்கு ஏலக்காய் கொண்டு செல்வதற்காக 1948 ல் சாந்தன்பாறை-வண்டன் மேடு சாலைப்பணி ஆரம்பித்தது என்றாலும் பணிகள் துரிதமாக்கவில்லை. சாந்தன்பாறையில் இந்த காலத்தில் அரசு வகை ஏலக்காய் குடோன் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. 1952 ல் திருக்கொச்சி முதல்வராக இருந்த திரு C. கேசவனின் தலைமையில் அன்றைய பொதுபணிதுறை அமைச்சர் திரு G. சந்திரசேகரபிள்ளை மேற்படி குரிய சாலையை போக்குவரத்திற்காக திறந்து கொடுத்தார். இதன் முன்பாகவே சாந்தன்பாறை சின்னக்கடவு பகுதில் ஒரு மரப்பாலமிட்டு அதில் போக்குவரத்து நடத்த அனுமதி தரப்பட்டிருந்தது. சைலஸ் என்பவரின் சொந்த பேருந்தாகிய கிங் பஸ் சின்னக் கானலிலிருந்து உடுமன்சோலைக்கும், சுவராஜ் பஸ் கோட்டயம் (குமுளி வழியாக) மூணார் செல்லவும் சர்வீஸ் நடத்தி வந்தது. நிலக்கரி எரியவைத்து அன்றைய பேருந்துகள் ஓட்டினார்கள்.

ஏலம் உலர்த்தல் மற்றும் ஏல விபரங்கள்

முன் காலங்களில் ஏலம் உலர்த்துவதற்கு ஸ்டோர்கள் ஏற்படுத்தவில்லை. பாறைகளிலிட்டு உலர்த்தி பக்குவப்படுத்தினர். பேத் தொட்டியில் நான்கு ஏக்கர் பரப்பளவு வருகின்ற பாறைப் பகுதிகளில் 5 முதல் 10 சென்ட் வரை உள்ள பாறைகளில் ஏலக்காய் உலர்த்தி எடுக்க பலருக்கும் குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. 1940ல் முதலாவது ஏலக்காய் உலர்த்தும் ஸ்டோர் வீரபத்திரன் செட்டியார் என்பவர் பேத்தொட்டியில் கட்டினார்.

தேவாரம், போடிநாயக்கனூர் போன்ற இடங்களை மையமாகக்கொண்டு ஏலமிடப்பட்டது. 1954 ல் C.V. போல், ராகவன்பிள்ளை ஆகியோர் தலைமையில் சாந்தன்பாறையில் முதல் ஏலத்தில் ராத்தலுக்கு 10 முதல் 12 ரூபாய் விலை கிடைத்தது. (1 ராத்தல் = 454 கிராம்) தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் கல்லார் சொசைட்டி ஏலம் நடத்தி வந்தது 1958 ல் V.N. சுருளிநாடார் & சகோதரர்கள் யூனைட்டேட் கார்டமம் ஆக்ஷன் சென்டர் என்ற பேரில் ஆரம்பித்தனர். 1959 ல் செல்லையா ஆக்ஷன் நடத்திய போதிலும் நிலை நிறுத்த முடியவில்லை. உடனே தென்னிந்திய ஏல விவசாய சங்கம் சாந்தன் பாறையில் ஒரு கிளை ஆரம்பித்து ஏலம் நடத்திவந்தது. ஏலக்காய் ஏல மையம் செயற்காலத்தில் நிலையான ஒரு விலை இருந்து வந்தது. 1987 ல் ஏல-மையம் தமிழ் நாடு சென்றதையடுத்து இங்கு நிலையான விலை நிர்ணயம் அஸ்த்தமித்தது.

பஞ்சாயத்து

1951-52 காலங்களில் இப்பகுதி பூப்பாறையை தலைமையிடமாகக்கொண்டு சின்னக்கானல் வில்லேஜ் யூனியனில் உட்பட்டிருந்தது. 1 ரூபாய் கரம் தீர்த்து கட்டும் ஒருவருக்கே வாக்களிக்க அனுமதி இருந்தது. பஞ்சாயத்து தலைவருக்கு 5 ரூபாய் கரம் கட்டி வருவது பழக்கமாக இருந்தது. 1958 ல் சாந்தன்பாறை பஞ்சாயத்து என பெயர் சூட்டப்பட்டு தலைமையிடமாக சாந்தன்பாறையையே ஆக்கப்பட்டது. ஆட்சிக்குழுவை (நாமிநேட் முன்மொழிவின்படி திரு. சேதுராம் அவர்கள் தலைவரானார் 1963 ல் நடந்த தேர்தலில் முதல்தலைவராக திரு. T. ராஜாராம் அவர்கள் பதவி வகித்தார்.

ஆராதனை ஆலயங்களும் இதர ஸதாபனங்களும்

நூறாண்டுகளுக்கு மேலுள்ள கணபதி கோவில் இப் பஞ்சாயத்தின் முதல் ஆராதனை ஆலயமாகும். 1959 ல் தொட்டிக்கானம் புனித ஜார்ஜ் யாக்கோபிட் தேவாலயமும், 1960 ல் சாந்தன்பாறை குழந்தை இயேசு தேவாலயமும் . (ரோமன் கத்தோலிக்கன்) நிறுவப்பட்டது. 1962 ல் வேல்முருகனின் முழு உருவச்சிலையோடு கூடிய கோவில் பூப்பாறை மேற்குப்பகுதியில் கட்டப்பட்டது. பின் 1966 ல் சிவன் கோயிலாக மாற்றப்பட்டது. 1963 ல் சாலை ஓர கணபதி கோயிலாக மாற்றப்பட்டது. 1963 ல் சாலை ஓர கணபதி கோயில் நிறுவப்பட்டது. 1970 ல் காளி கோயில் பூப்பாறையில் கட்டப்பட்டது. மேலும் இப்பஞ்சாயத்தில் புனித யாக்கோபு தேவாலயமும் (சலோம் குன்று) அன்வென்டிஸ்ட் தமிழ் தேவாலயமும் 1980 ல் இருந்து சேரியாரில் புனித யோவான் தேவாலயமும் பேத்தொட்டியில் ஒரு கருப்பசாமி மற்றும் பைரவசாமி கோயில்களும் உண்டு.

1961 ல் சாந்தன்பாறையில் முதலாவது அரசு ஆரம்பபாடசாலை 50 அடி நீளமுள்ள ஒரு செட்டில் ஆரம்பமானது. முதலில் 35 குழந்தைகள் சேர்ந்தனர் மதிய உணவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1964 ல் பூப்பாறை ஆரம்பப்பள்ளியும் 1976ல் தொட்டிக்கானத்தில் எம்.ஜி.எம் நடுநிலைப்பள்ளியும் ஆரம்பிக்கப்பட்டது .1970ல் சாந்தன்பாறை ஊரகக்கூட்டுறவு சங்கம் நிறுவப்பட்டது. அவ்வருடமே இப்பஞ்சாயத்தில் மின் வசதி கிடைத்தது. 1975ல் முன் காலங்களில் அவுட் போஸ்ட்டாக இருந்துவந்த காவல்துறை காவல் நிலையமாக உயர்ந்தது.

தொழில் மேகலை

தமிழ் நாட்டில் தேவாரம், போடிநாயக்கனூர் போன்ற இடங்களிலிருந்து போயி வருகின்ற வேலைக்கு கண்காணிகள் கூடுதலான ஆட்களை அழைத்து வருவார்கள். வந்த வேலையாட்களை லயங்களில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டது. குறைவான சம்பளம் பெற்றும் பல இன்னல்கள் கொடுமைகளுக்கு ஆளாகினர். பெண் தொழிலாளிகள் அனுதினம் பல தொல்லைகளுக்கும் ஆளாகினார்கள். வன விலங்குகளின் ஆக்கிரமிப்பிலும் சோகை நோய்களுக்கு சிகிச்சை அளிக்காமலும் கோடையிலும் பனியிலும் விடாத மழையிலும் நனைந்து பாடுபட்டு ஆயிரக்கனக்கான தொழிலாளிகளே இன்றைய விலைமதிப்புள்ள ஏலம் தேயிலை விவசாயத்தின் முதல் கண்மணிகள். தமிழ்நாட்டிலிருந்து சமூகமாகவும் பொருளாதார ரீதியிலும் கல்வியில் பின்தங்கிய நிலையிலும் இருந்த மக்களை முதலாளிகள் வேண்டுதல்படி கண்காணிகள் கமிஷன் அடிப்படையில் நிபந்தனை விதித்து வேலைக்கு அழைத்து வந்தனர்.

இவர்களுக்கு தொழில் நிரந்தரமோ தொழில் உரிமைகளோ இல்லை. அதோடு அன்று நிலவியிருந்த குறைந்த அளவு சம்பளம்கூட கொடுக்கப்படவில்லை. ஏலத்தோட்ட மேகலையில் 1968ல் பெண் தொழிலாளிகளுக்கு 14 அணாவும் ஆண்களுக்கு ஒன்றேகால் ரூபாயும் கூலியாக நிச்சயித்தபோதிலும் இப்பணம் ரொக்கமாக கிடைக்கவில்லை. ஒரு வாரம் முழுதும் வேலைசெய்கின்ற தொழிலாளிக்கு 5 படி சோளம் மற்றும் இரண்டு ரூபாயும் கிடைத்து வந்தது. ஆண்டுறுதியில் கணக்குதீர்க்கப்படுகிறது. எனக்கூறினாலும் ஒரு குடும்ப சோடிக்கு நூறோ நூற்றி ஐம்பது ரூபாயும் மனைவிக்கு ஒரு சேலையும் கொடுத்துவந்தனர் உனவிற்காக மட்டும் உழைக்கின்ற இம்மக்கள் சங்கங்களில் உணர்வு கிடைத்தது. 1968 - 69ல் ராஜாக்காடு 300 ஏக்கரில் தேவிகுளம் எஸ்டேட் எம்ப்ளாயீஸ் யூனியனின் செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. தேவிகுளம் தாலுகாவில் தோட்டம் தொழிலாளிகளின் மேன்மைக்காக செயல்பட 1968ல் மூணாரை மையமாக்கி மேற்படி யூனியனின் செயலர்களை ராஜாக்காட்டிலும் செயல்பட்டது.

இக்காலங்களில் புளியன் மலையை மையமாகக் கொண்டு மலநாடு பிளான்டேஷன் எம்ப்ளாயிஸ் யூனியன் செயலர்களும் உடுமன் சோலை-சாந்தன்பாறை மேகலைகளில் தொழிலாளிகளை ஒன்று சேர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டது. சாந்தன் பாறை ஏரியாவில் முதன் முதலாக 1972ல் தொழில் சங்கம் உருவானது. கோரம்பாறை சிதம்பரம் எஸ்டேட்டில் என்பது குறிப்பிடத்தக்கது. காலம் சென்ற தொழிற்சங்க செயலர் திரு. V. M. விக்கிரமன் என்பவரே இதற்கு தலைமை ஏற்று நடத்தினார். அதுமுதல் நடைபெற்று வந்த தொழிலாளிகளின் உரிமைகளும் அதன் போராட்டங்களும் வெற்றியின் காரணமாகவே இப்பகுதியில் தொழிலாளிகளுக்கு வேலைக்கும் கூலிக்கும் ஏற்படுத்திய ஒப்பந்தகளில் உண்டான முன்னேற்றம், இன்று இப்பகுதியில் CITU, INTUC, AITUC போன்ற யூனியன்கள் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

சாந்தன்பாறையின் சமூக கலாச்சார குறிப்புகளும் சரித்திர குறிப்புகளும் இத்துடன் நிறைவடைகிறது. விவசாயம், போது சுகாதாரம் கல்வி, போக்குவரத்து, போன்ற துறைகளில் நாம் கூடுதல் நன்மைகள் அனுபவிக்க முடிகிறது. அது நிலையாக பெறுவதற்கு இப்பஞ்சாயத்தில் மக்கள் அனுபவிக்கின்ற கஷ்டங்களில் தொழில் ரீதியான தொழிற்சாலை இல்லான்மை, விவசாயம் மற்றும் விளை பொருள் உற்பத்தி இல்லாமை சுகாதார, கல்வி துறைகளில் மேலும் அபிவிருத்திகள் செய்ய வேண்டி உள்ளது. வேலையில்லா திண்டாட்டம் தாண்டவமாடுகின்ற மாபெரும் சவாலை முறியடிக்க இன்னும் பல முக்கிய பணிகளை தாமாகவே ஏற்று செய்யவேண்டியுள்ளது. இனியாவது அதற்கு நாம் பாடு பட முயற்சிப்போம். (இது முற்றிலும் சரியானது என வாதாடவில்லை. பல முதிர்ந்தவர்களின் நினைவில் இருந்தும், பல குறிப் பேடுகளிலிருந்தும் சேகரித்த உண்மை வரலாராகும்.

நில வடிவமைப்பு

மேற்கு தொடர்ச்சி மலையில் ஆனைமுடிக்கு சுமார் 30 கி.மீ. தெற்காக அடி உயரத்தில் தமிழ்நாட்டுடன் சேர்ந்து கிடக்கின்ற பிரதேசம்தான் சாந்தன்பாறை பஞ்சாயத்து. நில வடிவமைப்பு பொதுவே மலைப்பிரதேசம் ஆகும். கிழக்கு போடிமெட்டு முதல் பதினெட்டாம்படிமெட்டு வரையிலும் நீண்டு கிடக்கின்ற மதிகெட்டான் மலையின் கொஞ்சம் பாகம் சேர்ந்ததும் அதன் தாழ்வரைகளும் அதோடு சேர்ந்து அமைந்த சிறு சிறு குன்றுகளும் அதன் சரிவுகளும் சேர்ந்ததுதான் இப்பஞ்சாயத்தின் நில வடிவமைப்பு. இப்பஞ்சாயத்தில் மிகவும் உயரம் கூடிய பாகம் 4700, அடி உயரமுள்ள கதவு கல்பாற மெட்டு என்று அறியப்படும் இடம் 4500, அடியில் கூடுதல் உயரமுள்ள பாகத்தில் அமைந்த இடங்களான போடிமெட்டு மற்றும் உச்சலூத்து அடங்கிய பாகங்களும், மிகவும் உயரம் குறைந்த பிரதேசங்களான தொட்டிக்கானம் மற்றும் சில இடங்கள் 4100, அடியில் அமைந்துள்ளது.

மதிகெட்டான் மலை, கள்ளிப்பாறை உச்சலூத்து போடிமெட்டு, சங்கரபாண்டியன் மெட்டு, ஆகிய பிரதேசங்கள் மிகவும் உயர்ந்தவையாகும். இத்தகைய உயர்ந்த மலைகளும் சிறு சிறு குன்றுகளும் சரிவுகளும் தாழ்வரைகளிலும் அடங்கியதாகும். இப்பிரதேசம் சம நிரப்பான பாகங்கள் மிகக் குறைவானதாகவே அமைந்துள்ளன. சரலி கலந்த சக்தி குறைந்த மண்ணும் பல அடுக்குப்பாறைகளும் சிறு குன்றிகளும் அதிகமாக காணப்படுகின்ற இப்பஞ்சாயத்தில் நிலங்கள் மிக குறைவே, குன்றுகளின் அடிபகுதியிலும் அங்கும் இங்குமாக இடங்கள் அமைந்துள்ளன. நெல் சாகுபடி செய்திருந்த தாழ்ந்த நிலங்களில் இன்று ஏலம், குருமிளகு, மற்றும் தானிய வகைகள் பயிரிடத் தொடங்கிவிட்டது. மரங்களை வெட்டி முரித்து மலைப்பகுதிகளையும் சரிவான பகுதிகளையும் வெட்டி நிரத்தி விவசாயம் செய்வதனால் பெருமளவில் மண் அரிப்பு ஏற்படுவதினால் மண்ணின் மேல் பகுதியிலுள்ள உரமண் வீணாகப் போகிறது.

சாரல் மண், புசிமராசிமண், கருப்புமண், களிமண், சிகப்புமண், ஆகியவை இப்பஞ்சாயத்தின் பகுதியில் காணப்படும் முக்கிய மண் வகைகள். (ஆக்ரோலிக்மாற்றிக் பகுதி -13, மலைப்பகுதி என்ற விவசாயப்பகுதியில் உட்ப்படுத்தப்பட்ட பகுதியாகும். மரங்கள் அதிகமாக உள்ள பகுதியில் மற்றும் தாழ்வான பகுதியிலும் ஏலம் பயிரிடப்படுகிறது. மறுபாகங்களில் முக்கியமாக குருமிளகு, காப்பி, தேயிலை, ஆகியன பயிரிடப்படுகின்றன. 1987 ம் ஆண்டு இப்பகுதியில் சிரிய அளவில் நிலநடுக்கம் ஏற்ப்பட்டது. பஞ்சாயத்தின் நிலப்பரப்பு 19696 ஏக்கர். இதில் 6596 ஏக்கர் ரெவின்யு புரம்போக்கு. 266 ஏக்கர் தரிசு பூமியாக உள்ளது.

தண்ணீர் கிடைக்கும் முறை

ஏல விவசாயம் செய்துள்ள மலைப்பகுதிகளில் தண்ணீர் கிடைப்பது மிக குறைவு. 7,8, மாதங்களில் மட்டும் இப்பகுதிகளில் தண்ணீர் கிடைக்கும், அருவிகளிலும் ஆறுகளிலும் கூடுதலும், ஜனவரி, பெப்ரவரி, மாதங்களில் வரண்டு போகும். சில தாழ்வான பகுதியில் மட்டும் எல்லா மாதங்களிலும் தண்ணீர் கிடைக்கும். மழை குறைவான ஆண்டுகளில் குடிதண்ணீர் கிடைப்பது கூட மிகக்கடினம். அப்படியுள்ள பகுதி இது. இப்பகுதியில் முக்கிய விளை பொருள் ஏலம், பாக்கு, ஆகிய நாணய வகைகளும் பாக்கியுள்ள இடங்களில் உணவு வகைகளும் பயிரிடப்படுகின்றன.

கால நிலை

கடல் மட்டத்திலிருந்து சுமார் 4300 அடி உயரத்தில் அமைந்துள்ள பகுதியானாலும் தமிழ் நாட்டில் இருந்து வீசும் வரட்சிக் காற்று மூலம் உண்டாகும் கால நிலயில் மாற்றங்கள் ஏற்படுவதுண்டு. கோடை காலங்களில் வானில் ஏற்ப்படும் கால நிலை சற்று வித்தியாசமாக அமைவதும் உண்டு.

கோடைகாலங்களில்மாநிலத்தில் சராசரி கால நிலை குறைவு. அதனால் கூடுதலும் குளிர்கால நிலை அனுபவப்படுகிறது. டிசம்பர் ஜனவரி மாத காலங்களில் கூடுதல் குளிர் அனுபவப்படுகிறது. குறிப்பாக பஞ்சாயத்தில் உள்ள ஆனையிரங்கல் டாமில் இருந்து தண்ணீர் திறந்து விடும் காலங்களில் குடியேற்ற கால கட்டங்களில் துடர்ச்சியான மழை பெய்தது. அன்று மழை காலம் தொடர்ந்து பெய்து கொண்டு இருந்தது. இருப்பினும் கடந்த சில வருடங்களாக வரட்சி நிலவுகிறது. பொதுவாக மழையின் தேவையை எதிர் நோக்கியுள்ள ஒரு பகுதியாகும் இது. பஞ்சாயத்தில் அனைத்து பாகத்திலும் பற்றாக் குறைவாகவே மழைகிடைக்கிறது.

கடந்த ஐந்து வருடத்தில் இப்பகுதியில் கிடைத்த சராசரி மழையின் அளவு 155 cm. மட்டுமே. 1991-92 கிடைத்தமழையின் அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆண்டு	1991-92	1992-93	1993-94	1994-95	1995-96
கிடைத்த மழை cm ன்	128-60	170-61	122-24	187-54	147-19

ஜில்லாவின் பொதுவான மழையின் அளவு 326-5 CM தான். 92-93 வரிடத்தில் ஜல்லாவில் கிடைத்த சராசரி மழையின் அளவு 257-3.CM. ஆக இருந்த பொழுது சாந்தன்பாறை பஞ்சாயத்தில் கிடைத்த மழையின் அளவு 170-61 CM.

இயற்கை செல்வங்கள்

குடியேற்ற காலத்தில் மிக முக்கியமான இயற்கை வளம் கொண்டு செழித்த பகுதியாக அது விளங்கியது. குடியேற்றமும் அதை தொடர்ந்துண்டான மரங்களை வெட்டியும் காடுகளை தெளித்ததின் காரணமாக இயற்கையான தனிம வளங்களை இழந்துவிட்டது ஒரு காலத்தில் ஆனை காட்டுஎருமை மிளாவு, மான், கரடி, காட்டுபன்றி, கூரன், கேழையாடு, குரங்கு, புலி, முள்ளன்பன்றி, சென்னாய், முதலிய கொடிய மிருகங்கள் வாழ்ந்த பகுதியாகும் ஆனால் இன்று இவைகளில் பல இனங்களும் அழிந்து விட்டன.

அது போல் மைனா, காடை, அன்னப்பறவை, கழுகு, காட்டுக்கோழி, ஆகிய பறவை, இனங்கள் இப்பகுதியில் காணமுடியும். விவசாய தொழில் சம்பந்தப்பட்டும் அதோடு மனிதனின் வேட்டை தொழிலாலும் பலவகை பறவைகளின் அழிவுக்கு காரணம். இப்பகுதியில் உள்ள ஏலதிட்டங்களில் அளவுக்கதிகமான செயற்கை உரங்கள் ஏற்படுதும் தீமைகளையும் சுற்றுபுற சூழ்நிலை கெடுதிகளையும் பாடதிட்டமாக கருத்தில் கொள்ளவும்.

மனித புள்ளியியல்

1991ல் லென்லெஸ் (கணக்கெடுப்பு) பிரகாரம் இப்பஞ்சாயத்தின் ஜனத்தொகை 13889, 7813 ஆண்களும் 6776 பெண்களும் இதில் ஆண்களை விட பெண்கள் குறைவு. பஞ்சாயத்தில் எழுத்தறிவு 53%. 1991ல் கணக்கெடுப்பு பிரகாரம் 4448 ஆண்களும் 2994 பெண்களும் எழுத்தறிவு உள்ளவர்களாக இருந்தனர். பஞசாயத்தின் ஜனபிரதிநிதிகள் 176ம் ஊராட்சி மன்றத்தில் 129-ம் சிறு தோட்ட உடமைகளும் விவசாய தொழிலாளர்களும், தோட்டம் தொழிலாளர்களும் அதிகம் உள்ளனர். தோட்டத்தொழிலாளர்களில் 70% பெண் தொழிலாளர்கள் தான் என்பது குறிப்பிட தக்கது. முழுக்க விவசாயத்தையே மூலதனமாக கொண்டுள்ள பகுதியாகும். இது விவசாயத்துறையின் உற்பத்தி குறைவும் உற்பத்தி செய்யும் பொருள்களின் விலை இறக்கமும் அதே போல் விவசாயத்திற்கும் தேவையான அனைத்து பொருட்களுக்கும் ஏற்பட்டிருக்கும் விலை ஏற்றமும் இப்பகுதியை மிக பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது. இதன் மூலம் இப்பகுதியில் தொழில் இல்லாமை ஏற்படுகிறது. தோட்டம் பகுதியில் வருடத்தில் எட்டுமாதமே வேலை செய்யும் தொழிலாளர்கள் சீஸன் முடிந்தால்வேலையில்லாதவர்கள் ஆகிவிடுகிறார்கள். ஆகவே இப்பஞ்சாயத்தில் உள்ளன முழுமையடைய பிரயோஜனப்படதக்க முறையில் செயல்பட்டால் நிச்சயமாக அறிவுப் பூர்வமான முன்னேற்பாடு அடைந்தே தீருவோம்.

விவசாயம்

விவசாய வரலாறு

1950-52 ஆண்டு கால கட்டங்களில் ஆரம்பித்த குடியேற்றம் முதல்ஏல விவசாயம் மட்டும் இருந்தது. இந்த பூகோள பகுதியில் நெல், கப்பை, இஞ்சி, புல், காய்கறிகள், முதலான விவசாயம் இருந்தது. மக்கள் தொகை பெருக்கத்தால் விவசாயம் முழுமையாகவும் குருமிளகு, தென்னை, கமுகு முதலானவைகள் விவசாயம் பெருக ஆரம்பமானது. மிளகு, ஏலத்தைப்போலவே மிக வேகமாக பரவும் ஆட்களின் வருமாத்திற்கான வழி ஒரு முக்கிய கட்டமாக தீர்மானிக்கவும் செய்தார்கள்.

மழையை மட்டும் நம்பி செய்கின்ற விவசாயம் இங்குமழை குறைவினால் ஓடை நீர்பாசனம், ஆற்று நீர் பாசனம் மூலம் அளவில் குறைந்த விவசாயம் செய்தல், உண்டாக்கக்கூடிய பொருளுக்கு சரியான விலை கிடைக்காமை ஆகியவற்றால் முன்காலத்தில் செய்த விவசாயம் மாறியது. மாறிக் கொண்டிருக்கிற புதிய தலைமுறைகளின் விவசாயம். இப்பிரதேசத்தில் விருப்பமின்னையும் இதற்கு காரணமாக கருதப்படுகிறது. இப்படி விருப்பமின்றி போன விவசாயங்களில் முக்கியமானது இஞ்சி புல், நெல் விவசாயம், கப்பை, முதலியனவாகும். 1950-60 ஆம் ஆண்டுகளில் 3000 ஏக்கருக்கு கீழேதான் நெல்விவசாயம் செய்கிறார்கள்.

விவசாய இனம்	1960 வரை AC	60-70 AC	70-80 AC	80-85 AC	85-90 AC	90-95 AC
தேயிலை	750	750	750	750	770	770
ஏலம்	3700	6000	6500	7000	9100	7500
நெல்	3000	2700	500	300	200	75
மிளகு		15	100	600	1000	1500
தைல்புல்	5000	3800	1300	640	125	20
கப்பை	3000	2700	1800	600	300	70
காப்பி	400	200	240	300	450	600
சோளம்	100	60	10			
கம்பு	20	10				
தினை	50	40	10			
தென்னை	5	30	100	200	230	250
கமுகு		5	10	20	25	30
வாழை	100	150	200	300	400	500
காய்கறிப்பயிர்	150	100	50	40	30	20
இனங்கள்						
கரும்பு	400	400	320	100	10	
சீனிக் கிழங்கு	50	40	25	5		
சேனை	100	150	190	260	300	360
சேம்பு	100	160		270	310	400
துவரை	150	130	120	50	15	10
		20	40	100	85	70
	100	160	250	300	250	200
	50	20	10			
	20	60	70	80	85	100
	20	40	50	60	70	90
	15	10	5	6	8	10
				1	2	3
		2	3	4	5	6

நிலப் பரப்பளவையும் நிலப்பட்டாதாரிகளையும் பிரம்போக்கு பூமியையும் குறித்துள்ள விரங்கள் தீழே பொடுக்கப்பட்டுள்ளது.

நிலப் பரப்பளவைப் பற்றிய விபரங்கள்

இனம்	பரப்பளவு
நிலம்	179 - 93 - 750
மனையிடம்	12704 - 62 - 589
புரம்போக்கு	6596 - 20 - 661
விவசாயம் செய்கிற இடம்	216 - 04 - -
விவசாயம் செய்யாத இடம்	----------
மொத்தம்	19696 - 81

	பட்டாதாரிகளின் எண்ணிக்கை						
NAME OF VILLAGE	1-10 CENT	10-25 CENT	25-50 CENT	50-100 CENT	1-2 CENT	2-5 CENT	ABOVE 5 ACRE
SANTHANPARA	320	150	200	300	757	341	217
POPPARA	375	103	100	231	774	821	474
TOTAL	695	253	300	531	1531	1162	691

	பரப்பளவு ஏக்கரில்					
NAME OF VILLAGE	சாலை	ஆறு	குளம்	வருவாய்	காடு	மொத்தம்
SANTHANPARA	80.00	44.98	4.00	2039.06	13.08	2181.65
POOPPRA	78.00	102.03	4.00	4180.61 661	50.00	4414.64 661
TOTAL	185.00	147.01	8.00	6219.67 661	63.08	6596.20 20.661

இன்றைய விவசாயம்

ஏலம், குருமுளகு, காப்பி, இஞ்சி, முதலியவை இங்குள்ள முப்பிய விவசாயங்க நெல், கப்பை, வாழை, சேம்பு, சேனை, மஞ்சள், பயர்வர்க்கங்கள் காய்கறிகள் முதல்யை உணவு விளைச்சல் மாமரம், பிலாமரம், தென்னை, பாக்குமரம் முதலயவை இருக்கிற இந்த பஞ்சாயத்தின் முக்கிய விவசாயத்தின் சுற்றளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயம்	சுற்றளவு (ஏ.இற்)
நெல்	30,000
பயர்	40,000
கப்பை	150,000
காய்கறிகள்	40,000
தென்னைமரம்	1,00,000
வாழை	50,000
குருமுளகு	65,00,000
காப்பி	2,40,00,000
ஏலம்	3,00,00,000
பிலாமரம்	50,000
மாமரம்	50,000
பாக்குமரம்	50,000

கூடுதல் விளைச்சல் தரக்கூடிய விதைகள் தேவைக்கு கிடைப்பதில்லை. இ பஞ்சாயத்தில் பிரச்சாரத்திலுள்ள முக்கிய விதைகளைப் பற்றியுள்ள விவரங்கள் கீ எழுதப்படுகிறது.

1) ஏலம், வள்க்கமைசூர், ஞர்லாணி, ஞாடன். கஆஇ
2) குருமுளகு, செங்கன்னூர், கரிமுண்டா, ஜீரகவள்ளி, பள்ளியூர்.
3) நெல், நாடன் இனங்கள்
4) தென்னை, பசை,ாலப வெஸட்டு, கோஸ்ட்டு நாடான் இனங்கள்.
5) பாக்குமரம், நாடன், கர்சர் கோடன், மங்களா.
6) கப்பை, அரிமனியன், பத்தினெட்டு ஏத்தை சிலொன்
7) வாழை, ஏத்தக்காய், ஞாலிபூவன், இங்கிலிஸ்பூவன், மோரீஸ், ரோபஸட்,பாளையங்கோடன்
8) காப்பி, காவேரி, செலக்ஷன், ரோபஸ்ட்டா
9) மாமரம், மூவாண்டன், கிளிசுண்டன், கோட்டமாவு, நாட்டுமாவு

3. சிக்குகள்

முக்கிய விவசாயமான குருமுளகை பாதிக்கும்நோய் தூதவாட்டம், சாவத தண்டுபுழு, வேர்புழு முதலியவையும் ஏலத்தை பாதிக்கும் மோசமான அழுகல், க நோய் வேர்புழு, கமறல், கூடம்படப்பு, தண்டுதுரப்பின் என்பவையாகிறது அல்லா வாழைக்கு உண்டாகும் கடம்பு அடைப்பு, கரிக்கு முதலான நோய்களும் தென் மரத்துக்கு உண்டாகும் மண்டயடப்பும், கொச்சன் செல்லியும் நெல் பயறுக்குண்டா தண்டுப்புழு, ஓலைசுருட்டிபுழு முதலானநோய்கள் விவசாய்கள் சந்திக்கும் பிரச்சை ஆகிறது.

4. உரம் பிரயோகம்

நல்ல உரசத்துண்டான இந்த மன்னில் முன்கால விவசாயிகள் எந்த உர போடவில்லை. அப்படியிருந்தும் நல்ல மகசூல் கிடைததிருந்தது. ஜனத்தொகை கூடிய காரனத்தினால் விவசாயத்திற்கு வேண்டியுள்ள பூமி உபயோகம் கூடுதலாகவும், ஆ விவசாயம் காரனமாக பூமியின் உரசத்து குறைந்துள்ளது அதன் காரணமாக அ சாதாரணமாக கிடைத்துக் கொண்டிருந்த தெருவசண்டி, மாட்டுச்சாணி முதலியவை உரம

உபயோகப்படுத்தப்பட்டது. ஆனால் காலாகாலங்களாக உண்டாகும் மண்ணரிப்பும் ஆரம்ப விவசாயம் காரணம் மண்ணின் உரசத்து கொஞ்சமாக குறைந்துள்ளது. அதனால் விவசாயிகள் ராசவனங்களையும் பூச்சிமருந்துகளையும் கூடுதலாக நம்பியுள்ளார்கள். விவசாயிகள் சைவஉரங்களை புறக்கணித்துவிட்டு செயற்கை உரங்களையும் பூச்சிமருந்துகளையும் கூடுதலாக நாடியுள்ளார்கள். செயற்கை உரம்உபயோகம் செய்வதால் மகசூல் தற்காலிகமாக கூடுதலாக காணப்படுகிறது. ஆனால் அவை பூமியின் குணத்தையும் மாற்றி மண்ணிலசத்தும் அழிக்கப்படுகிறது. செயற்கை உரம்இல்லாமல் விவசாயிகள் விவசாயம் செய்யமுன் வராதநிலைமைதான் இப்போதுள்ளது. முக்கியமாக ஏலம் குருமுளகு, இஞ்சி, நெல், முதலிய பயர்களுக்குதான் செயற்கை உரம் உபயோகப்படுத்தபடுகிறது. முக்கியமாக காட்டமம், மிக்சர் யூரியா, பாக்டம்போஸ், பொட்டாஷ், டி.ஏ.பி. மஷ்ரி, பாஸ்பேட், முதலிய உரங்கள் உபயோகப்படுத்தப்படுகிறது. சுமார் 800 டன் செயற்கை உரம் இங்கே உபயோகப்படுத்துவதாக காணப்படுகிறது.

உற்பத்தி

கடந்த காலகட்டங்களை பொருத்தவரை விவசாய உற்பத்தி குறைந்து கொண்டே வருகிறது. செயற்கை உரம் உபயோகிப்பதினால் உற்பத்தி தற்காலிகமாக கூடுதலாக கிடைத்தாலும் செயற்கை உரங்களுக்கு தேவையான பொருளாதார வெலவுகள் பார்த்தால் அவைகள் பொருத்தப்படாதவையாகும். மண்ணரிப்பு, காலநிலை, நீர்ப்பாசன வசதிகள் புதிய விதைகளின் தேவைகள் விவசாயத்திற்குண்டாகும் பலதரமான நோய்கள் பாதிக்கும் செயல் ஆகும்.

பஞ்சாயத்திலுள்ள பலவிதமான உற்பத்தியை காட்டும் ஒரு அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

விவசாய சுற்றளவும் உற்பத்தியும்

விவசாயம்	சுற்றளவு	ஆக்கஉற்பத்தி	உற்பத்தி HCT
நெல்	30,00,00	900 கிண்டல்	30 கிண்டல்
குருமுளகு	600,00,00	9600 கிண்டல்	16 கி
ஏலம்	3000,00,00	7500 கிண்டல்	2.5 கி
காப்பி	240,00,00	18 கிண்டல்	7.5 கி
பயர்	4-00,00	10 கிண்டல்	2.5 கி
காய்கறிகள்	4-00,00	20 கிண்டல்	5 கி
தென்னை	100,00,100	1500 எண்	15 எண்
வாழை	5-00,00	5 கி	10 கி
கப்பை	25,00,00	500	10
பிலாமரம்	5-00,00	50	10
மாமரம்	5-00,00	50	10
பாக்குமரம்	5-00,00	20	4

6. உற்பத்தி பொருட்களின் தரமும் விலையும்

அன்று நமது நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு சரியான விலை கிடைக்கும் சூழ் நிலையில்லை மட்டுமன்றி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சரியான முறையில் சேகரித்து வைக்கும் பண்டகசாலையும் இல்லை. சுமார் 9 வருடம் முன்பு வரை ஏலக்காய் வேலை-மையம் செயல்பட்டுவந்தது. தற்பொழுது ஒரு ஏலக்காய் விற்பனை மையம் இங்கு உண்டு. ஆனால் அது இன்று ஒருஉயிரற்ற மையமாக காட்ச்சி தறுகின்றது. மலை அடிவார விவசலாயத்தில் மிக முக்கியமான ஏலக்காய்க்கு நிலையான விலை இல்லை. வியாபாரிகள் குளிப்பாக நடுத்ரவாசிகள், விவசாயிகள் இவர்களிடமிருந்து முன்பணம் வாங்குகையும் தவனைமுறைக்கு உற்பத்தி பொருளை கொடுப்பதின் மூலம் விலை உருதிபடுத்துவது நடுத்தரவாசியான வியாபாரியாகும். இதைப்போல்தான் மிளகு, காப்பி, இஞ்சியின் நிலையும். கடந்த வருடம் ஏலக்காயின் விலை 150 முகல் 90 வரை தாழ்வாக காணப்பட்டது. முன் வருடங்களில் இதே நிலை வத்திருத்தது. இற்தவருடம் ஏலக்காயின் உற்பத்திபொதுவாக குறைவாகும். ஆகையால் சிலையில் உயர்வு ஏற்ப்பட்டுள்ளது. தற்போதைய விலையை பொருத்தவரையில் ஒரு கிலோவிற்கு 400 ரூபாய் வரையிலும் உயர்ந்துள்ளது. ஆனால் தற்போதைய விலை எப்பொழுது ஊறையும் என்பதை கூறமுடியாத சூழ்நிலையுள்ளது. விலையை நிவையையாக நிர்க்க செய்வதற்கோ, பாதுகாப்பதற்கோ எவ்விதமான தீர்மானமோ அரசங்கத்திடம் இல்லை.

7. கூலி நிர்ணயம்

தோட்டம் தொழிலாளர்களுக்கும் விவசாய தொழிலாளிகளுக்கும் ஞாயமான விலை தற்பொழுது உண்டு. விவசாய தொழிலாளிகளாகிய ஆண்களுக்கு 60 ரூபாயும், பெண்களுக்கும் 50 ரூ. வழங்கப்படுகிறது. தோட்டம் தொழிலாளர்களுக்கு (ஆண், பெண்) 52 ரூ.50 பை.. ஒருநாள் கூலியாக பெறுகின்றனர்.

8. தவனை சலுகைகள்

இந்த கிராம பஞ்சாயத்தை பொருத்தவரையில் பொருளாதார உதவி வழங்கும் மிக முக்கிய முகவைகள் ஜில்லா கூட்டுறவு வங்கி, ஊரக கூட்டுறவு வங்கி யூனியன் வங்கி போன்றவைகளாகும். விவசாயத்திற்கு ஏராளமான பொருளாதார தவனை முறைகள் இருந்து வருகின்றது என்றாலும் நிதி அமைச்சகங்களின் நடவடடிக்கைளும், அறிவிப்புகளும் கால தாமதமாக கிடைப்பதின் மூலம் விவசாய்களுக்கு எளிதில் கடன் கிடைப்பது இல்லை.

9. விவசாய அபிவிருத்தி செயல்கள்

விவசாய துறையின் உயர்வுக்கு வேண்டி அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள மிகவும் முக்கியமான மையமாகும் விவசாய மையம் ஒரு விவசாய அலுவலகம் மற்றும் மூன்று விவசாய உதவியாளர்களும் இன்றய மையத்தில் செயல்பட்டுவருகின்றனர். இவற்றின் செயல்கள் திருப்தியான ஒன்றுஅல்ல. விவசாய அலுவலர் இடம் பேரும்பாலும் காலியாக கிடைக்கின்றது. விவசாய-மையத்தின் கீழ் செயல்பட்டுவருகின்ற குழுக்கலாகிய சேகரிப்பு குழு, தென்னை அபிவிருத்தி குழு மிளகு பாதுகாப்பு குழு போன்றவையாகும். செயல்களில் போன்றஅளவில் கவனம் செலுத்துவது கிடையாது.

விவசாய உற்பத்தி விவசாய வகைகள் மண்ணின் இயற்கை, உற்பத்தி தரம், நீர்பாசன வசதிகள் விவசாய கருவிகள் ஆகியவற்றை குறித்து போதுமான அளவிலான விளக்கங்கள் விவசாய-மையங்களில் இருந்து சிடைப்பது கிடையாது. மண் ஆய்வு வசதிகள் கிடைப்பதில்லை. இந்த பஞ்சாயத்தில் விவசாய சூழ்நிலையை குறித்தோ மற்றும் செயல்களை குறித்தோ ஆதாரபூர்வமான விபரங்கள் விவசாய மையங்களில் இருந்து கிடைப்பது கிடையாது. அதைப்பற்றிய தகவல்களை முறையாக பாதுகாப்பதும் கிடையாது. விவசாய-மையங்களில் சேவைகளைப் பற்றியும் அவற்றின் செயல்களை பற்றியும் நாங்கள் அதிக அறிவுள்ளவர்கள் அல்ல. விவசாய மையங்களின் வழியாக விவசாய்களுக்கு கிடைக்ககூடிய சலுகைகள் எவைகள் என்றும் எப்பொழுதெல்லாம் என்பதைப்பற்றிய விபரங்கள் கிடைப்பது கிடையாது. விவ்சாய்-மையங்கள் வழி 8-ம் திட்ட காலத்தில் எங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள பொருளாதார சலுகைகளைப்பற்றிய ஏகதேச வடிவம் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

1992-93 மத்திய அரசாங்கத்தின் மிளகு மருவாழ்வு திட்டத்ததின் கீழ் சுமார் 200 ஹக்டர் நிலப்பரப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 92-93 ல் துவங்கி 94-95ல் ஹெக்டர்கு 3500/-ரூபா வைத்து 440 விவசய்களுக்கு 7,00,000 ரூபாய் வழங்கப்பட்டது. 93-94 ல் இரண்டாம் வருடத்தில் ஹெக்டர்க்கு 1600- வைத்து 3,20,000ரூபாயும் கிடைக்கப்பெற்றது.

93-94ல் மாநில திட்டபடி 75 ஹெக்டர் நிலத்தில் இந்த பஞ்சாயத்தில் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டது. 93-94 ல் துவங்கி 95-96 ல் இந்த திட்டம் முடிவுக்கு வரும். 1-ம் வருடம் ஒரு ஹக்டருக்கு 3500-ரூ படடி 450 விவசாயிகளுக்கு 2,62,500-ரூபாய் தள்ளுபடி கிடைத்தது. 94ச-95ல் இரண்டாம் வருடம் ஹக்டர் 1800-ரூ படி 97,500-ரூ உதவி கிடைக்கவும். 95-96ல் மூன்றாம்வருடம் ஹக்டர்க்கு 1500-ரூ படி 1,12,500-ரூ சலுகை கிடைத்தது. மிளகு மருவாழ்வுத் திட்டம் (Pepper re habilitation Scheme) படி மினகு செடிகளுக்கு ஏற்படுகின்ற நோயிலிருந்து விடுதலை பெற Cuso, coc Line (LdL) ஆகியவை 1500 விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இத்திட்டம் 96-97ல் முடிவுக்கு வரும். இந்த சலுகை வழங்கியது மிளகு பாதுகாப்பு குழுவின் வழியாகும்.

தேங்காய் அபிவிருத்தி குழுவை C.C.D.P. (Compenhensive Coconut Development Project) தொடர்ந்து தேங்கய் விவசாயிகளுக்காக 94-95, 95-96 வருடத்தில் நீர்பாசன வசதிகளுக்கு தேவையான கினர் வெட்டுவதற்கும் பம்பு-செட்டுகள் அமைப்பதற்காகவும் 79000-ரூ தள்ளுபடியாக கொடுக்கப்பட்டது. அதுவும் அல்லாமல் தென்னை விவசாயிகளுக்கு 150 சேர்கை வா சாக்குகள் வழங்கினர். இந்த சலுகைகள் கொடுத்தது இ.இ.ஈ.ட. ஆகும். இவை இன்று தொடர்ந்து கொண்டிருக்கின்றது. பஞ்சாயத்தில் நெல்விவசாய்கள் 25 ஹக்டர் நெல் விவசாயத்துக்கு வேண்டி வயல் சேகரிப்பு குழுவின் மேற்பார்வையில் இரண்டு வருடம் கொண்டு 12800-ரூ உற்பத்தி ஊக்க தொகை கொடுக்கப்பட்டுள்ளது. 8-ம் திட்ட காலத்தில் மிளகு தோட்டத்தில் தடுப்பு சுவர் வைப்பதற்கு 15 ஹக்டருக்கு 45 00-ரூ தள்ளபடியாக வழங்கப்பட்டது.

10. விவசாய குழுக்கள்

விவசாய மையங்களில் கீழ்செயல்படுகின்ற நிகழ்ச்சிகள் தென்னை அபிவிருத்தி குழு மிளகு செயல்குழு வயல் சேகரிப்புகுழு நெல் விவசாயிகளுக்கு ச்லுகைகள் வழங்குகின்றன. தென்னை அபிவிருத்திகுழு தென்னை விவசாயிகளுக்கு உரவாக்குகள் வழங்குகின்றது. மிளகு பாதுகாப்புகுழு மிளகுசெடியின் அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு தேவையான வளங்களும் வழங்கப்பட்டது. நெற்கழஞ்சிய சேகரிப்புக்குழுவிற்கு ட்ரில்லர் ஒரு மிதிஇயந்திரமும் கரிந்தர் ஆக்ரோ சர்வீஸ் சென்டர்க்கு ஒரு டிராக்டரும் உண்டு. இதை தொடர்ந்துள்ள புள்ளி விபரங்கள் விவசாய மையத்தில் அறிவிப்பதில்லை. நேரா நேரங்களில் இதன் புள்ளிவிபரங்கள் பொதுமக்கள் அறிவிப்பதில் கவனம் செலுத்துவதில்லை.

பிரச்சனைகள்

1. இந்த பகுதியில் போதுமான அளவில் நீர்பாசன வசதிகள் இல்லை.

2. கடந்த வருடங்களை ஒப்பிட்டு பார்த்தால் நெல் விவசாயம் லாபகரமாக இல்லாததினால் வயல் பிரதேசங்களை நிறப்பு செய்து வேற பணப்பயிர்களை விவசாயம் செய்வதின் மூலம் வயல் பகுதிகளின் பரப்பு மற்றும் விரிவு ஒவ்வொருநாளும் குறைந்து கொண்டிருக்கிறது.

3. மழை வெள்ளப் பெறுக்கின் மூலம் சேரியார்-கொட்டிகுளம் பூப்பாறை, பகுதியில் அமைந்துள்ள வயல் பகுதிகள் அழிந்து போகாமல் பாதுகாப்பதற்கான தடுப்பு சுவர்கள் இங்கு இல்லை.

4. காட்டு பன்றி, எலி, போன்றவற்றின் தொந்தரவின் மூலம் நெல் வயல்கள் அழிந்துகொண்டிருக்கின்றது.

5. மிக முக்கிய விவசாய பயிர்களாகிய ஏலம் மிளகு ஆகியவற்றை தாக்குகின்ற பயங்கர நோய்களின் காரணமாக மீண்டும் விவசாயம் செய்யும் விவசாயிகளின் மன நிலையை பாதிக்கின்றது. இந்த நோய்களையும் அனுக்களையும் பராமரிப்பதற்கு தேவையான அறியுரைகள் போதுமான அளவில் கிடைப்பது கிடையாது.

6. செயர்கை உரங்கள், பூச்சி கொள்ளிகள் இவற்றின் விலை மிகவும் உயர்வாக காணப்படுவதினால் சாதாரன ஒரு விவசாயிக்கு தாங்கிக்கொள்வது என்பது மிகவும் கடினம்.

7. உற்பத்தி பொருட்களுக்கு நேராநேரங்களில் போதுமான தரமான விலை கிடைப்பது கிடையாது. ஆகவே சதாரன விவசாயியை கடன்காரன் ஆக்கிவிடுகின்றது.

8. ஏலச் சந்தையில் நிலைகொள்கின்றது நிலையற்ற சந்தை காரணமாக சாதாரன விவசாயியை அதிக அளவவில் பாதிக்கிறது.

9. வருடாவருடங்களில் ஏற்படுகின்ற இயற்கை சீற்றத்தின் அழிவிற்கு தேவையான உதவி தொகை குறிப்பிட்ட நேரங்களில் கிடைக்கப்படுவதில்லை.

10. இந்த பஞ்சாயத்தில் ஒரு அரசாங்க அல்லத முறையான நாற்று உற்பத்தி நிலையம் இல்லை.

11. பஞ்சாயத்தளவில் போதுமான சந்தையில்லாத காரணத்தரால் விவசாயி அன்றாடம் உற்பத்தி செய்யும் விவசாய உற்பத்தி பொருட்களுக்கு போதுமான விலை கிடைப்பது கிடையாது.

12.. பிரயோஜனமான முறையில் செயல்படுகின்ற உற்பத்தி சேகறிப்புமையம்இ மற்றும் விற்பனை மையங்களோ இந்த பஞ்சாயத்தில் தற்பொழுது இல்லை.

13. பஞ்சாயத்தளவில் ஒரு பொருளாதார மையம் இல்லை.

14. வங்கிகளில் இருந்து தவனை முறையிலான உதவித்தொகைகள் பெற்றுக்கொள்ள காலதாமதம் ஏற்படுவதும் மற்ற தடங்கல் ஏற்படுவதும் விவசாயியை பாதிக்கின்றது.

15. மானியத்தோடு சேர்ந்த தவனைமுறையிலான உதவித் தொகை மிகவும்குறைவு

16. மண்ணைப் பற்றிய போதுமாம அறிவின்மையும் தொடர்ந்துசெலுத்துகின்ற உரமும் மண்ணையும் விவசாயத்தையும் பாதிக்கின்றது.

17. இயற்கை உரங்களின் பற்றாக்குறையின் காரணமாக தமிழ்நாடு பகுதியில் இன்று சத்து குறைந்த அதிக பயன் இல்லாததுமான சானான் இறக்குமதி செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

18. இயற்கை உரங்களின் உற்பத்திக்குத் தேவையான ஊக்குவிப்பு இல்லை.

19 விவசாய வேலைகளுக்கு தேவையான ஆட்களை நேரத்துக்கு கிடைப்பதில்லை. இ.க்காரணத்தினால் அருவடைமற்றும் பலன் எடுப்பு குறிப்பிட்ட நேரத்தில் நடப்பதில்லை.

20. விவசாயத்தில் தேவையான இயந்திரங்கள் பயன்படுத்தும் வசதிகள் மிகவும் குறைவு.

21. மண் அரிப்பை மடை செய்வதற்கு தேவையான வசதிகள் மிகவும் அரிது.

22. நல்ல தரமான விதைகள் கிடைப்பதில்லை.

23. இந்த பஞ்சாயத்தில் தற்பொழுது இருந்துவருகின்ற விவசாய அமைப்புகள் மக்கள் மத்தியில் பிரயோஜனமான முறையில் செயல்படுவதில்லை.

24. பூச்சி கொள்ளிகள் தெளிப்பதற்கு தேவையான தெளிப்பான்கள் (ஸ்ப்ரெயர்)இல்லை.

தீர்வுகள்

1. இந்த பஞ்சாயத்தில் சாதாரண காரணிகள் உபயோகித்து நீர்பாசனம் செய்யவும்.

2. நெல் விவசாயத்தை ஊக்குவிக்கவும்.

3. வெள்ளைப்பெருக்கில் இருந்து நெல் விதையைப் பாதுகாக்க போதுமான நடவடிக்கை செயல்படுத்தவும்.

4. விவசாய உற்பத்திகளின் நோய்களையும் பயிர்களை அழிக்கம் பூச்சிகளையும் உபயோகரமான முளையில் தடைசெய்வதற்கு தேவையான உர உபயோகத்தை குறித்து அறிவூட்டவும் அவற்றை பற்றிய ஒரு எழுச்சி விவசாயிகளிடையே உருவாக்கி எடுக்க வும்.

5. சேர்க்கை உரங்களும் பூச்சிகொள்ளிகளும் குறைற்த விலையில் மானியத்தோடு சேர்த்து கிடைக்கும்படி செய்யவும் பூச்சிகொள்ளிகள் தெளிப்பதற்குதேவையான தெளிப்பான்கள், பம்புகள் கிடைக்கும் வசதி செய்யவும்.

6. ஏலம் மிளகு ஆகிய பணப்பயிர்கள்கு தேரவையான நிர்ணயமான விலையை நிச்சயிக்கவும்.

7. ஏல சந்தையில் சுதந்திரமாக விலை நிர்னைக்கும் நிலை உறுவாக்கவும். கூட்டுறவு வழியாவோ உற்பத்தி சேகரிப்பு நடத்தி விவசாயியை உதவிசெய்யவும் . இடைநபரின் நெருக்கத்திலிருந்து விவசாயியை மீட்பு பெற உதவி செய்யவும்.

8. இயற்கை மாற்றத்தின் பலனால் ஏற்படுகின்ற அழிவிற்கு தேவையான உதவி தொகையை உடன் கொடுக்கவேண்டும்.

9. நல்ல உயர்ரக பயிர் இனங்களும் அதற்கான விதை உற்பத்தி மைங்களும் விவசாயமையமும் இப்பஞ்சாயத்தில் ஆரம்பிக்க வேண்டும்.

10. ஏலம் போன்ற பயிர் இனங்களை உற்பத்தி செய்கின்ற தேனீக்களை வளர்க்க இப்பஞ்சயத்தில் முக்கியமான திட்டத்தை உறிவாக்கி ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு தேனீ பெட்டியாவது கொடுக்கப்பட வேண்டும்.

11. பஞ்சாயத்து தலத்தில் பொருளாதார வளர்ச்சி மையம் வேண்டும்.

12. பலவித பொருளாதார கூட்டுறவு நிலையங்கள் மூலம் மானியத்தோடு கடன் விவசாயிகளுக்கு தரவேண்டும். இந்நிலையங்கள் மூலம் கடன்களுக்காக காலதாமதம் செய்தல் தொழில்நுட்ப தடங்கல்கள் அதிக செலவுகள் தவிற்கப்பட வேண்டும்.

13. விவசாய அலுவலகத்தோடு ஒரு மண் பரிசோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

14. இயற்கை உரத்தேவைகட்கு கம்போஸ்ட் உரஉற்பத்தி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

15. சரிவு நிலப்பரப்பில் கல் கட்டவும் நிதிதிரட்டி மண்அரிப்பை தடை செய்ய வேண்டும். பகுதிகளாகப்பிரித்து மானியம் கொடுத்து உதவ வேண்டும்.

16. விவசாய அலுவலகத்தில் விவசாய அதிகாரி நிரந்தரமாக சேவை செய்யவும் செயல்பாடுகள் விரிவுபடுத்த வேண்டும்.

17. விவசாயிகளுக்கு உதவ பாதுகாப்பு மையங்களும் வங்கி வசதியும் செய்து தர வேண்டும்

18. பஞ்சாயத்து அளவில் ஒரு பொது சந்தை ஏற்படுத்த வேண்டும்.

19. எல்லா விவசாயிகளுக்கும் உற்பத்தியான பயிர்களுக்கும் காப்பீடு உண்டாக்கப் படவேண்டும்.

20. எல்லா விவசாயிகளுக்கும் பதிவு அட்டை வழங்கப்பட வேண்டும்

21. காய் கறி, பழ வர்க்கங்கள், பூச்செடிகள், விவசாயம் கூடுதலாக பயிரிடவும் பஞ்சாயத்து சார்பில் காய்கறி விதைகள் கொடுக்கவும் எல்லா வார்டுகளிலும் 10 பெண்கள் அடங்கிய5 அணிகள் ஏற்படுத்தி செயல்பாடுகள் துரிதப்படுத்த வேண்டும்.

22. கூட்டுறவு மையங்கள் சார்பிலோ அரசு ஏஜண்ட்டுகள் சார்பிலோ, சேகரிப்பு நிலையங்கள் நடத்தி புரோக்கர்களை மாற்ற வேண்டும் தற்போது செயல்பாடு இழந்து போய்கொண்டிருக்கின்ற கார்டமம் மார்கட்டிங் சொசைட்டி நன்றாக செயல்பட தேவையானவை செய்ய வேண்டும்.

சிறு நீர்பாசன திட்டம்

குடியேற்ற காலங்கள் முதல் இங்கு, விவசாயிகள் மழையின் உதவியுடன் செய்யகூடிய விவசாயங்களையே தொடர்ந்து செய்து வருகதின்றனர். அவ்வப்போது நடைபெறுகின்றதான இயற்கையின் மாற்றங்கலான, வெள்ளபெறுக்கு வரட்ச்சி இவற்றின் மூலம் ஒவ்வொரு நாளும் விவசாயம் கீழ்மட்டத்தை நோக்கி செல்கிறது. குறிப்பாக இந்த கிராமபஞ்சாயத்து முற்றிலும் விவசாய மண்டலம் ஆகும். ஆகவே விசவசாய வளர்ச்சிக்கு தேவையான நீர்பாசன வசதிகள் உறுவாக்குவது மிகவும் இன்றியமையா ஒன்று. தற்போதைய நீர்பாசனம பற்றாக்குறையாக காணப்படுகின்றது. அதிகளவில் நதிகளும் அருவிகளும் உள்ளதினால் நீர்பாசனம் அமைப்பது மிகவும் எளிது. ஏலம் மிலடு போன்ற வாசனை கிரவியங்களின் உற்பத்திக்கும் நெல் மற்றும் இந்த கிராம பஞ்சாயத்தின் குடிநீர் பற்றாக்குறையை போக்கவும் சிறு நீர்பாசன திட்டம் தேவை.

பஞ்சாயத்திந் சுற்றுப்புறங்களில் ஏல விவசாயத்துக்கு உதவுகின்ற முறையில் நிர்பாசன-துறை ஒன்பது குளம். மூன்று சிறு நீர்த்தேக்கங்களும் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றின் உதவியிடன் சுமார் 127.24.82 ஹெக்டர் நிலப்பரப்பு நீர்பாசன உதவியைப் பெற்றுவருகின்றது. இந்த திட்டத்தின் விபரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

பகுதி/வார்டு	குளம்	தடாகங்கள்	நீர்பாசனம் பயன்படும் இடம்- ஹெக்டர்
I	1	1	14 . 48 . 09
II	3	-	28 . 71 . 80
III	1	1	26 . 37 . 80
IV	3	-	-
V	-	-	-
VI	-	-	9 . 11 . 74
VII	-	1	-
VIII	1	-	16 . 40 . 48

மேலும் வாசனை பொருட்கள் வாரியம், விவசாய மன்றம் போன்ற சங்கங்கள் வழியாக குளங்கள், கிணறுகள், சிறுதடாகங்கள், அமைக்க தள்ளுபடி சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் சுமார் 4063 ஹெக்டர் விவசாய இடங்களில் 10% நிலங்கள் நிர்பாசன வசதிகள் பெறப்பட்டுள்ளது. முடிந்த நிதியாண்டில் கிராம பஞ்சாயத்தில கோரம்பாறை என்ற இடத்தில் ஒரு தடாகம் அமைக்க 21-இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இவை அமுலுக்கு வந்தால் பஞ்சாயத்தில் III, IV, V, VI வார்டுகளில் நீர்பாசனம் குடிநீர்வசதிகள் பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு.

ஆறுகள்

இங்கு ஒடுகின்ற நதிகளில் புத்தடி ஆறு, ராஜாப்பாடி ஆறு, கோச்சடைகள்ளி பாறைஆறு, பன்னையார்ஆறு, சேரியார்ஆறு, சங்கப்பன்பாறைஆறு போன்றவையாகும். இவற்றில் மிகவும் முக்கியமானவை பஞ்சாயத்தில் இதயப்பகுதியில் பாய்ந்து கொண்டிருக்கின்ற பன்னையார் ஆறு. இந்த நதியில் இருந்து மேல்நோக்கி நீர்பாசனம் நடைமுறைப்படுத்த சட்ட-தடங்கல்கள் மாற்றியமைதிதால் போதுமானது.

பிரச்சினைகள்

1. மழையை மாத்திரம் எதிர்நோக்கி விவசாயம் செல்லவேண்டியுள்ளது.
2. மரங்களும் சரிவுகளும் சேர்ந்த பள்ளத்தாக்குகள் நிறைந்த இங்கு விவசாயம் செய்யும் போது பூமியின் மேல்மண் அரித்து செல்லப்படுகிறது.
3. சேரியார், தொட்டிக்கானம் பூப்பாறை முள்ளன்தண்டு போன்ற இடங்களில் உள்ள நெல்வயல்களுக்கு போதுமான பாதுகாப்பு கிடைக்காத காரணத்தால் இங்குள்ள விவசாயங்கள் அழிந்து கொண்டிருக்கின்றது.
4. விவசாய நிலங்களில் குளம் வெட்டுவதற்கும் பம்பு-செட்டுகள் அமைக்கவும் ஒதுக்கப்பட்டுள்ள பொருளாதார உதவி கிடைப்பது கிடையாது.
5. நீர்பாசனத்திற்கு தேவையான மின்இனைப்புகள் சரியான நேரத்தில் கிடைப்பதுகிடையாது.
6. கடந்த திட்டகாலத்தில் இலட்சங்கள் செலவு செய்து தொடட்டிக்கானம் நீர்பாசன் திட்டமானது இன்று வரையிலும் நிறைவுபெறாமல் காணப்படுகின்றது.

பரிகாரங்கள்

1. சேரியார், குத்தடிஆறு, மணிஸ்டோர், பத்தேக்கர், நன்டாறு, ராஜாப்பாறை, கோச்சடைக்கள்ளிப்பாறை, மூலத்துரை, சாந்தன்பாறைஆறு போன்றவற்றில் இடைக்கட்டுகளும், நீர்த்தேக்கங்களும், அமைப்பதன் மூலம் நீர்பாசனவசதிகள் ஏற்படுத்தலாம்.
2. புத்தடி தோட்டில் பம்பு செட்டுகள் அமைக்கவும்.
3. தேயிலை சரிவுப்பகுதியில் உள்ள குளம் செம்மைசெய்யவும் பத்தேக்கர் செம்பாலத்தோட்டம், சாந்தன்பாறை, தொட்டிக்கானம் ஆகிய இடங்களில் குளங்கள் அமைக்கவும்.
4. இளையக்காடு-தொட்டிக்கானம் நீர்பாசன திட்டங்கள் அதிவேகத்தில் அமுலுக்கு கொண்டு வரவும்.
5. சேரியார் ஆற்றில் தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள தடாகத்தில் இருந்து கால்வாய் அமைக்கவும்.
6. கடந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த கோரம்பாறை நீர்பாசன திட்டம் நடைமுறைப்படுத்தவும்.
7. விவசாய இடங்களில் அமைந்துள்ள ஆறுகள் அருவிகளுக்கு தேவையான பாதுகாப்பு சுவர்கள் அமைக்கவும்.
8. மலைகளும் சரிவுகள் சோர்ந்த பள்ளத்தாக்குகள் நிறைந்த விவசாய இடங்களில் போதுமான தண்ணீர் தொட்டிகள் அமைக்கவும்.
9. விவசாய்களுக்கு கினர், குளம், சிறு தடாகம் போன்றவை உறுவாக்குவதற்கும், பம்பு-செட்டுகள் அமைக்க தேவையான பொருளாதார வசதிகள் அதிகப்படுத்தவும்.
10. விவசாயத்திற்கு தேவையான மின்சாரம் இலவசமாகக் கிடைக்கவும் தேவையான மின் இனைப்புகள் வழங்குவதில் உள்ள காலதாமதம் தவிற்கவும்.
11. விவசாய பூமி வரம்புகளாய் பிரித்து தடுப்பு சுவர்கள் கட்டுவதற்கான பொருளாதார வசதிகள் இலவசமாய் கிடைக்க செய்யவும்.
12. பண்ணையார் நதியில் இருந்து மேல்நோக்கி நீர்பாசன திட்டம் நடைமுறைப்படுத்தவும்.
13. ஜில்லா-நீர்பாசன வாரியத்திலிறுந்துள்ள பொருளாதார வசதிகள் அதிகப்படுத்தவும்.
14. கானல் முகப்பு , முத்துப்பாறை போன்ற இடங்களில் மாதிரி அணைகள்(நீர்த்தேங்க செக்டேம்) நிறுவவேண்டும்.

விலங்கினப் பாதுகாப்பு

பஞ்சாயத்தில் உட்பட்ட வருமான மார்க்கங்களில் முக்கியமான இடத்தை வகிப்பது விலங்கினப் பாதுகாப்புத் துறை. இந்தத் துறையில் எல்லா நேரங்களிலும் வேலை செய்யக்கூடிய ஆட்களின் எண்ணிக்கை குறைவாகும். இதை ஒரு உப தொழிலாக கூடுதல் பேர் கடைபிடித்து வருகிறார்கள். இத்துறையில் முன்னேறுவதற்கு முடியாமல் இருப்பதால் பல கார ணங்கள் உண்டு. வறுமைக் கோட்டிற்கு கீழே வாழக்கூடிய மக்களாக இருப்பதால் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மேம்பாட்டுத் திட்டத்திற்குத் தேவையான இப்பிரதேசத்தினுடைய மக்களின் பங்கு முக்கியமானதாகும்.

பசு, ஆடு, எருமை, போன்ற மிருகங்கள் இந்த பஞ்சாயத்தில், பல பிரதேசங்களில் வளர்த்திவருகிறார்கள். ஆனால் இதில் உற்பத்தியாக்கம் மிகவும் குறைவாகும். நல்ல இனம், ஆடு, மாடுகளை வாங்குவதற்குள்ள பொருளாதாரக் குறைவு ம் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களின் உற்பத்தி சவுகரியக்குறையும். அதுபோல வன விலங்கின துறையிலிருந்து தேவையான அறிவுரைகள் கிடைக்காமையாலும் இந்தத் துறையில் அதிகப்படியான ஆட்கள் ஒத்துழைப்பு தராமைக்கு கார ணம்.

இந்த பகுதியினுடைய சூழ்நிலையை புரிந்து ஆட்களை விவரமுள்ளவர்களாக ஆக்குவதற்கு வேண்டி ஒவ்வொரு வீட்டிலும் பாலுற்பத்தி செய்வதற்கு வேண்டி தேவையான நல்ல இனம் பசு, ஆடு, எருமை போன்ற வளர்ப்பு மிருகங்கள், வளர்ப்பதற்கு வேண்டி ஒத்துழைப்பும், பொருளாதார உதவியும் திட்டங்கள் தீட்டி செய்து கொடுத்தால் இவ்வகை மிருகங் களை வளர்த்துவதன் மூலம் குடும்பத்தினுடைய வருமானம் அதிகரிக்கும்.

பாலும் பாலுற்பத்தியும், ஆரோக்கிய வளர்ச்சிக்கு உதவும். விவசாயத்திற்கு தேவையான இயற்கை உரமான சாண ம் 2 பசுக்களுடைய சாணம் உபயோகித்து ஒரு வீட்டில் ஒரு எரிவாயு உண்டாக்க முடியும். இதுபோல கோழி வளர்த்தல், பன்றி வளர்த்தல் ஆகியவையும் முயற்சி செய்யக்கூடிய செயல்பாடாகும்.

இத்திட்டத்தின் காலத்தில் திட்டம் தீட்டி நடைமுறைப்படுத்தினால் இப்பஞ்சாயத்திலிருக்கக்கூடிய மக்களின் வாழ் க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எந்த விதமான சந்தேகமும் இல்லை. இப்பஞ்சாயத்து பிரதேசத்திலுள்ள மிருகங்களில் சாதாரணமாக ஏற்படக்கூடிய வியாதிகளில் முன்எதிர்பாராத நோய்கள், அக்குரு வீக்கம், உடல் சம்பந்தப்பட்ட நோய்கள், தொற்று நோய்கள் போன்ற நோய்களுக்கு கடந்த ஒரு ஆண்டு காலமாக சாந்தன்பாறையில் மிருகாஸ்பத்திரியிலிருந்து பல விதமான நோய்களுக்கு சிகிட்சை அளிக்கப்பட்டுள்ள மிருகங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	வியாதிகள்	பசு	எருமை	ஆடு	பன்றி	
1.	உடல் சம்பந்தப்பட்ட வகைகள்	30	-6-	-3-	-2-	
2.	நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள்	-4-	-1-	-	-	
3.	தொற்று நோய்கள்	10	-2-	-	-2-	
4.	சத்தணுக்கள் குறைவின் மூலம் உண்டானது	11	-4-	-3-	-2-	
5.	பரந்த நோய்கள்	90	40	15	10	
6.	வந்தியது	-6-	-2-	-	-	
7.	அக்கிட்டு வரிக்கும்	-5-	-2-	-1-	-	
8.	முடக்காய்ச்சல்	-7-	-2-	-	-	
9.	பரவும் நோய்கள்	-	-	-	-	

பிரச்சனைகள்:

1. இந்தப்பிரதேசத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து எழுர்ச்சி ஊட்டக்கூடிய செயல்பாட்டின் பற்றாக்குறை.
2. உயர்தர சங்கர வகை பசு, ஆடு, எருமை போன்ற மிருகங்கள் குறைவாகும்.
3. மேய்ச்சல் இடங்கள், தேவையான அளவு இல்லை.
4. புல் விவசாயம் சில இடங்களில் மட்டும் உள்ளது.
5. திறமை மிக்க கால்நடை மருத்துவர்கள் இந்தப் பகுதிக்கு வருவதற்கு தயாராகுவதில்லை.
6. வைக்கோல், தவிடு, முதலிய பொருட்கள் உண்டாக்குவதற்கு தேவையான நெல் விவசாயம் குறைவாகும்.

7. பால் சேகரிக்கக்கூடிய நிலையங்களில் கவனக்குறைவு.
8. மிருகாஸ்பத்திரியின் இனப்பெருக்கநிலையமும் காட்டுகின்ற அஜாக்கிரதை.
9. மாட்டுத்தீவனத்தினுடைய விலை உயர்வு.
10. வணிகக் கடன்கள் வங்கிகளிலிருந்து கடனுதவி கொடுப்பதற்கு முடியாமை.
11. தேவையான அளவு அறுவை நிலையங்களும் மாமிசக் குளிர்பதனிடும் வசதி இங்கு இல்லை.
12. இனப்பெருக்க நிலையம் காட்டுகின்ற அஜாக்கிரதை.

வாய்ப்புக்கள்:

1. பாலுற்பத்தி, கோழி வளர்த்தல் பன்றி வளர்த்தல் ஆகியவையின் முக்கியத்துவைத்தைக் குறித்து அதனுடைய வளர்ச்சியை குறத்தும் மக்களை எழுச்சி ஊட்டக்கூடிய செயல்பாடுகளை செய்ய வேண்டும்.
2. உயர்தர சங்கர வகை, பசுக்களையும் வாங்குவதற்கு பொருளாதார உதவி வழங்கவும்.
3. மாட்டுப்புல் விவசாயத்திற்கு தள்ளுபடி கொடுத்து உதவ வேண்டும்.
4. சாந்தன் பாறையில் இருக்கின்ற மிருகாஸ்பத்திரியில் மருத்துவரும் இதர ஆட்களையும் நியமிக்க வேண்டும். எல்லா வார்டுகளிலும் கால்நடை துணை பராமரிப்புமனைகள் ஆரம்பிக்கவும்
5. ஒரு சிறிய மாட்டுத்தீவன தொழிற்சாலை பொதுவான பிரதேசத்தில் தொடங்கவும்
6. கால்நடைக் கண்காட்சியும், கருத்தரங்கும் ஏற்படுத்த வேண்டும்.
7. பாலுற்பத்தியாளர்களுக்கு ஒரு நிகழ்ச்சிகள் நடத்தி காட்டவும் சத்துள்ள பொருட்களும் வைட்டமின் அடங்கிய பொருட்களும் வழங்க வேண்டும்.
8. மாட்டுத் தொழுவம் கட்டுவதற்கு பொருளாதார உதவி செய்ய வேண்டும்.
9. கோழி வளர்த்தல்,பன்றி வளர்த்தல் ஆகியவைகளுக்குத் தேவையான பொருளாதாரக் கடன்கள் வழங்கவும், மானிய விலையில் குட்டிகளை வழங்க வேண்டும்.
10. பூப்பாறையில் ஒரு மாட்டுச்சந்தை தொடங்கவும்.
11. சாந்தன் பாறையில், ஒரு பால் வளமையம் தொடங்கவும்.
12. பாலுற்பத்தி விவசாயிகளுக்கு எரிவாயு அமைப்பதற்கு தேவையான உற்சாகமும் பொருளுதவியும் தரவேண்டும்.
13. வியாதிகளுக்குத் தேவையான ஊசிமருந்துகள் அதிகரிக்கவும்
14. பால் வினியோக வசதி எல்லா வார்டுகளிலும் செய்து கொடுக்கவும்.
15. இப்பஞ்சாயத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை ஆரம்பிக்கவேண்டும்.
16. இப்பஞ்சாயத்தில் KLD & MM வாரியத்தின் கிளை நிறுவ வேண்டும்.

மீன்வளர்ப்பும், பிடித்தலும்

உள் பிரதேச பகுதிகளில் மீன் வளர்ப்பு உற்பத்திக்கான மிகவும் நல்ல வசதிகள் இந்த பஞ்சாயத்தில் உள்ளது; இந்த பஞ்சாயத்தில் VII, VIII வார்டுகளிலும், சின்னக்கானல் கிராம பஞ்சாத்தில் பரந்து கிடக்கின்ற மிகவும் விரிவான ஆணையி ரங்கல் டாம் மீன் வளர்ப்பிற்கு ஏற்றதாகும்; இப்போது முறையான மீன்வளர்ப்பு இந்த டாமில் நடைபெறுவதில்லை என்றா லும், அதிகப்படியான மீன் பிடித்தல் நடைபெறுகிறது. KSEB சில நிபந்தனைகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டு ம் தனி நபர்களுக்கு ஏலம் விடப்படும் நிலை பதிவான செயலாகும், கோல்டு பிஷ் என்ற இனமுள்ள வகை மீன் அதிகமுள் ளது. ஒரு குறிப்பிட்ட அளவு மீன்மட்டுமே பிடிக்கவேண்டும் என்ற நிபந்தனை இருந்தாலும் ஏலம் எடுப்பவர்கள் அவர்க ளுடைய லாபத்தை மட்டும் குறிக்கோலாக கருதி செயல்பட்டு வருகிறார்கள். மிகவும் சிறியமீன் குஞ்சுகளைக் கூட பிடிப்ப தன் மூலம் மீன்களின் அளவு குறைகிறது. அது மட்டுமல்லாமல் தெரியாமல் மீன்பிடிக்கும் தொழிலும் கூடுதலாக நடந்து வருகிறது. இப்பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு உண்டாக்க வேண்டும்.

இது மட்டுமல்லாமல் பஞ்சாயத்து பிரதேசங்களில் மீன் வளர்ப்புக்கு தகுந்த குளங்கள் இருக்கின்றது. மூன்றாவது வார்டில் உட்பட்ட நூலாங்குளம் என்பது ஒரு உதாரணமாகும். தனியாருக்கு சொந்தமான குளங்களும் உண்டு. உள் பிர தேச மீன் வளர்ப்புகளுக்கு தகுந்த சதுப்பு பிரதேசங்களும், பஞ்சாயத்தின் பல இடங்களிலும் உள்ளது. தேவையான ஒத் துழைப்பும், பொருளாதார உதவியும் தந்தால் மிகவும் அதிகமான அளவு மீன் வளர்ப்பு நடத்த முடியும். இப்பிரதேசத்திற்கு தகுந்த கோல்டு பிஷ் போல மீன் குஞ்சுகளை தேவைக்கு தகுந்த மாதிரி கொடுக்க வேண்டும்.

பிரச்சனைகள்:

1. ஆணையிரங்கல் டாமிலிருந்து கிடைக்கக்கூடிய மீனின் அளவு குறைகிறது. கிடைக்கக்கூடிய மீனின் எடையும் குறைந்து வருகிறது.
2. டாமில் மீன்பிடிப்பு தனியாருக்கு ஏலம் செய்து கொடுக்கும் முறை மீன் வளர்த்தலை மிகவும் தடைசெய்யக்கூடிய செயலாகும்.
3. பஞ்சாயத்தின் பல பிரதேசங்களில் சொந்தமான குளங்களிலும் மீன் வளர்ப்பதற்கான முயற்சியில் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.
4. மீன் வளர்ப்புக்கு தேவையான ஒத்துழைப்பும் பொருளாதார உதவியும் இல்லாததே இதற்கு காரணம்.
5. மீன் வளர்ப்புக்கு தேவையான முயற்சிகளைப்பற்றி (செய்வதைக் குறித்து) சாதாரண மக்களுக்கு தேவையான அள வு புரிந்தவர்களல்ல.

வாய்ப்புகள்:

1. ஆயையிரங்கல் டாமில் உள்ள மீன்பிடித்தலை இரண்டாண்டுக்கு நிறுத்தி வைக்கவும்.
2. டாமீல் மீன் வளர்ப்பு உற்பத்தியை பெருக்குவதற்கும் அங்கு வேலை செய்யக்கூடிய உண்மையான மீன்பிடிப்பு தொழிலாளிகளினுடைய ஒரு கூட்டுறவு வங்கி தொடங்கி பொறுப்பை ஒப்படைக்கவும்.
3. உட்பகுதிகளில் மீன்தொழிலின் முயற்சிகளைப் பற்றி சாதாரண மக்களுக்கு அறிவூட்டுவதற்கு தேவையான நட படிகள் எடுக்க வேண்டும்.
4. தேவையான இடங்களில் குளங்கள் கட்டியும் மீன்தொழில் நடத்துவதற்கான பொருளாதார உதவி வழங்கவும்.
5. மீன் தொழிலில் அரங்கில் வெளியுலக விஞ்ஞான முறையில் இப்பகுதிக்கு தகுந்த நல்ல இன மீன் குஞ்சுகரள கொடுக்கவும்.

தொழிற்சாலை

இந்தப் பஞ்சாயத்தில் பண்ணையார் எஸ்டேட்டில் செயல்படிக்கூடிய ஒரு தேயிலை தொழிற்சாலையும் சாந்தன் பாறையில் செயல்படக்கூடிய ஒரு வாகன பணிமனையும் 2 படுதா தைக்கும் பணிமனைகளும். ஒரு வாகன சுத்தி நிலையும் பூப்பாறையில் ஒரு வாகன பணிமனையும் ஒரு டயர் பராமரிப்பு மையம் இவைகள் தவிர தொழில் அரங்கில் வேறு எந்த விதமான தொழில் நிலையங்கள் இல்லை.

H.M.L. கம்பெனியின் உடமையில் உள்ள பண்ணையார் தேயிலை தொழிற்சாலை 1921–ல் அமைக்கப்பட்டதாகும். பண்ணையார் எஸ்டேட்டில் உற்பத்தி செய்யக்கூடிய தேயிலை அனைத்தும் சேகரிப்பது இங்குதான். முன்னாண்டுகளை விட இந்த தொழிற்சாலையில் சேகர்க்கப்பட்ட தேயிலையினுடைய விவரக்கணக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. (கிலோகிராமில்)

91 – 92	92 – 93	93 – 94	94 – 95	95 – 96
914900	955500	1039100	1061400	1148750

தொழிற்சாலையை பொறுத்தளவில் குழந்தைகள் காப்பகம் மருத்துவமனை, பால்வாடி, ஆகியவை உண்டு. தொழிற்சாலைகளிலும் மற்ற இதர நிலையங்களிலும் சேர்த்து 66 பேர் வேலை செய்கின்றார்கள். அவர்களுக்கு ரூ.1333 முதல் ரூ.1400 வரை மாதச் சம்பளமாக வழங்கப்படுகிறது. தொழிற்சாலையில் 30 தொழிலாளிகள் (work man) வேலை செய்கின்றனர். அவர்களுக்கு தினக்கூலியாக ரூ.52.73 வழங்கப்படுகிறது.

வாகனப் பணிமனை, படுதா தைக்கும் பணிமனை வாகன சுத்திகர்ப்பு பணிமனை, டயர் பராமரிப்பு மையம், முதலிய நிலையங்கள் அனைத்தும் தனியாருக்கு சொந்தமானதாகும். இவைகளிலெல்லாம் சேர்ந்து 12 பேர் வேலை செய்கின்றனர் அதுமட்டுமல்லாமல் 18 பேர் தொழில் பயிற்சியும் பயின்று வருகின்றனர். மேலும் பஞ்சாயத்தில் 2, 3 வார்டுகளில் ஒவ்வொரு சிமெண்ட் செங்கல் தொழிலும் உண்டு. 3ம் வார்டில் ஒரு செங்கல் செய்யக்கூடிய தொழிலும் குறைந்த அளவில் உண்டு.

சாந்தன் பாறையிலும், பூப்பாறையிலும் ஒவ்வொரு ரொட்டிக்கடை அமைத்ததால் பஞ்சாயத்தில் தொழில்சிலைளங்கள் ஏறக்குறைய முழுமையானதாக அமையும். தொழிற்சாலை ஊழியர்களுக்கான கூட்டுறவு வங்கிகளோ தொழிற்சாலை எஸ்டேட்டுகளோ (Real) இந்த பஞ்சாயத்தில் இல்லை.

உற்பத்தி விளைபொருட்களான மிளகு, ஏலம், முதலியவைகளை உபயோகப்படுத்தி செயல்படக்கூடிய தொழில்களுக்கு இங்கு கூடுதலும் முன்னுரிமை உண்டு. அதற்கு தொழில் நுட்பமுறையான பொருளாதார உதவி கொடுத்தால் இது போன்ற தொழில்கள் லாபமான முறையில் செயல்படமுடியும். சிறிய வனங்களில் இருந்து கிடைக்கக்கூடிய பொருட்களை உபயோகப்படுத்தி ஊதுபத்தி, போன்ற சிறிய கைத்தொழில்கள் செய்வதற்கான தேவையான முயற்சிகள் செய்யப்படுவதில்லை. நறுமணப்பொருட்கள் உற்பத்தி செய்தலிலும் ஏற்றுமதி செய்வதற்கேற்ப வசதி இல்லை.

உணவு பண்டக சாலை பாலுற்பத்தி (பாலிதீன்) பிளாஸ்டிக் உற்பத்தியும் தேனீக்கள் வளர்த்தல் போன்றவைகள் தேவையான பிரதேசங்களில் முன்னுர்மை கொடுத்து தொழில் செய்வதற்கான முயற்சிகள் செய்ய வேண்டி உள்ளது.

நிலத்தோற்றத்திற்கு ஏற்ப இப்பகுதியில் தனிச் சிறப்பு ஏற்றுலாத் துறையை தேவையான முறையில் உபயோகப்படுத்துவதற்கு இதுவரையும் முடியவில்லை.

பிரச்சனைகள்:

1. தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு தேவையான இடவசதி இந்தப்பஞ்சாயத்தில் குறைவாகும்.
2. மின்சாரம் இணைப்பு கிடைப்பதற்கு மிகவும் கால தாமதம் ஏற்படுகிறது.
3. உரிமம் கிடைப்பதற்கு சட்டப்படியான பல இன்னல்களை எதிர்க்க வேண்டிய சூழ்நிலை வருகிறது.
4. தொழில் நுட்ப நிலையத்தில் தேவையான அளவில் தொழிலாளிகளிலும் தொழில் செய்வதற்குத் தேவையான பொருட்களும் குறைவாகும்.
5. பொருளாதார சேகரிப்பில் இந்தக்குறைவும் தள்ளுபடியில் எந்த நேரத்திலும் தொழில் செய்வதற்கு முடியாத சூழ் நிலை உருவாகதன் பலன் இது பின் தள்ளப்படுகிறது.
6. உற்பத்தியை பெருக்குவதற்கு தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதில்லை.
7. உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களை விற்பனை செய்வதற்கேற்ற வசதிகள் இல்லை.

வாய்ப்புக்கள்:

1. சிறிய தொழில்கள் தொடங்குவதற்கு வசதியான இந்தப் பஞ்சாயத்தில் சிறிய தொழிற்சாலை (Real - Estates) அமைக்கனும்.
2. அங்கே மின்சாரம், தண்ணீர், போக்குவரத்து முதலிய அடிப்படை வசதிகளும் வழங்க வேண்டும்.
3. இதை சேகரிப்பவர்களுக்கு பயிற்சிகள் வழங்க வேண்டும்.
4. கூட்டுறவு மேகலைகளில் புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவும்.
   - – மாட்டுத்தீவனம்/கோழித்தீவனம் அமைத்தல்.
   - – ஏலம் – மிளகு , உற்பத்தி.
   - – நறுமணப் பொருட்களின் ஏற்றுமதி/உற்பத்தி
   - – உணவுப் பண்டகசாலை/உற்பத்தி
   - – ரெடிமேடு ஆடை உற்பத்தி.
   - – பாலுற்பத்தி
   - – வேப்பம் – பிண்ணாக்கு உற்பத்தி.

   போன்ற கூட்டுறவு மேகலையில் மகளிர் கூட்டுறவு சங்கங்களில் வழி தனியார் மேகலைகளில் தொடங்கவும்.
5. கோழி வளர்த்தல்/தேனீக்கள் வளர்த்தல் போன்றவைகளை பரவலாக்கவும் உற்சாகம் கொடுக்கவும் செய்ய வேண்டும்.
6. இரண்டு மூன்று வார்டுகளில் சிமெண்ட் – மண் –செங்கல் உற்பத்தியும் III ம் வார்டில் செய்து வருகின்ற கூடுதல் பொருளாதார உதவி செய்து புத்துணர்வு கொடுக்கவும்.
7. சட்டப்படியான முறையற்ற தடைகள் நீக்கி பஞ்சாயத்தில் ஒரு மர அறுவை மில்லும் மரப்பொருள் விற்பனை நிலையமும் அமைக்கவும்.
8. உற்பத்தி வசதிகள் அதிகரிப்பதற்கும் உற்பத்தி பொருட்களை அதிகரிப்பதற்கும் தேவையான ஒரு பொதுச்சந்தை அமைக்கவும்.
9. ஆணையிரங்கல் டாம் அடங்கிய 7வது வார்டில் வன விலங்கு காப்பகம்/சுற்றுலா முதலியவைகள் அமைப்பதற்கான தை உபயோகப்படுத்துவதற்காக ஒரு திட்டம் தீட்ட வேண்டும்.
10. ஆணையிரங்கல் டாம், தலக்குளம், உச்சுலுத்து, பத்தேக்கர் (அரசு பூமி கிடைக்கும்) மதிகெட்டான்பாகம், பதினெட்டாம் பூப்பாறை, பூப்பாறை சந்திப்பு போன்ற பிரதேசங்களில் சுற்றுலா விடுதிகள் அமைக்க தனியார் துறைக்கு அனுமதி வழங்கவும்.
11. பரம்பரை தொழில்களாகிய ஈத்தைத்தொழில் தொடங்குவதற்கும் உற்பத்தி செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளும் பரிசோதிக்க வேண்டும்.
12. பஞ்சாயத்திற்கு தேவையான பலதரப்பட்ட பொருட்களுடைய அடிப்படையில் தொழில் வளர்ச்சிக்கு தேவையான ஒரு திட்டத்தை தயார் செய்ய வேண்டும்.

எரிபொருள்

இப்பஞ்சாயத்தில் பெரும்பாலும் அனைத்து இல்லங்களிலும் சமையலுக்கு விறகு வைத்து எரிக்கக்கூடிய அடுப்புகள் உள்ளது. நூற்றிற்கு மேல் வருகின்ற ஏலக்காய் உலர்த்தி எடுக்கக்கூடிய ஸ்டோர் அடுப்புகளிலும் விறகுகளையே எரிபொருளாக பயன்படுத்துகிறார்கள்.

எல்.பி.ஜி. (எரிவாயு) அடுப்புகள் வைத்து உபயோகிப்போர்களின் எண்ணிக்கை நூறு மட்டுமே ஆகிறது.

மண்ணெண்ணெய் உபயோகிக்கின்ற (ஸ்டவ்) அடுப்புகள் ஐம்பது உண்டு. சாண எரிவாயு மூலம் உபயோகிக்கின்ற அடுப்பு எண்ணிக்கை பத்திற்கும் குறைவே ஆகும்.

எல்.பி.ஜி., மண்ணெண்ணெய், சாண எரிவாயு போன்றவை உபயோகிக்கின்ற வீடுகளிலும் சமையலுக்கு பெரும்பாலும் **விறகடுப்புகளை** பயன்படுத்துகிறார்கள்.

பாரத் கியாஸ் ஏஜென்ஸி (பீருமேடு) 93-94 முதல் செயல்பட்டு வருகிறது. ஐஸ்வர்யா கியாஸ் ஏஜென்ஸி (ராஜாக்காடு) தனியார் நடத்தி வருகின்ற நிறுவனம் 95 முதல் செயல்பட்டு வருகின்றது. இவை இரண்டும் இப்பஞ்சாயத்தின் மக்களுக்கும் விதரணதம் செய்யப்படுகிறது.

வெளிச்சத்திற்கு முக்கிய பங்கு வகிப்பது மண்ணெண்ணெய் மட்டுமே. இப்பஞ்சாயத்தில் மொத்தமுள்ள 4148 வீடுகளில் மின் இணைப்பு உள்ளது 1468 வீடுகள் மட்டுமே.

தற்போதுள்ள மின்இணைப்பு கிடைத்தவர்களின் விபரம்

வீடுகள்	கடைகள்	விவசாயம்	தொழிற்கூடம்	கோயில்/ஆலயம் போன்றவை
1468	210	29	10	50

விறகு எடுப்பது பெரும்பாலும் ஏலக்காடுகளிலிருந்தும் வனங்களிலிருந்துமே ஆகும்.

தொழிலாளிகள் வேலை செய்கின்ற இடங்களிலிருந்து விறகுகள் சேகரித்து வேலை முடிந்து வீடு வரும்போது தலை கூமையாக கொண்டு வருகிறார்கள். பெண்கள் வேலை இல்லாத நாட்களில் விறகுகள் சேர்க்கிறார்கள். மண்ணெண்ணெய் முற்றிலும் நியாய விலைக்கடை (ரேஷன்கடை)களிலேதான் கிடைக்கிறது. மண்ணெண்ணெய் ஒவ்வொரு மாதமும் வினியோகம் செய்யப்படுகிறது. இது கடந்த வருடம் 12878 லிட்டர் வினியோகம் செய்யப்பட்டது.

விறகு கிடைப்பது கடினமாக உள்ளதினால் மண்ணெண்ணெய், எல்.பி.ஜி. போன்றவற்றின் மூலம் உபயோகப்படுத்த மக்கள் அதற்கு மாறிவருகின்றனர்.

புகை இல்லாத அடுப்புகள் இங்கு பரவலாக உபயோகிக்க தொடங்கவில்லை. கால்நடைகள் வளர்த்தல் பெருகிவருகின்றபோதும் சாண எரிவாயு (கோபர் கியாஸ்/பயோகியாஸ்) தயாரிக்க போதிய அளவு பயிற்சிகளோ, விபரங்களோ கிடைக்கவில்லை. நவீன எரிபொருள் உபயோகம் தொடங்கவில்லை.

பிரச்சினைகள்:

1. விறகு கிடைப்பது இல்லை. அத்துடன் விறகு விலை அதிகரிப்பு , காடுகளிலிருந்து விறகெடுக்க அனுமதி கிடைக்காமை நிலவுகிறது.
2. இப்பஞ்சாயத்திற்குள் எல்.பி.ஜி. வாயு இணைப்பு ஏஜென்ஸிகள் இல்லை.
3. மின் இணைப்புகள் எல்லா பகுதிகளுக்கு சென்றடையாத நிலை:.

   சேரியார் அரிஜன காலனி மற்றும் ராஜாப்பாறை, மணிதூக்கான் மேடு, 18-ஆம்படி, மான்குன்றில் சந்திப்பு முதல் புத்தடி சாலை வரை உள்ள பகுதிகள், கானல் முகப்பு, கோச்சடைகள்ளிப் பாறை கூந்தப் பனைத்தேரி அரிஜன காலனி, சங்கப்பன் பாறைகிழக்கு தொட்டிக்கானம் முதல் எஸ்டேட் பூப்பாறை வரையிலுமுள்ள வழி, உச்சிலுத்து, தளம்,நண்டார், முள்ளன் தண்டு, சங்கரபாண்டியன் மெட்டு, வேட்டுவன்பாறை, அமலா டிவிஷன், போடிமெட்டு ஆடுவிழுந்தான் குடி பழங்குடியினர் காலனி.
4. மின்சக்தி குறைவும், தொடர்ந்துள்ள மின்சார தகராறுகளும்.
5. விவசாய தேவைகளுக்கான பம்புசெட்டுகளுக்கும் அதற்கு தேவையான அதிக மின்சக்தி (திரிபேஸ்) இணைப்பு இல்லாமை.
6. எரிவாயு உபயோகிக்க கூடியதிலுள்ள பற்றாக்குறைவு.
7. புகை இல்லாத அடுப்புகள் நிறுவுவதில் ஆர்வம் குறைவு.
8. நுண்ணிய மின் வசதி தேவைக்கு ஏற்றபடி இல்லை.

ர்வுகள்:

1. விறகு உற்பத்தி அதிகரிக்கவும், எனும் இலட்சியத்துடன் சமூக காடுகள் உண்டாக்குதல்.
2. இப்பஞ்சாயத்து பகுதியில் எல்.பி.ஜி. வாயு இணைப்பிற்கு அரசுதுறை மையங்கள் ஏற்பாடு செய்யவும்.
3. மின்சார இணைப்புகள் கிடைக்காத பகுதிகளில் (மேல்குறிப்பிட்ட இடங்களுக்கு) இணைப்புகள் உடன் கொடுக்க ஏற்பாடு செய்யவும்.
4. மின்சக்தி குறைவும், தொடர்ந்துள்ள் மின்சார தகர்வுகளும்
5. விவசாய தேவைகளுக்கான பம்புசெட்டுகளுக்கும் அதற்குத் தேவையான அதிக மின்சக்தி (திரிபேஸ்) இணைப்பு இல்லாமை.
6. எரிவாயு உபயோகிக்ககூடியதிலுள்ள பற்றாக்குறை
7. புகை இல்லாத அடுப்புகள் நிறுவுவதில் ஆர்வம் குறைவு.
8. நுண்ணிய மின் வசதி தேவைக்கு ஏற்றபடி இல்லை.

வுகள்:

1. விறகு உற்பத்தி அதிகரிக்கவும், எனும் இலட்சியத்துடன் சமூக காடுகள் உண்டாக்குதல்.
2. இப்பஞ்சாயத்து பகுதியில் எல்.பி.ஜி. வாயு இணைப்பிற்கு அரசுத்துறை மையங்கள் ஏற்பாடு செய்யும்.
3. மின்சார இணைப்புகள் கிடைக்காத பகுதிகளில் (மேல்குறிப்பிட்ட இடங்களுக்கு) இணைப்புகள் உடன் கொடுக்க ஏற்பாடு செய்யவும்.
4. மின்சக்தி குறைவை சரிபண்ணுவதற்காக ஆணையிரங்கல் மின் உற்பத்தியில் இணைத்தது கேரள அரசு மின் வாரியத்திற்கு தேவையான இடத்தில் 110 KV துணை மின் நிலையம் நிறுவ வேண்டும்.
5. தேவையான இடங்களில் மின் கலன்கள் நிறுவ வேண்டும்.
6. மின்சார கம்பிகளில் தட்டி நிற்கின்ற மரக்கிளைகளை அகற்றுவதற்கான பணிகள் செய்யவேண்டும்.
7. குறைந்த ஒப்புதல் ஏற்படுத்தி புதிய இணைப்புகளுக்கு காத்திருப்பவர்களுக்கு உடனே இணைப்பு வழங்க வேண்டும்.
8. கூந்தப் பனைத்தேரி, சேரியார் அரிஜன காலனிகளிலும் ஆடு விழுந்தான் குடி பழங்குடியினர் காலனியிலும் மின் இணைப்புகள் வழங்க அவசர நடவடிக்கைகள் உடன் எடுத்து இணைப்புகள் கொடுக்க வேண்டும்.
9. விவசாய – தொழிற்கூடங்களுக்கு தேவையான இடங்களில் அதிக மின்சக்தி மூன்று லைன் (திரிபேஸ்) நிறுவ வேண்டும்.
10. எரிபொருள் லாபமுள்ள மின் விளக்குகள், டியூப் லைட்டின் எலக்ட்ரிக் சோக், புட் வால்வு போன்றவைகள் பயன்படுத்த வலியுறுத்த வேண்டும்.
11. எரிவாயு விளக்குகள் மானிய விலையில் வழங்கவும், மின் இணைப்பு வழங்க முடியாத இடங்களுக்கு எரிவாயு விளக்குகள் பயன்படுத்த வலியுறுத்தல்.
12. சாண எரிவாயு(பயோ கியாஸ் – கோபர் கியாஸ்) உபயோகம் பரவலாக்கவும் அதற்காக தொழில் நுட்ப விளக்கம், மானியம் போன்றவை வழங்கவும், விழிப்புணர்வு ஊட்டவும் வேண்டும்.
13. புகை இல்லாத அடுப்புகள் உபயோகிக்க வலியுறுத்தவும், விறகு அடுப்புகள் முழுவதையும் புகையில்லாதவைகளாக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவும்..
14. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் காற்றாலை கொண்டு (விண்டு மில்) மின்சாரமெடுக்க பரிசோதிக்கவும்.

    a) பதினெட்டாம் படி மெட்டு (கதவுகல்மேடு)

    b) கள்ளிப்பாறை மெட்டு (நாடுகண்டான் மொட்டை)

    c) போடிமெட்டு.

சாலையின் பெயர்	வார்டு	தூரம்	சாலைஇனம்
1. பேத்தொட்டி – பேத்தொட்டிப்பாரா	IV	1 K.M.	மண்சாலை
2. பேத்தொட்டி – அரண்மனை பாரா	IV	1 K.M.	மண்சாலை
3. பேத்தொட்டி – தளம் மெயின்	IV	3 K.M.	தார்/மண்சாலை
4. தளம் – உச்சிலுகுத்து	IV	2 K.M.	மண்சாலை
5. பேத்தொட்டி – மதிகெட்டான்	IV	3 K.M.	மண்சாலை
6. பேத்தொட்டி – கோரம்பாறை	IV	2 K.M.	தார்/மண்சாலை
7. தளம் – நண்டார்	IV	2 K.M.	மண்சாலை
1. முள்ளந்தண்டு – செம்பாலா	V	1 K.M.	மண்சாலை
2. முள்ளந்தண்டு – மணி ஸ்டோர்	V	1 K.M.	மண்சாலை
3. மணிஸ்டோர் – எஸ்.பி. மெட்டு	V	1 K.M.	மண்சாலை
4. பூப்பபாறை – கோராம்பாறை	V	2 $^{1}/_{2}$ K.M.	தார் சாலை
5. சாந்தன்பாறை – கோரம்பாறை	V	1 $^{1}/_{2}$ K.M.	மண்சாலை
6. பூப்பாறை – தளகுளம்	V	2 K.M.	மண்சாலை
7. மூலத்துறை – முள்ளன் தண்டு	V	3 K.M.	மண்சாலை
1. பூப்பாறை – தொட்டிக்கானம்	VI	2 K.M.	மண்சாலை
2. பூப்பாறை – கண்ணமங்கலம்	VI	2 K.M.	மண்சாலை
3. பூப்பாறை – தேயிலை சரிவு	VI	3 K.M.	மண்சாலை
4. பூப்பாறை – முட்டாஞ்சேரி	VI	3 K.M.	மண்சாலை
5. பூப்பாறை – செம்பால	VI	1 K.M.	மண்சாலை
6. பூப்பாறை ஸ்கூல் – முள்ளன் தண்டு	VI	3 K.M.	மண்சாலை
7. பூப்பாறை – குப்பசேரி	VI	2 K.M.	மண்சாலை
8. பூப்பாறை அஞ்சேக்கர்	VI	2 K.M.	மண்சாலை
1. ஆனையிரங்கள் – வேட்டுவன் பாறை	VII	2 K.M.	மண்சாலை
2. வேட்டுவன் பாறை – எஸ்.பி. மெட்டு	VII	2 K.M.	மண்சாலை
3. கே.எம்.சாலை – புதுப்பாறை	VII	2 K.M.	மண்சாலை
1. தோண்டிமலை – பண்ணையார்	VIII	$^{1}/_{2}$ K.M.	மண்சாலை
2. தோண்டிமலை – ஓம்சக்தி	VIII	3 K.M.	மண்சாலை
3. சுண்டல் – 1 காலனி	VIII	1 K.M.	மண்சாலை
4. ராவ் – ஆடுவிழுந்தான்குடி	VIII	2 K.M.	மண்சாலை

c) கிழக்கு தொட்டிக்கானம் – பூப்பாறை சாலை பண்ணையார் ஆற்றின் குறுக்கே

d) மாட்டான் சேர் – இராஜகுமாரி சாலை

e) பூப்பாறை – கண்ணமங்களம் சாலை பண்ணையார் ஆற்றின் குறுக்கே

f) கிழக்கு தொட்டிக்காணம் – முரிக்கம் தொட்டிசாலை பண்ணையார் ஆற்றின் குறுக்கே (சாந்தன் பாறை இராஜ

g) குமாரி பஞ்சாயத்தை இணைக்கிறது)

4. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாகனம் நிறுத்துமிடத்தில் நிழற்குடை உண்டாக்க வேண்டும்.

a) சங்கரப்பன் பாறை

b) தொட்டிக்கானம் கிழக்கு

c) பூப்பாறை மேற்கு

d) கோச்சடைகள்ளிப் பாறை

e) பி.எல். ராவ் சந்திப்பில்

f) வேட்டுவன் பாறை சந்திப்பு

5. சாந்தன்பாறை பூப்பாறை சந்திப்பில் அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும்.
6. சாந்தன் பாறை பூப்பாறை சந்திப்பில் பஸ், டாக்ஸி நிறுத்த பார்க் வசதி செய்து தர வேண்டும்.
7. பூப்பாறை சந்திப்பில் பஸ் நிறுத்துவதற்கு தேவையான இடம் H.M.L. கம்பெனியிடமிருந்து வாங்க வேண்டும்.
8. சாலைகளின் சிறு சிறு பணிகளை வருடம் ஒரு முறை செய்ய வேண்டும்.
9. கீழே கொடுக்கப்பட்டுள்ள சாலைகளை பஞ்சாயத்து ஏற்று போக்குவரத்து வசதி செய்து தர வேண்டும்.

a) நெல்லிக்கா தடம் – 10 ஏக்கர் (வார்டு II)

b) தொட்டிக்காணம் – கூந்தப்பனத்தேரி (வார்டு II)

c) கிழக்கு தொட்டிக்கானம் – பூப்பாறை (வார்டு III)

d) பூப்பாறை L.P.S. - செம்பால (வார்டு VI)

e) பூப்பாறை – பாறமடை (வார்டு VI)

f) சங்கப்பன் பாறை – தொண்டமான் கோட்டை (வார்டு I)

10. கீழே வருகின்ற சாலைகளில் வாகன வசதி செய்து தர வேண்டும்.

a) சங்கப்பன் பாறை – புத்தடி

b) தேக்கடி – மூணார் – K.S.R.T.C. – தொடங்கவும்

c) குருவாயூர் – பம்ப – காலடி – K.S.R.T.C. – தொடங்கவும்.

d) பொன்குஞ்ஞும் – மூணார் – எர்ணா குளம் – போடிமெட்டு மூவாற்று புழா, இராஜாக்காடு, மூவாற்று புழா போடி மெட்டு தற்போது ஓடிக்கொண்டிருக்கிற நிறுத்தப்பட்ட வாகனங்களை அதுவும் K.S.R.T.C. போக்குவரத்தை புதுப்பிக்க வேண்டும்.

e) பூப்பாறை வழி கடந்து செல்கின்ற அனைத்து பேரூந்துகளும் சாந்தன்பாறை வந்து போக வேண்டும்.

f) போடிநாயக்கனூரிலிருந்து பேத்தொட்டி, புத்தடி, பண்ணையார், ஆகிய இடங்களுக்கு பஸ் ஸர்வீஸ் ஆரம்பிக்க வேண்டும்.

சமூக நலம்

நமது பஞ்சாயத்தில் இறுதியாக I.R.D.P. கணக்கெடுப்பு பிரகாரம் வறுமைகோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்கள் 15

வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள மக்களுக்கு உதவிகள் கிடைத்ததின் வழி வறுமை கோட்டிற்கு மே உயர்ந்தவர்களின் எண்ணம் 134 குடும்பங்கள் மட்டுமே.

இதில் கூடதலாக ஹரிஜனங்கள் தான் பயன் அடைந்துள்ளனர்.

நமது பஞ்சாயத்தில் 18 (குழந்தைபன் காப்பகம்) அங்கன்வாடி செயல்பட்டுவருகிறது. சமூகத்தில் இவர்கள சேவைகள் மிகவும் போற்றுதலுக்குரியவையாகும்.

ஒவ்வொன்றிலும் ஒரு ஊழியர், அடுத்து ஓர் உதவியாளர் என்று 2 பேர்கள் பணிபுரிகின்றனர்.

கட்டிடங்களும் அடிப்படை வசதிகளும் மிக குறைவு, அனைத்து வித வசதியின்றி தவிக்கிறது.

நமது பஞ்சாயத்தில் ட்ரைசம் தேர்ச்சி பெற்றவர்கள் மொத்தம் 267 பேர், தேர்ச்சி செய்த பகுதியில் தொழ செய்பவர்கள் மிக குறைவு.

D.W.C.R.A. திட்டத்தின்படி நமது பஞ்சாயத்தில் மொத்தம் 5 பிரிவுகள்(யூனிட்டுகள்) தொடங்கினாலும் 4–ஆ வார்டில் இப்போது இருக்கும் டயரி பிரிவு மட்டுமே செயல்படுகிறது,

சமூக முன்னேற்றத்திற்று செயல்படும் துறையின் மூலம் வினியோகம் செய்து வருகின்றன பலவித ஓய்வூதியங்க முதியோர் நிதியுதவி, விதவைதொகை காய்கால நிதி உதவிகள், விவசாய தொழிலாளர் நல ஊதியம், ஆகியவை குறிப்பிட நபர்களுக்கு தக்க நேரம் கிடைப்பதில்லை,

உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம், அதற்கான எந்தவித உதவிகளும் கிடைப்பதில்லை.

சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வரும் பல வகையான கட்டங்களில் பலதும் நமது பஞ்சாயத்தில் கிடைப்ப அரிதாகிவிட்டது.

வறுமை கோட்டுக்கு கீழ் வரும் நபர்கள் விபரம், J.R.D.P. நிலவரம்.

வார்டு எண்	கணக்கெடுப்பில் உட்பட்ட குடும்பம்	இதில் SC / ST ஷெ குடும்பம்	இதுவரை நிதி உதவி கிடைக்காதவர்கள்	இதில் SC / ST	நிதியுதவி மூலம் உயர்நிலை அடைந்த குடும்பம்	வறுமை கோட்டு கீழ்வரும் குடும்பங நிதிஉதவி பெற்றவ அடங்குவர்
I	300	150	80	40	30	250
II	300	100	104	60	30	270
III	437	100	104	40	25	412
IV	75	7	55	14	10	65
V	145	29	106	36	5	140
VI	215	105	33	10	19	146
VII	76	61	10	10	4	72
VIII	169	145	29	18	11	158

D.W.C.R.A. படி அனுமதி வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புகள்

வார்டு	தொழில் உருவாக்குதல்	தொடங்கிய வருடம்	உறுப்பினர்	கருத்து குறிப்பு
I	கோரா கிளாஸ் உற்பத்தி	1989 - 90	10	இப்போது நடக்கவில்லை
IV	ஆடுவளர்த்தல்	1991 - 92	9	இப்போது நடக்கவில்லை.
IV	டயரியூனிட்	1985 - 96	9	நல்லமுறையில் நடைபெறுகிறது.
IV	ரெடிமேடு கார்மென்ட்	1988 - 89	15	இப்போது நடைபெறவில்லை.
VI	தையல்வேலை	1989 - 90	15	இப்போது செயல்படவில்லை.
VI	பால்பண்ணை	1989 - 90	15	இப்போது செயல்படவில்லை.

ஓய்வூதியங்கள்

ஓய்வூதியத்தின் வகை	பென்ஷன் பெறுகிறவர் எண்ணம்	பிரதிமாத தொகை	தீர்மானிக்கப்படாத விண்ணப்பங்கள் எண்ணம்
வயோதிக பென்ஷன்	14	100	8
விதவை பென்ஷன்	33	100	5

ட்ரைஸம் தொழில் பயிற்சி பெறந்றவர்களின் விபரம்

வார்டு நிர்	பயிற்சிகளின் பெயர்	பயிற்சி பெற்றவர்களின் எண்ணம்	சுயதொழில் செய்பவர்களின் எண்ணம்	இதரத் தொழில் செய்கிறவர்கள்	தொழில் இல்லாதவர்கள்
1	அச்சடித்தல், அச்சுக்கோர்த்தல், புக்பைண்டிங், எம்ராயடரிங்	60	22	38	-
2	தையல், மரவேலை, பெயின்டிங்	25	15	10	-
3	ஆட்டோமொபைல்ஸ், டைப்ரைட்டிங் டெய்லரிங்	75	50	20	5
4	போட்டோகிராபிக்	1	1	-	-
5	ஆட்டோமொபைல்ஸ், பிளாஸ்டிக்ஓர்க்ஸ், ரெடிமேட் கார்மென்ட்	8	2	6	-
6	தையல், எம்ராய்டரிங், பிளாஸ்டிக் நெய்தல், ரேடியோ மெக்கானிசம், பிரிண்டிங், கம்போசிங், கார்பெண்டரி, மோட்டார் பெயின்டிங், டிரைவிங், ஸ்டுடியோ, டைப்ரைட்டிங்	98	-	-	-

பொது சுகாதாரம்

இந்தப் பஞ்சாயத்தில் 6958 ஆண்களும் 6921 பெண்களும் உள்ளனர். 3246 குழந்தைகளும் உள்ளனர். எந்த ஒரு பகுதியும் எடுத்துக்கொண்டாலும் சுகாதார பிரச்சனைகளில் பொதுவான மரணங்களின் அளவு குழந்தைகளுடைய மரண அளவு முதியோர் மரண அளவு, பிறப்பு அளவு போன்றவைகளை ஆதாரமாக்கி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	சாந்தன் பறை பஞ்சாயத்தில்	மாநிலத்தில்
பொதுமரண கணக்கு	5.86	5.9
குழந்தைகள் மரணகணக்கு	9.50	16
முதியோர் மரண கணக்கு	1/1000	1/1000
பிறப்பு கணக்கு	14.5	17

மாநிலத்தில் பொதுவான நிலையை ஒப்பிட்டுப்பார்க்கும்போது பஞ்சாயத்து அடிப்படையில் இதை பரிசோதித்துப் பார்க்கும்போது கொஞ்சங்கூட வித்தியாசமான நிலை உருவாகின்றது. மிகவும் குறைந்த குழந்தைகள் மரண கணக்கின்படி பஞ்சாயத்தில் மிகவும் குறைந்த அளவு முன்னேற்றமே தெரிகின்றது.

தம்பதிகளுடைய எண்ணிக்கை:

வயது அடிப்படையில் பஞ்சாயத்தில் தம்பதிகளுடைய எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வயது	எண்ணிக்கை
15 முதல் 19 வரை	126
20 முதல் 24 வரை	437
25 முதல் 29 வரை	634
30 முதல் 34 வரை	491
35 முதல் 39 வரை	310
40க்கு மேலுள்ளவர்கள்	116
மொத்தம்	2114

தாய்மார்களும் கர்ப்பிணிகளும் சம்பந்தமான பொது விபரங்கள்

தாய்மாருடைய எண்ணிக்கை		2ற்கு அதிகம் குழந்தை உள்ளவர்	பால் குடிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை	கர்ப்பிணிகளின் எண்ணிக்கை	கர்ப்ப சம்பந்த இறந்தவர்களின் எண்ணிக்கை	மற்ற மரணங்களுடைய எண்ணிக்கை	95-96ல் மொத்த பிரசவங்களுடை எண்ணிக்கை	
1 குழந்தை மட்டும் உள்ளவர்	2 குழந்தைகள் உள்ளவர்						மருத்துவ மனையில்	வீட்டில
398	935	593	117	236	1	59	134	74

சத்துள்ள உணவு உண்ணக்கூடிய கர்ப்பிணிகளின் எண்ணிக்கை	T. T. எடுத்துள்ள கர்ப்பிணிகளின் எண்ணிக்கை			இரும்பு/போலிகாஸிட் மாத்திரைகள் கொடுக்கப்பட்டுள்ள கர்ப்பிணிகளின் எண்ணிக்கை	குடும்ப கட்டுப்பாடு செய்யக் கூடியவர்களும் 2க்கும் அதிகமான குழந்தைகளின் தாய்மார்களின் எண்ணிக்கை
	1 D	2 D	3 D		
218	83	62	7	178	347

குழந்தைகள் சம்பந்தப்பட்ட விபரங்கள்

குழந்தைகளுடைய எண்ணிக்கை				குழந்தைகளின் வயதும் சராசரி எடையும் (Kg.)					
1 வயதுக்கு கீழ்	1 – 2 வயது வரை	2 – 5 வயது வரை	3 – 5 வயது வரை	பிறந்த நேரம்	1 வயது	2 வயது	3 வயது	4 வயது	5 வயது
306	308	344	652	2-5	8	13	16-18	18.20	21-23

குழந்தைகளுடைய ஆரோக்கிய வளர்ச்சி விவரம்

வயது	அளவான		1-ம் தரம்		2-ம் தரம்		3-ம் தரம்	
	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்	ஆண்	பெண்
1 வயதுக்கு கீழே	72	68	73	62	15	11	3	2
1 – 3 வயது வரை	129	136	107	113	30	27	4	2
3 – 6 வயது வரை	151	138	119	115	23	28	1	1

- 1-ம் தரம் – அளவான சத்து குறைவானவர்கள் – 587
- 2-ம் தரம் – நடுத்தர சத்து குறைவானவர்கள் – 133
- 3-ம் தரம் – மோசமான சத்து குறைவானவர்கள் – 8

குழந்தைகளுடைய தடுப்பு ஊசி போடுவதைப் பற்றிய விபரங்கள்

வயது	பி.சி.ஜி.	டி.பி.டி.				போலியோ				ஸி.டி.				விஸின்ஸ்
		1 D	2 D	3 D	BD	1 D	2 D	3 D	BD	1 D	2 D	3 D	BD	
1 வயதுக்கு கீழே	293	188	171	176	186	181	90	NIL	NIL	NIL	NIL	NIL	120	120
1 – 3 வயது வரை	475	412	434	437	408	425	425	427	408	NIL	NIL	NIL	NIL	392
3 – 6 வயது வரை	507	502	502	501	536	507	505	502	536	28	43	61	NIL	334

இரும்பு /போலியோஸிட் மாத்திரைகள் கொடுத்தகுழந்தைகளின் எண்ணிக்கை – 578

வைட்டமின் A, சொட்டு மருந்து கொடுத்த குழந்தைகளுடைய எண்ணிக்கை – 156

சுகாதார அரங்கில் உள்ள பிரச்சனைகள்

சாந்தன்பாறை ஆரம்ப சுகதார நிலையத்தில் தேவையான கட்டிட வசதி இல்லை. நோயாளிகளை தங்க வைத்து சி கிச்சை செய்ய வசதி இல்லை. இரவு நேர வேலை இல்லை, பகல் 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை மட்டுமே செயல்ப டுகின்றது. ஆய்வுக்கூடம், அறுவைக்கூடம், பிரசவத்துறை, X-Ray கூடம், முதலிய வசதிகள் இல்லை. மேற்கூறிய வசதி கள் வேண்டுமானால் 33 கி.மீ. க்கு அப்பால் உள்ள மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டிய நிலைமை உள்ளது. அறு வை சிகிச்சை வசதி இல்லாததினால் P.H.C. ல் கருத்தடை முகாம்கள் நடைபெறுவதில்லை. மாதத்தில் ஒருமுறை ராஜகு மாரியில் வைத்து இந்த முகாம்கள் நடைபெறுகின்றது. Staff Nurse இல்லாத தினால் Field Staff னினுடைய சேவையை உபயோகப்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவாகிறது. இதனால் (field) செயல்பாடுகள் பாதிக்கப்படுகிறது. தேவையான நல் ல குடிநீர் மிகவும் தூரத்திலிருந்து சுமந்து கொண்டு வரக்கூடிய சூழ்நிலை வருகின்றது. மருத்துவமனை வளாகத்திற்குள்ள கிணறு மிகவும் மோசமான நிலையில் உபயோகப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

தேவையான மருந்துகள் இல்லை. நோயாளிகள் வெளியிலிருந்து மருந்து வாங்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. வருடத்தில் ஒருமுறை தான் தொடுபுழையில் உள்ள ஸ்டோரிலிருந்து மருந்து வருகிறது. மருந்துக ளை பத்திரப்படுத்தி வைப்பதற்கு அலமாரிகளோ, நோயாளிகளை படுக்க வைத்தோ, உட்கார வைத்தோ, பரி சோதிப்பதற்கு தேவையான நாற்காலிகளோ, மேசைகளோ இருக்கைகளோ, கட்டில்களோ இல்லை. மருத்துவ அதிகாரிக்கும், மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கும் தங்கும் விடுதிகள் இல்லை. குடிநீர் சுத்தப்படுத்துவதற்கா ன நீர் சுத்திகரிப்பு பொடி இல்லை. மருத்துவமனை ஊழியர்களுக்கு பொது கூட்டம் கூடுவதற்கான் கருத்தரங் கு அறை இல்லை. P.H.C. க்கு சொந்தமான வாகனம் இல்லை. சொந்தமான பிண பாதுகாப்பு அறை இல்லை. மருத்துவமனை வளர்ச்சியை பற்றி ஆராய்வதற்குதிய கூட்டங்கள் கூடுவதில்லை. அப்படியே கூடுவதற்கு முய ற்சித்தாலும் உறுப்பினர்கள் வருவதில்லை.

2. ஆணையிரங்கல், மூலத்துறை சங்கரபாண்டியன் மெத்து, வேட்டுவன் பாறை, போடி மெட்டு, தொட்டிக் கானம், பேத்தொட்டி, பள்ளிக்குன்று, பத்தடி, ஆகிய இடங்களில் எந்தவிதமான மருத்துவ வசதிகளும் இல்லை. மேற்படி பகுதிகளிலிருந்து P.H.C. க்கு வருவது குறைந்தது 4 கி.மீ.க்கு தூரமுள்ளது. இதிலும் கூடிய தூரம் 14 கி.மீ. ஆகும். சாந்தன்பாறையில் மட்டுமே உதவி மையத்திற்கு சொந்தமான கட்டிடம் உள்ளது. ராஜாபாறையி ல் உதவி மையத்திற்கு ட்டிடம் கட்டப்பட்டிருந்தாலும் தற்போது சேரியாரில் வாடகை கட்டிடத்தில் செயல்படு கிறது. 4 உதவி மையங்களுனுடைய ஒரு திருப்தியான நிலை இல்லை. குளங்களை சுத்திகர்ப்புச் செய்யவும். வியாதிகளை குறித்து அறிக்கை சமர்ப்பிக்கவும். இரத்தப்பரிசோதனை நடத்தவும் கர்ப்பிணிகளுக்கு வைட்ட மின் மாத்திரைகள் வழங்கவும் குடும்ப கட்டுப்பாட்டை பற்றி உள்ள நிகழ்ச்சிகளை விளம்பரப்படுத்தவும் ஆரோ க்கிய நிலைகளைப் பற்றி விளக்குவதற்கு கருத்தரங்குகள் நடத்தவும் ஆனால் இவை அனைத்தும் தற்போது நடைமுறையில் இல்லை.

3. பூப்பாறை ஆயுர்வேத சுகாதார நிலையத்தில் தங்கி சிகிட்சை செய்யக்கூடிய வசதி இல்லை. புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மாற்றி அமைப்பதற்கான எந்த முயற்சியும் இல்லை. கட்டிடத்தில் அடுப் பு, ஸ்டோர், முதலியவை இல்லை. மின்சார வசதி இல்லை. குடிநீர் தேவைக்கேற்ப் அமைத்துக்கொடுக்க முடி யவில்லை. சாந்தன்பாறையிலிருந்து 50 கி.மீ. தூரத்தில் உள்ள மருத்துவமனையில் தங்கி சிகிட்சை செய்யக் கூடிய சூழ்நிலை உருவாகிறது. கீழே விழுவதன் மூலம் ஏற்படுகின்ற எலும்பு முறிவு, ஒடிவு போன்றவை நிரந்த ர சம்பவமாக இருந்தாலும் சுகாதார நிலையத்தில் சிறப்பான சிகிட்சைக்கு சம்பந்தப்பட்ட துறை இல்லாததினா ல் நோயாளிகள் பூசாரணம்பட்டி சோதமங்கலம் முதலிய இடங்களுக்கு போக வேண்டிய நிலைவருகிறது. குழ ந்தைகளுக்கு சிறப்பான சிகிச்சைகள் இல்லை. வாத நோயாளிகளின் எண்ணிக்கை பஞ்சாயத்தில் கூடிவருகிற து. மருத்துவமனையில் உதவியாளர் இல்லை. தேவையான மருந்துகள் இல்லை, மருத்துவ அதிகாரிகளுக்கு தங்கும் விடுதிகள் இல்லை.

4. பஞ்சாத்தில் ஹோமியோ, யுனானி, இயற்கை வைத்தியம் முறைப்படி எந்தவிதமான மருத்துவ வசதியும் இல்லை.

5. பஞ்சாயத்தில் 90% வீடுகளில் கக்கூஸ் வசதி இல்லை. எந்த இடத்திலும் பொதுவான கழிப்பிட வசதி இல்லை. (சாலையோரங்களிலும், ஆற்றின் ஓரங்களிலும், பாறைகளிலும், மலம், ஜலம் செய்கிறார்கள்) குறிப்பாக (முக்கியமாக) புத்தடி, சேரியார் டாங்கிமேடு, கூந்தப்பனத்தேரி, சாந்தன்பாறை, பேத்தொட்டி, மூலத்துறை, கோரம்பாறை, தலக்குளம்,முல்லாந்தண்டு, பூப்பாறை, தோண்டிமலை, சங்கரபாண்டிமெத்து, வேட்டுவன்பாறை போன்ற இடங்களிலாகும் விஷக்கிருமிகள் ஆறுகளிலும் கிணறுகளிலும், தண்ணீரோடு சேர்ந்து நோய்கள் பரவுவதற்கு காரணமாக இருக்கின்றது. இதன்மூலம் கொசுக்கள் பெருகுகின்றது. பொதுவான விழிப்புணர்வு இல்லை.

6. மீன் இறைச்சி விற்பதற்கு சாந்தன் பாறையிலும் பூப்பாறையிலும் பொதுச்சந்தை இல்லை. மாமிசம் வெட்டக்கூடிய இடங்களிலும், ஹோட்டல்களிலும், உள்ள கழிவுகள் பண்ணையார் ஆற்று நீரோடு ஒழுகி செல்கின்றது. பூப்பாறை காலனியில் அழுக்கு நீர் பஞ்சாயத்து கிணறுக்கு ஒழுகிசெல்கின்றது. ஓடைகள் சுத்தமாக தண்ணீரை நேராக செல்வதற்கு வழி வாய்ப்பில்லை. ஓட்டல்களில் சுத்தமாக வைக்கப்படுவதில்லை. பஞ்சாயத்தின் பொதுவான சுகாதார நிலையம் இல்லை.

வாய்ப்புகள்:

1. சாந்தன் பாறை P.H.C. யை ஒரு தாலுகா மருத்துவமனையின் அளவிலான நிலையில் உயர்த்த வேண்டும்.
2. P.H.C. Staff Nurse அனுமதிக்க வேண்டும்.
3. ஊழியர்களுக்குத்தேவையான தங்கும் விடுதி அமைக்க வேண்டும்.
4. நிலவில் உள்ள கிணறை சுத்தம் செய்து மோட்டாரரும், பம்பும் வைத்து குடிநீர் வழங்க வேண்டும்.
5. காலாகாலங்களில் தேவைக்குத் தகுந்தாற் போல மருந்துகள் வந்து சேர்வதற்கு நடபடிகள் எடுக்க வேண்டும்.
6. நெடுங்கண்டத்தில் மருந்துகளுக்கு உள்ள ஒரு ஸ்டோர் தொடங்க வேண்டும்.
7. Staff Nurseஆனையிரங்கல், பள்ளிக்குன்று, புந்தடி பூப்பாறை(மேற்கு) மூலத்துறை ஆகிய பகுதிகளில் துளை மையங்கள் தொடங்கவும் துணை மையங்களுக்கு சொந்தமான கட்டிடங்கள் அமைத்துத் தர வேண்டும்.
8. புதிய கட்டிடத்திற்கு ஆயுர்வேத மருத்துவமனையின் செயல்பாடுகளை மாற்ற வேண்டும். அதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் உடனே ஏற்படுத்த வேண்டும்.
9. ஆயுர்வேத மருத்துவமனையில் தங்கி சிகிச்சை செய்ய தேவையான குறைந்தது 50 படுக்கைகள் உள்ள மருத்துவமனையாக மாற்ற வேண்டும். அக்கு பஞ்சர் வைத்தியமும் குழந்தைகளுக்கு அளிக்கக்கூடிய வைத்தியமும் தனிப்பட்ட முறையில் ஆரம்பிக்க வேண்டும்.
10. பஞ்சாயத்தில் ஒரு ஹோமியோமருத்துவ நிலையம் தொடங்க வேண்டும்.
11. மல ஜலம் நடத்துவது பொதுவான இடங்களில் அல்லாமல் தோட்ட உடமைகளின் உதவிகளோடு பொது கழிப்பிடம் அமைக்க வேண்டும். அது சுத்தமாக உபயோகப்படுத்துவதற்கு நிரந்தரமான மக்களுக்கு விழிப்புணர்வு நடத்த வேண்டும். அதற்கு வேண்டி பொதுமக்களில் ஒன்றுபட்ட விழிப்புணர்வை உணர்த்தும்வரை முயற்சிப்பதோடு தொழிற்சங்கங்களுடைய ஒத்துழைப்பையும் ஊர்ஜிதப்படுத்தவேண்டும்.
12. கழிப்பிடம் வசதியில்லாத வீடுகளுக்கு தனியான திட்டம் தீட்டி கழிப்பிடம் உண்டாக்குவதற்கு பொருளாதார உதவி செய்ய வேண்டும்.
13. மீன் இறைச்சி முதலியவைகளுக்கு தனிப்பட்ட சந்தை உண்டாக்க வேண்டும். தேவையில்லாத இறைச்சி சாலைகளை கடினமான நிறுத்த வேண்டும்.
14. ஹோட்டல்களில் குறிப்பிட்ட நேரங்களில் பரிசோதனை நடத்தப்படவேண்டும்.
15. பூப்பாறையிலும், சாந்தன் பாறையிலும், பொது மையானங்கள் ஏற்படுத்த வேண்டும்; புத்தடியில் பொதுவாக உபயோகிக்கின்ற மையானம் பஞ்சாயத்தின் மூலம் மதில் கட்ட வேண்டும்.
16. மருத்துவமனையின் மூலமும்,இதர சங்கங்களின் மூலமும் ஒத்துழைப்போடு பஞ்சாயத்தின் எல்லா ஆட்களையும் பூரண வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும், ஒவ்வொருவருடைய இரத்த குரூப் பரிசோதனை நடத்த வேண்டும்; சுற்றுப்புற சூழல், ரத்ததானம், இவைகள் எய்ட்ஸிற்கு எதிராக குரல் எழுப்புதல், புகைபிடித்தல், மது அருந்துதல், போன்றவைகளைக் குறித்து விரிவான பிரச்சாரங்கள் வார்டுகள் அடிப்படையில் கருத்தரங்குகளும், முகாமுகளும் நடத்த வேண்டும். பஞ்சாயத்தில் ஆரோக்கிய வாரதினமாக நடத்த வேண்டும்.
17. பூப்பாறையில் உள்ள 56 ஏக்கர் பரப்பளவுள்ள அரசு வகை பூமியில் ஆயுர்வேத காலேஜ்/பல்கலைக்கழகம், பச்சை மருந்து தயாரிக்கும் செடிகளின் தோட்டம், (மூலிகைத் தோட்டம்) முதலியவை ஆரம்பிக்கவும்.
18. சாந்தன்பாறையில் கூட்டுறவு பிரதேசங்களில் மருத்துவமனை ஆரம்பிக்கவும்.

குடிதண்ணீர்

கிணறுகள், ஊற்றுகள், பொது கிணறுகள், குளங்கள் அடிகுழாய்கள் போன்றவைகள். இந்த பஞ்சாயத்தி உள்ளவற்றைப் பற்றி, கீழ் அட்டவணையில் காணலாம்.

கிணறுகள் உள்ள இடம்	வார்டு	தற்போதைய நிலமை
1. பூத்தடியில் கவுண்டர் முருகன் இடம்.	I	உபயோகம் இல்லை
2. கோபால் தேவர் இடத்தில்	I	உபயோகம் உண்டு.
3. சேரியார் ஐய்யப்பன் இடத்தில்	I	உபயோகம் உண்டு.
4. சேரியார் புத்தடி ரோடு	II	தற்போது, நீர் உண்டு ஆனால் கோடை காலத்தில் நீர் வற்றிவிடும்
5. சேரியார் ஜான்ராஜ் இடத்தில்	II	உபயோகம் இல்லை.
6. புத்தடி சந்திப்பு	I	தற்போது, நீர் உண்டு ஆனால் கோடை காலத்தில் நீர் வற்றிவிடும்
7. புத்தடி பள்ளிகுந்னு ரோடு பக்கத்தில் ஜேம்ஸ் இடத்தில்	II	உபயோகம் இல்லை
8. புத்தடி கிருஷ்ணமூர்த்தி இடத்தில்	II	உபயோகம் இல்லை
9. கூத்த பணைதேரி	III	உபயோகம் இல்லை
10. ஞ.ண்.டி. எஸ்டேட்	III	உபயோகம் இல்லை
11. சாந்தன் பாறை சந்திப்பு	III	உபயோகம் இல்லை
12. பேத் தொட்டி (டாங்க்)	IV	தேவையான நீர் கிடைப்பதில்லை
13. மூலத்துறை (டாங்க்)	V	உபயோகம் இல்லை.
14. முள்ளந்தண்டு	V	உபயோகம் இல்லை.
15. பாலம் காலணி	VI	உபயோகம் உண்டு.
16. தேயிலை சரிவு	VI	உபயோகம் இல்லை.
17. பூப்பாறை லட்சம் காலணி	VI	உபயோகம் இல்லை.
18. முள்ளந்தண்டு / செம்பாலை (டாங்க்)	VI	உபயோகம் உண்டு.
19. வேட்டுவன் பாறை (டாங்க்)	VII	உபயோகம் உண்டு.
20. ஆடுவிழுந்தான்குடி	VIII	உபயோகம் உண்டு.
21. 10 ஏக்கர் (டாங்க்)	III	உபயோகம் இல்லை.
22. நெல்லிக்காய் தடம் (டாங்க்)	II	உபயோகம் இல்லை.
23. பள்ளிக்குன்னு டவுன் (டாங்க்)	II	உபயோகம் இல்லை.

இந்த பஞ்சாயத்தில் உள்ள அடிகுழாய்களின் விபரம்.

அடி குழாய்கள் இருக்கும் இடம்	வார்டு	தற்போதைய நிலமை.
1. சாந்தன் பாறை டவுன்	III	உபயோகம் இல்லை.
2. கிழக்கு தொட்டிகாணம்	III	உபயோகம் இல்லை.
3. மூலத்துறை	V	உபயோகம் உண்டு.
4. பூப்பாறை டவுன்	V	உபயோகம் உண்டு.
5. எஸ்டேட் பூப்பாறை கிளப்புக்கு அருகில்	VI	உபயோகம் உண்டு.

நீர் பாசனத்துறையில் குடிதண்ணீர் வழங்கக்கூடிய முறையில் பஞ்சாயத்து மையமாகிய சாந்தன் பாறையில் மட்டுமே நிலவில் உள்ளது. சன்ன கடை பாலத்தின் அருகில் உள்ள கிணறும் குறைந்தளவிலான நீர் வழங்கக கூடிய தண்ணீர் தொட்டி மட்டுமே உள்ளது. 20 அதிகமான டாப்களும் குறைந்தளவு வீடுகளுக்கு குடிநீர் கொடுக்கும் இணைப்புகளும், அடக்கம் உள்ள இத்திட்டம், முழுமையாக தேவைப்படுகிறது. சாந்தன்பாறை டவுனிலும், சேனாவதி ரோடில் 1500மீ வரையும். குழாய்கள் (டாப்கல்) இருந்தாலும், குடிநீர் கிடைக்கும் குழாய்கள் இவற்றில் பகுதியிலும் இல்லை. கிடைக்கக்கூடிய குடிநீர் சரியான முறையில் வினியோகம் செய்ய ஆயத்தங்களும், விவசாய்களும் இல்லை. நீர் கிடைக்கக்கூடிய டாப்களில் இருந்தும் நாளுக்கு நாள் தண்ணீர் கிடைப்பதில்லை.

இந்தப் பஞ்சாயத்தில் பல பகுதிகளில் அதிகமாக குடிநீர் பற்றாக்குறைகளை தேவைக்கு ஏற்ப தற்போது நிலவில் உள்ள தண்ணீர் தொட்டிகளை சரிசெய்து மக்களுக்கு தண்ணீர் பற்றாக்குறையை பூர்த்தி செய்ய வேண்டும்.

இப்பஞ்சாயத்தில் குடிநீர் பற்றாக்குறையை தீர்க்க ஒரு பெரிய திட்டம் ஒன்று தீட்டுவதற்காக ஒரு கணக்கெடுப்பு நீர் துறை நடத்தி வருகிறது.

பிரச்சனைகள் :-

1. இந்தப்பஞ்சாயத்தில் எல்லா வார்டுகளிலும் குடிநீர் பிரச்சனை ஏற்படுகின்றது.
2. மண்ணிற்கடியில் கருங்கல் பாறை காணப்படுவதால் சில இடங்களில் கிணறுகள் வெட்ட தடை ஏற்படுகிறது.
3. தற்போது உள்ள அடிகுழாய்கள், நிலவில் உள்ள அடிகுழாய்கள் பலதும் உபயோகம் இல்லை. குடிநீரில் ரூசி தன்மை, தண்ணீரின் நிறம் மாறுகின்றது.
4. குழாய் நீர் எப்போதாவது ஒரு முறை தான் கிடைக்கிறது. டாப்களின் குறைகளால் குடிநீர் வீணாக போகிறது.
5. யூக்காலி போன்ற மரங்கள் மண்ணில் உள்ள நீரை ஊறிஞ்சி எடுக்கிறது.
6. குடிநீர்க்கு செலவாக கூடிய தொகை மிககுறைவாக இருக்கிறது.
7. சுகாய்மையான குடிநீர் பற்றி மக்களுக்கு போதுமான விழிப்புணர்வு இல்லை.

தீர்வுகள்:

1. தற்போது உள்ள கிணறுகளும் அடிகுழாய்களும் ஆழம் கூட்டியும் சிறு சிறு வேலைகளையும் செய்து உடனடியாக உபயோகிக்கவும். குடிநீர் பற்றாக்குறையுள்ள இடத்தில் குடிநீர் கிடைக்க உதவி செய்ய வேண்டும்.
2. தற்போது உள்ள டாப்களும், குழாய் தொடர்களையும் சிறு சிறு வேலைகளை சரிசெய்து டாக்களிலிருந்து குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்தும் குடிநீர் வீணாகிபோவதை தடுக்க வேண்டும்.
3. மண்ணில் உள்ள நீரை வெளியேற்றுவதற்கு யூக்கலிப்டஸ் போன்ற மரங்களை வளர்த்துவது மிகவுமம் நல்லதாகும்.
4. குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பூமி சம்பந்தப்பட்ட அடிகுழாய்கள மற்ற இதர வகையில் தண்ணீர் கொண்டுவருவதற்கு முயற்சிகள் இருக்கின்றனவா என்று பரிசோதிக்க வேண்டும். இந்த விஷயத்தில் நீர் துறையை உடனடியாக நாடவும்.
5. குடிநீர் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்காக கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.
    1. சேரியார் ஹரிஜன் காலனிக்கு பக்கத்தில் மத்தச்சன் என்ற நபரினுடைய இடத்தில் கிணறு கட்டவும். இதனால் 50 குடும்பங்களுக்கு உபயோகப்படும்.

2. புத்தடி புதகில் ஆற்றில் நீர்தேக்கம் கட்டி அங்கிருந்து தண்ணீர் குழாய்களின் மூலம் கோபால் தேவர் காலனி வக்கச்சன் மேட்டில் நீர் தொட்டியமைத்து நீரைத் தேக்கி மக்களுக்கு வழங்க வேண்டும். 1ஆவது வார்டில் அனைத்து பகுதியும், 2ஆவது வார்டில் சில பகுதிகளிலும் தண்ணீர் வழங்க வேண்டும்.

3. கூடப்பாறை ஆற்றில் இருந்து குழாய்மூலம் கொண்டு வந்து சேரியார் கூந்தபனை தேரி மக்களுக்கு வினியோகம் செய்ய முடியும்.

4. நிலவில் உபயோகம் இல்லாமல் பூ கூந்தேல் ஸ்கரியாவின் இடத்தில் உள்ள நீர் தொட்டியும், குழாய் இணைப்புகளும் சிறு சிறு வேலைகளை பூர்த்தி செய்து பள்ளி குன்றில் நீர் கொடுப்பதற்கு முடியும்.

5. 10 ஏக்கர் (2ஆவது வார்டு) உள்ள குளம் தூய்மைபடுத்தி நீர் தேக்கம் கட்டி நெல்லிக்காய் தடம் நீர் தொட்டிக்கு தண்ணீர் சேகரித்து பொது மக்களுக்க கொடுத்தால் 50 குடும்பங்கள் பயன் அடையும்.

6. எல்லா நேரமும் நீர் கிடைக்கக்கூடிய புத்தடி, காமாட்சி செட்டியாருக்கு சொந்தமான ஏலத்தோட்டத்தில் தண்ணீர் தொட்டியமைத்து நீர் தேக்கி குழாய் மூலம் குடிநீர் வழங்கினால் 60 குடும்பங்கள் பயன்பெறும்.

7. 3ஆம் வார்டில் சாந்தன்பாறையில் நிலவில் உள்ள நீர் வழங்கும் திட்டத்தின் நீர் தொட்டியின் நீர் தேக்கம் அதிகரித்து குழாய்களின் கேடுபாடுகளை சரிசெய்தால் குடிநீர் மக்களுக்கு வழங்க முடியும்.

8. கானல் முகப்பிற்கு மேலே உள்ள நூலான் குளத்தில் எந்த காலாத்திலும் தாராளமாக கிடைக்கக்கூடிய தண்ணீரை மக்களுக்கு வழங்குவதற்கு ஒரு திட்டம் தீட்டி நடைமுறைப்படுத்தினால் 3 ஆவது வார்டு மட்டுமல்லாமல் 2ஆவது வார்டில் 10 ஏக்கர் தொட்டிகானம், ஆகிய பகுதிகளுக்கு தேவையான குடிநீர் வினியோகம் செய்ய முடியும்.

9. முத்துப்பாறையில் ஒரு நீர் தொட்டி கட்டி அதில் நீரை தேக்கி பேத்தொட்டியில் மட்டுமல்லாமல் பேத்தொட்டியில் எல்லா பகுதிகளுக்கும் நீர் வழங்க முடியும்.

10. D.S.P. க்கு சொந்தமான தோட்டத்தில் நீர் தொட்டிகட்டி நீர் தேக்கிவைத்து மக்களுக்கு வனியோகம செய்தால் 5ஆவது வார்டில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஓர் அளவில் பூர்த்தி செய்யப்படலாம். தளக்குளம் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு இதன் மூலமாகவும் நீர் பற்றாக்குறைய்யப் போக்கலாம்.

11. முள்ளந்தண்டு மணி எஸ்டேட்டின் பக்கத்தில் கிணற்றின் ஆழத்தைக் கூட்டினால் முள்ளந்தண்டு பகுதியில் நீர் வினியோகம் செய்யலாம். இப்போது கிணற்றின் நீர் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது.

12. முத்துப்பாறை ஆற்றில் நீர் தேக்கம் கட்டி 5, 6 வார்டுகளில் குடிநீர் வழங்க முடியும். பூப்பாறை வில்லேஜ் அலுவலகத்திற்கு அருகில் நீர்தொட்டி கட்டி நீரை தேக்கி வினியோகம் செய்ய வேண்டும்.

13. செம்பாலை பகுதியிலிலுள்ள தண்ணீர் கொடுப்பதை நிறுத்தி எஸ்டேட் பூப்பாறை வரை நீட்ட வேண்டும்.

14. சங்கரபாண்டியன் மெத்தில் ஓடுகின்ற நீரை தடுத்தி நிறுத்தி வினியோகம் செய்தால், ஆணையிரங்கல், முள்ளந்தண்டு மக்களுக்கு உபயோகப்படும்.

15. சங்கரபாண்டியன் மெத்தில் எந்தக் காலத்திலும் நீர் கிடைக்கக்கூடிய ஒரு நீர் ஊற்றில் இருந்து தண்ணீர் சேகரித்து வினியோகம் செய்ய வேண்டும்.

16. மதிகெட்டானில் நீர்த்தேக்கம் கட்டி தோண்டிமலை அடங்கிய 8ஆம் வார்டின் பல பகுதிகளில் நீர் வினியோக்கப்படலாம்.

17. ஆடுவிழுந்தான் குடியில் நீரை தடுத்து நிறுத்தி போடிமெட்டு பகுதிகளுக்கு தண்ணீர் வழங்கவும்.

6. தேவையானவர்களுக்கு கிணறு வெட்டுவதற்காக தள்ளுபடி வகையில் பணம் வழங்க வேண்டும்.

7. இப்போது ராஜகுமாரி பஞ்சாயத்தில் நிலவில் உள்ள நீர் வழங்கும் திட்டத்தின் மூலம் பூப்பாறை பாலம் காலனி தொட்டிக்காணம் (2ஆவது வார்டு) போன்ற பகுதிகளுக்கு நீட்டி கொடுப்பதற்கான பரிசோதனை செய்ய வேண்டும்.

8. குடியிருக்க கூடிய இடங்களில் ''தண்ணீர் குழிகள்'' தோண்டி அதில் மழை நீரைத தேக்கி வைத்து அதை பொது மக்களின் உபயோகத்திற்கு பயன்படுத்தலாம்.

9. குடிநீரை சுத்திகரிப்பதோடு, வீணாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்று மக்களை அறிவூட்ட வேண்டும்.

புதியதாக கிணறுகள் அமைக்கக்கூடிய இடங்கள்

1. பதினெட்டாம்படி
2. தொண்டைமான் கோட்டை
3. கோச்சடைகள்ளிப்பாறை
4. புதுப்பாறை
5. கழுதக்குளமேடு
6. டாங்கிமேடு
7. லேபர் காலனி
8. பேத்தொட்டி டவுண்
9. சுண்டல் – காந்தி கிராமம்
10. போடிமெட்டு
11. குருசடி
12. காவும்படி
13. முள்ளன்தண்டு
14. காணல்முகப்பு
15. SDA பள்ளிக்கூடம் அருகில்

புதியதாக குளங்கள் அமைக்கக்கூடிய இடங்கள்

1. தேயிலைச்சரிவு
2. பத்தேக்கர்
3. பாலம் காலனி

புதியதாக தண்ணீர் தொட்டிகள் கட்ட வேண்டிய இடங்கள்:

1. பேததொட்டி
2. தளம்
3. வேட்டுவன்பாறை
4. டாங்கிமேடு
5. கூந்தப்பனைத்தேரி
6. கள்ளிப் பாறை

புதியதாக குழாய் கிணறுகள் அமைக்கக்கூடிய இடங்கள் :-

1. புத்தடி
2. சேரியார்
3. கூந்தப்பனைத்தேரி
4. கள்ளிப் பாறை
5. பள்ளிக்குன்று
6. ஆணையிரங்கல்
7. தேயிலை சரிவு
8. அமலா ஸ்டோர்
9. பாலம் காலனி
10. வேட்டுவன் பாறை
11. காவும் பாடு பாகம்
12. பேத் தொட்டி, சந்திப்பு
13. பண்ணையார் எஸ்டேட்
14. கோரம் பாறை
15. தொட்டிக்காணம் (கொற்றமலை பாகம்)
16. அரசு உயர்நிலை பள்ளிக்கூடம் சமீபம்
17. லேபர் காலனி

கல்வி

இந்தக் கிராமப் பஞ்சாயத்து கல்வித்துறையில் மிகவும் பின் தங்கிய நிலையிலுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து குடியேறிய தமிழர்களும், கோட்டயம், ஆலுவா, எர்ணாகுளம் போன்ற இடங்களிலிருந்து குடியேறியவர்களும் இந்தப் பஞ்சாயத்தில் வாழ்கிறார்கள். 1950ம் ஆண்டு முதல் பெரும்பாலான குடியேற்றங்கள் நடந்துள்ளது. பெரிதும் அனுகூலமற்ற காலநிலையிலும், வன விலங்குகளோடுள்ள போராட்டங்களின் மத்தியில் உண்ணும் உணவுக்கும், செய்யும் தொழிலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்த காரணத்தால் பிள்ளைகளின் படிப்பின் மேம்பாட்டைக் கருத இயலவில்லை.

1961ம் ஆண்டு இந்தப் பஞ்சாயத்தில் முதல் ஆரம்பப் பாடசாலை அரசுப் பள்ளியாக உருவாகியது. துவக்க கால கட்டங்களில் தமிழும், மலையாள மொழிகள் பயிற்றுவிக்கப்பட்ட போதிலும், கட்டிட வசதிகள் போதுமான அளவில் இல்லாத காரணத்தால் தமிழ் வகுப்புக்கள் தமிழ் வகுப்புக்கள் நிறுத்தப்பட்டது. பின் 1969ம் ஆண்டில் ஆரம்பப்பள்ளி நடுநிலைப்பள்ளியாகவும், 1979ம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாகவும் அங்கிகரிக்கப்பட்டது. இன்றைய நிலையில் இந்தப் பஞ்சாயத்திலுள்ள பள்ளிகளில் மிக உயர்ந்த பள்ளியாகும். இதுவுமல்லாமல் இந்தப் பஞ்சாயத்தில் ஒரு நடுநிலைப்பள்ளியும் (U.P.S) ஒரு ஆரம்பப் பள்ளியும் (L.P.S.) அங்கிகாரமில்லாத ஒரு ஆங்கில ஆரம்பப்பாடசாலையும் மட்டுமே உள்ளது.

நடுநிலைப்பள்ளி இந்தப் பஞ்சாயத்தின் இரண்டாம் வார்டில் பள்ளிக்குன்று என்னுமிடத்திலும், ஆரம்பப்பாடசாலை ஆறாம் வார்டில் எஸ்டேட் பூப்பாறை என்ற இடத்திலும், உயர்நிலைப்பள்ளி மூன்றாம் வார்டின் சாந்தன் பாறையிலும் இயங்கி வருகிறது. மேலுமுள்ள இந்தப் பஞ்சாயத்தின் ஐந்து (5) வார்டுகளிலும் கல்வி மையங்கள் இல்லை.

படிவம் I கல்வி மையங்களின் விபரம்

வரிசை எண்	பாடசாலைகளின் பெயர்	நிர் வாகம்	குழந்தைகளின் எண்ணிக்கை			S.C. S.T தாழ்த்தப்பட்டோர்			ஆசிரியர்கள்			ஆசிரியர் கல்வி தகுதி	
			ஆண்	பெண்	மொத் தம்	ஆண்	பெண்	மொத் தம்	ஆ ண்	பெ ண்	மொத் தம்	B.Ed. LTT	T.T.C
1	அரசாங்க மேல் நிலைப்பள்ளி சாந்தன்பாறை	அரசாங் கம்	143	130	273	39	39	78	6	5	11	6	5
2	எம்.ஜி.எம். நடுநிலைபள்ளி, தொட்டிகானம்	தோட் டம்	248	256	504	30	22	52	3	13	16	8	8
3	பஞ்சாயத்து ஆரம்ப பாடசாலை, பூப்பாறை	தோட் டம்	252	266	518	39	36	75	4	8	12	_	12
4	எஸ்.டி.எ. ஆங்கில பள்ளி, சாந்தன்பாறை	அங்கீகாரம் இல்லை	674	681	1355	114	112	26	15	32	47	14	25
மொத் தம்	மொத்தம்		674	681	1355	114	112	226	15	32	47	14	25

இந்த பஞ்சாயத்தின் பகுதிகளில் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 1355 ஆகும். இதில் 266 பேர் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் சமூகத்தை சேர்ந்தவர்கள். மேலும் ஸேளாபதி பஞ்சாயத்தில் இயங்கி வரும் மார்பெஸில் உயர்நிலைப் பள்ளியும் இராஜாக்காடு பஞ்சாயத்தில் N.R.சிட்டி என்ற இடத்தில் உள்ள S.N.V. உயர்நிலைப்பள்ளியும் ராஜகுமாரி பஞ்சாயத்தில் முரிக்கன் தொட்டியிலுள்ள எம்.ஜி.நடுநிலைப்பள்ளியும், சின்னக்கானல் பஞ்சாயத்தில் பெரியசானலில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட ஆரம்பப்பள்ளியிலும் தமிழ் நாட்டிலுள்ள சேர்ந்து சுமார் 400 மாணவ மாணவியர்

பயின்று வருகின்றனர். சாந்தபாறை உயர்நிலைப் பள்ளியின் வசதியின்மையும் தமிழ் மொழியின் வகுப்புகள் இல்லாத காரணத்தாலும் போதுமான ஆசிரியர்கள் இல்லாத சூழ்நிலைதான் மாணவர்களை வேறு பிரதேசங்களில் சென்று கல்வி கற்க வேண்டிய கட்டாய சூழ்நிலையை உருவாக்குகின்றது.

பஞ்சாயத்தின் பகுதியில் 5-க்கும் 14ம் இடைப்பட்ட வயதில் சுமார் 2160 குழந்தைகள் உள்ளனர். இதில் 1755 குழந்தைகள் மட்டுமே போதுமான கல்வி அறிவை பெற்றுவருகின்றனர். 180 குழந்தைகளை ஒரு பள்ளியிலும் சேர்த்திருக்கவில்லை. 225 குழந்தைகள் பல காரணங்கலாள் இடையில் படிப்பை நிறுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தங்கும் இடங்களில் அருகில் பள்ளிகள் இல்லாத காரணத்தாலும் தமிழ் மொழியில் கல்வி பயிலும் வசதிகள் இல்லாத காரணமும் மிகவும் குறிப்பிடத்தக்கது.

இந்த பஞ்சாயத்தில் ஒரு உயர் நிலைப்பள்ளிதான் உள்ளது. அதன் S.S.L.C. வெற்றி சதவீதம் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. காரணம் இடவசதியின்மை, தேவையான ஆசிரியர்கள் இல்லாமை, பெற்றோர்கள் கவணகுறைவு, பொருளாதார வாழ்க்கை தரம், இயற்கையின் விபரீதம், போன்றவைகள் ஆகும். பஞ்சாயத்தில் உயர்நிலை நிலைப்பள்ளியில் பாதுகாத்து வரும். S.S.L.C. தேர்ச்சி பட்டியலின் சதவீத படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

படிவம் 2 S.S.L.C. தேர்வு சதவீதம்

ஆண்டு	மொத்த மாணவர் மாணவியர்	முதல் வகுப்பு தேர்ச்சி	இரண்டாம் வகுப்பு தேர்ச்சி	மூன்றாம் வகுப்பு தேர்ச்சி	மொத்த தேர்ச்சி எண்ணிக்கை	தேர்ச்சி சதவீதம்
1982	31	_	_	_	9	
1983	35	_	_	_	18	
1984	46	_	3	12	15	
1985	35	2	3	6	11	
1986	37	_	6	14	20	
1987	47	_	2	10	12	
1988	32	4	2	15	21	
1989	43	1	1	15	17	
1990	39	_	3	7	10	
1991	36	_	2	4	6	
1992	29	_	1	3	4	
1993	18	2	3	7	12	
1994	21	_	1	7	8	
1995	20	_	_	3	3	
1996	21	_	_	4	4	

கடந்த நான்கு ஆண்டுகளாக பத்தாம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. பஞ்சாயத்தில் மற்ற இரண்டு நடுநிலைப்பள்ளிகளும் நல்ல பங்கு வகித்து வருகின்றது. பூம்பாறையில் செயல்பட்டு வரும் ஆரம்ப பாடசாலையின் நிர்வாகம் நல்ல நிலையில் இயங்கி வருகின்றது.

பஞ்சாயத்தில் பொதுவாக பாடசாலைகளின் நிலை பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

படிவம் 3 பள்ளிகளின் வசதிகள்

பள்ளிகளின் பெயர்	இட பரப்பளவு	அலுவலக அறை	பணியாளர் அறை	ஓய்வு கூடம்	சிறுநீர் கழிப்பறை	மல கழிப்பிடம்	சமையல் அறை	மின்சாரம்	குடிதண்ணீர்	விளையாட்டு மைதானம்	நூல் நிலையம்	பயன்ற நிலம்
அரசாங்க உயர் நிலைப்பள்ளி, சாந்தன்பாறை	5 ஏக்கர்	உண்டு	இல்லை	உண்டு செய லில்லை	உண்டு	உண்டு	உண்டு	உண்டு	கிணறு	25 செண்ட்	உண்டு செய லில்லை	3 ஏக்
எம்.எஸ்.எம். நடுநிலைப்பள்ளி தொட்டிகானம்	1 ஏக்கர்	உண்டு	உண்டு	இல்லை	உண்டு	உண்டு	உண்டு	உண்டு	கிணறு	50 செண்ட்	உண்டு	இல்ல
பஞ்சாயத்து ஆரம்பப்பள்ளி பூப்பாறை	1 ஏக்கர்	உண்டு	இல்லை	இல்லை	உண்டு	உண்டு	உண்டு	இல்லை	கிணறு	15 செண்ட்	இல்லை	இல்ல
எஸ்.டி.எ. ஆங்கிலபள்ளி சாந்தனபாறை	1 ஏக்கர் 27 செண்ட்	உண்டு	இல்லை	இல்லை	உண்டு	உண்டு	இல்லை	உண்டு	கிணறு	இல்லை	இல்லை	இல்ல

பஞ்சாயத்தின் மொத்த ஜனத்தொகையில், பகுதிக்கு மேல் வசிக்கும் தமிழர்களுக்கு தங்களுடை குழந்தைகளுக்கு, கல்வியறிவூட்ட இந்த பஞ்சாயத்தின் ஒரு ஒதுக்குப்புறத்தில் உள்ள பூப்பாறையி அமைந்துள்ள ஆரம்ப பாடசாலை ஒன்று தான். அதுவும் நான்காம் வகுப்பு வரை மட்டுமே உள்ளது தொடர்ந்துள்ள படிப்பிற்காக 30 கி.மீ. தூரத்தில் இருக்கக்கூடிய தேவிகுளத்திலோ அல்லது தமிழகத்திலே சென்று படிக்க வேண்டிய சூழ்நிலையுள்ளது. ஆகவே இடையிலே தங்களுடைய படிப்பை நிறுத்தி வ வேண்டிய கட்டாய நிலை காணப்படுகின்றது. தமிழ் படிக்க வேண்டிய குழந்தைகள் பெரும்பாண்மையே மலையாளத்தில் தங்களுடைய ஆரம்ப கல்வியை துவங்குகின்றனர். இதனால் பஞ்சாயத்தில் உள் பள்ளிகளில் கல்வி தரம் மிகவும் பாதிக்கின்றது. ஆகையால் இப்பஞ்சாயத்தில் படிக்கின்ற தமி குழந்தைகளுக்கு தேவையான வசதிகள் கிடையாது. அதுபோல் எல்லா பிரிவினர்க்கும் படிக்க கூடி மேற்படிப்பு வசதிகளோ தொழில் நூட்ப கல்வி வசதிகளோ யாதொன்றும் கிடையாது. கல்லூ படிப்பிற்காக 40 கி.மீ. தூரமுள்ள நெடும்கண்டம் M.E.S. கல்லூரியையே நாட வேண்டியுள்ளது. மேலு மதுரை, கோதமங்களம், முவாற்று புழை, தொடுபுழை போடி, மூலமட்டம் போன்ற இடங்களுக்கு கல்லூ படிப்பிற்காக செல்ல வேண்டியுள்ளது. இப்பஞ்சாயத்தில் டுட்டோரியல் கல்லூரி கூட கிடையா இவற்றினால் இப்பஞ்சாயத்தில் கல்வி நிலைமை மிகவும் பின்தங்கியருக்க காரணமாக அமைகின்ற

இந்த பஞ்சாயத்தில், பல பகுதிகளிலாக 18 பால்வாடிகள் இயங்கி வருகின்றன. ஆனா அவையெல்லாவற்றிற்கும் போதுமான விளையாட்டு இடங்களோ, வசதிகளோ இல்லை. பள்ளையாற்றி மலையாள ப்ளாண்டேசனின் ஒரு நர்சரி பள்ளி மட்டுமே உள்ளது. பஞ்சாயத்தில் 62% ஆண்களு 44% பெண்களும் கல்வியறிவு அற்றவர்கள். தோப்ப பிரதேசங்களாகயால் அவைகள் 4 அங்கீகார இல்லாமல் ஒரு கல்வி மையங்கள் அமைப்பது முடியாத காரியமாகின்றது. அது போலவே, வா சாலைகளோ, முதியோர் கல்வி மையங்களோ இல்லை.

கலை - விளையாட்டுகளில் இந்த பஞ்சாயத்தில் உள்ள பள்ளி செல்லும் குழந்தைகளுக திறமைகள் காட்ட முடிவதில்லை. இதுவரையிலும் ஜில்லா, மாநில அளவிலான போட்டிக

பங்கெடுக்க முடிவதில்லை. கலை - விளையாட்டுகளை பயிற்ச்சியழிக்கும் வகையில் போதுமான ஆசிரியர்கள் இல்லாமையும் பள்ளியில் விளையாட்டு பயிற்சி அளிக்க போதுமான விளையாட்டு மைதானங்கள் இல்லாமையும் தான் இதற்கு காரணம். கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது போலவே மற்று எல்லா துறைகளிலும் மாணவ மாணவிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

பிரச்சனைகள் :

1. மொத்த ஜனத்தொகையில் பாதிக்கு மேல் வருகின்ற தமிழர்களுக்கு தங்களுடைய குழந்தைகளுக்கு கல்வி அளிக்க போதுமான வசதிகள் இல்லை. இவர்கள் நடுநிலை கல்வி பயில வேண்டுமென்றால் 7 கி.மீ. தூரமும் உயர்நிலைப் பள்ளி பயில வேண்டுமானால் 30 கி.மீ. தூரமும் யாத்திரை செய்ய வேண்டும்.
2. சாந்தன் பாறை அரசாங்க உயர்நிலைப்பள்ளியில் போதுமான கட்டிட வசதிகள் இல்லை. இந்த பள்ளியில் ஆசிரியர்களது இடங்கள் காலியாக காணப்படுகின்றது. பகுதி நேர கல்வி முறையை முழு நேர கல்வியாக மாற்ற வேண்டும். (சிப்டு நிலை) சிறு வகுப்புகளில் மிக குறைந்தலவிலே ஆசிரியர்கள் தங்களுடைய நேரங்களை சிலவிட முடிகின்றது.
3. மேல் படிப்பிற்கோ, தொழில் நுட்ப கல்விற்கோ வசதிகள் இல்லை.
4. விளையாட்டு பயிற்சிக்கு தேவையான விளையாட்டு மைதானங்கள் இல்லை.
5. கலை - விளையாட்டு பயிற்சி வழங்குவதற்கு தேவையான பயிற்சியாளர்களின் இட ஒதுக்கீடு செய்வதில்லை.
6. எல்லா கல்வி சாலைகளுக்கும் சுற்றுபுற பாதுகாப்பு சுவர் இல்லை.
7. பஞ்சாயத்தில் புத்தடி, ராஜாப்பாறை பேத்தொட்டி தோண்டிமலை, பன்னையார் ஆனையிரங்கள் மூலத்துரை போன்ற இடங்களில் ஆரம்ப கல்விக்கு வாய்ப்பு இல்லை.
8. பெரும்பாலான குழந்தைகளும் தாய்மொழியான தமிழ் மொழிகளை விட்டு மலையாளம் பயில வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.
9. அறிவொளி மையங்களோ முதியோர் கல்வி மையங்களோ வாசக சாலைகளோ இல்லை.
10. பூப்பாறை பஞ்சாயத்தில் கல்வி கூடத்தில் போதுமான கட்டிட வசதிகள் இல்லை.

தீர்வுகள் :

1. சாந்தன் பாறை அரசாங்க உயர் நீதிப்பள்ளியில் 200 அடி நீளமுள்ள ஒரு கட்டிடம் கட்டி தமிழ் வகுப்பு இணை பிரிவுகள் ஆரம்பிக்கவும்.
2. பன்னையார் என்ற இடத்தில் ஒரு தமிழ் பிரிவு ஆரம்ப பள்ளி ஆரம்பிக்கவும்.
3. புத்தடியில் ஒரு தமிழ், மலையாள ஆரம்ப கல்வி மையம் அமைக்கவும், பேத்தொட்டியில் தமிழ் மீடிய ஆரம்ப பள்ளிக்கூடம் அமைக்க வேண்டும்.
4. சாந்தன்பாறை அரசாங்க உயர்நிலைப்பள்ளியோடு இணைந்து +2 வகுப்புகள் அனுமதிக்கவும்.
5. தொட்டிகாளம் எம்.ஜி.எம். நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தவும்.
6. அரசாங்க பள்ளிகளில் ஆசிரியர்களை தற்காலிகமாக நியமனம் செய்யும் அதிகாரம் கிராம பஞ்சாயத்திற்கு வழங்கவும்.
7. தொழில் - நுட்ப கல்வி வசதிகள் ஏற்படுத்தவும்.

8. பூப்பாறை பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியை உயர் நிலைப்பள்ளியாக்கவும் புதியதாக ஒரு கட்டிட கட்டவும்.
9. சாந்தன்பாறை அரசாங்க உயர்நிலைப்பள்ளியில் நடைமுறையில் உள்ள ஒரு நேர படிப்பை மாற்ற முழு நேர கல்வியாக மாற்றவும்.
10. சாந்தன்பாறை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு விளையாட்டு மைதானம் உருவாக்கவும்.
11. சாந்தன்பாறை உயர்நிலைப்பள்ளியிலும், புதுப்பாறை நடு நிலைப்பள்ளியிலும், சுற்று சுவர்கள் அமைக்க வேண்டும்.
12. சிறு வகுப்புகள் முதல் கலை - விளையாட்டு போன்றவற்றை பயிற்சியளிக்க தேவையான பயிற்சியாளர்களது இட ஒதுக்கீடு செய்யவும்.
13. நிலையான கல்வி சாலைகள் அமைக்கவும்.
14. ஆசிரியர், பெற்றோர் சங்கங்கள், மகளிர் சங்கங்கள் போன்றவற்றின் செயல்களை பலப்படுத்தவும்.
15. ஒரு ஆசிரியர் பயிற்சி மையம் (டீச்சர் ட்ரெயினிங் இப் பஞ்சாயத்தில் ஆரம்பிக்க வேண்டும்.

கலாச்சாரம்

(பாண்பாடு-விளையாட்டு பண்பாடு)

வேறுபல துறைகளில் இருந்து மாறுபட்ட ஒரு துறையான விளையாட்டு துறையைச் சேர்ந்தவர்களை வேறுபடுத்தி பார்ப்பதற்கு காரணம் பலருக்கும் உண்டு.

கலை, விளையாட்டுப் பண்பாட்டு கலாச்சார அரங்குகளில் அபிவிருத்தி விவசாய தொழில் பகுதியில் அபிவிருத்தி அல்லது முன்னேற்றத்திக்கான வழி ஏற்படும் என்று முன்னேறிய நாடுகளின் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

ஜனங்களின் ஆரோக்கிய நிலை மேம்படுத்துவதற்கும் அவர்களை விளையாட்டில் ஈடுபாடு உடைவராகளாக ஆக்கவும் சுறுசுறுப்புடன் செயல்படவும் ஓய்வு நேரங்களில் நல்ல பல சிந்தனைகள் மனதில் ஊன்றவும் வித்தியாசமான நல்ல குணநலங்களை ஆதரிக்கவும் அவர்களின் இயற்கை குணாதிசயங்களை கண்டு ஆளாக்கி மாற்றவும் இந்த துறையின் மூலம் சாதிக்கமுடியும்.

நமது நாட்டின் மகத்தான கலாச்சார பாரம்பரியம் மனித இதயங்களில் தானம் செய்ய வேண்டும், வித்தியாசமான மத ஆச்சாரமும் பலவிதமான அனுஷ்டானங்களும் நிறைந்த நமது ஒற்றுமை, கலாச்சாரத்தின் ஒற்றுமையிலும் உறுதியிலும் சரித்திர முக்கியத்துவம் உள்ளது.

கலாச்சார பொலிமையுடன் விளையாட்டு துறையில் பெருமைபடும்படி நமது நாட்டிற்கு ஒன்றும் இல்லை.

நமது பஞ்சாயத்தில் அதிக ஜனங்களும் கோட்டயம், எரணாகுளம் தமிழ் நாட்டில் மதுரை ஜில்லா ஆகிய இடங்களில் இருந்து குடியேறியவர்கள் மற்றும் அவர்களின் பின்காமிகளும் ஆவர்.

வித்தியாசமான மொழியும் கலாச்சாரமும் ஜாதிமுறையிலான பிரிவுகளும் சேர்ந்து கலந்த ஒருகலப்பு கலாச்சாரம் சேர்ந்ததாகவும் கூற முடியும்.

சாந்தன் பாறையில் ஜனவாச சரித்திரத்திற்கு ஏகதேசம் அரைநூற்றாண்டு கால அளவே உள்ள படியால்தான் கலாச்சார பண்பாடுகளை உடமை கூறுவதற்கு யாரும் முன் வரவில்லை. கலை கலாச் சார வழிமுறைகளில் இப்பகுதி மக்கள் மிகவும் பின் தங்கியுள்ளனர்.

தெய்வ வழிப்பாட்டு தளங்கள்.

ஹிந்து, கிறிஸ்டின், முஸ்லீம், ஆகிய விவாகத்தில்பட்டவர்கள்தான் இங்கு வசிக்கும் மக்கள் கூடுதலும் ஹிந்துக்கள் தான் அதிகம். அன்யோன்யமான பழக்கவழக்கங்களும் பரஸ்பரமான ஒற்றுமையுடன் பழகுவதாலும் எல்லோரும் தன்னம்பிக்கையோடும் மத ஒற்றுமையோடும் வாழ முடிகிறது.

பூ பாறையில் சிவன் கோவில், முருகன் கோவில், சாந்தன் பாறையில் கணபதி கோவில், முனீஸ்வரன் கோவில், கள்ளிபாறையில் மகாலஷ்மி கோவில், போத்தொட்டி கணபதி கோவில், மூலதரை கோவில், புத்தடி கோவில், சாந்தன் பாறை குழந்தை ஏசு தேவாலயம், தொட்டிகானம் ஸென் ஜோர்ஜ் பாக்கோபாய பள்ளி, ஸி.எம்.எஸ். பள்ளி, ஸ்லேம் குன்னுயாக்கோபாயபள்ளி, சேரியார் ஸி.எஸ்.ஐ. பள்ளி, பூப்பாற கத்தோலிகா பள்ளி, சாந்தன் பாறை ஜமாமஸ்ஜீத் முஸ்லீம்பள்ளி ஆகியவை இப்பஞ்சாயத்தின் முக்கிய தேவாலங்கள் ஆகும்.

இவ்வ அனைத்திலும் நடக்கும் திருவிழா மற்றும் பொது விசேஷ தினங்களில் இப்பகுதியில் உள்ள அனைத்து மக்களும் ஜாதி மத பேதமின்றி ஒன்றாக கலந்து கொள்வார்கள்.

கோவில் திருநாள் முன்னிட்டு நடக்கும் எல்லா விசேஷங்களிலும் கலை நிகழ்ச்சிகள் முக்கிய பங்கு இடம் பெரும்..

நிறுவனங்கள்.

இப்பஞ்சாயத்தில் பொதுவான விளையாட்டு மைதானமோ மக்கள் அனுதினம் கூடும் பொது இடமோ மற்றும் பட்டிமன்றங்கள் நடத்துவதற்கான பொது ஸ்தாபனங்களோ இல்லை. இப்பகுதியில் அனுதினம் செயல்படுவது இரண்டு பாடசாலைகள் மாத்திரமே.

பூ பாறை மேற்கு பகுதியில் செயல்பட்டுவரும் புலரி கலை, விளையாட்டு மன்றம் 1978ம் ஆண்டு பதிவு செய்ததாகும்.

இம்மன்றத்தின் வகையில் சொந்தமாக இரண்டு ஸெண்ட் பூமி உள்ளது.

110 உறுப்பினர்களை கொண்ட இம்மன்றத்தில் பெண், உறுப்பினர்கள் கிடையாது. நெகுருயுவக்கேந்திரத்தோடு உடன்பாடு ஏற்படுத்தவில்லை.

கிராமிகா என்ற தலைப்பில் கைஎழுத்து பிரதிகள் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மன்றத்தில் தொலைகாட்சிபெட்டியோ, வானொலி பெட்டியோ எதுவும் கிடையாது. திருவோணபண்டிகை தினங்களில் கலை மற்றும் விளையாட்டு போட்டிகளை நடைபெறும். பொதுவாக ஆண்டுவிழாவும் நடத்துவதுண்டு.

சாந்தன் பாறையில் பீபீஸ், கலை விளையாட்டு மன்றம் 1993ம் ஆண்டு பதிவுசெய்து வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றன. 50 உறுப்பினர்கள் இம்மன்றதிதில் உள்ளனர். பெண் உறுப்பினர்கள் இல்லை. தொலைகாட்சிபெட்டியோ மற்றும் வானொலி பெட்டியோ கிடையாது. திருவோணம் மற்றும் பண்டிகை தினங்களில் வெகு சிறப்பாக கலை மற்றும் விளையாட்டு போட்டிகள் நடத்துவதும் உண்டு.

இப்பஞ்சாயத்தில் II ஆம் வார்டில் பள்ளிகுன்னு என்ற இடத்தை தலைமையாக கொண்டு மூன்று மன்றங்கள் பலமுறையாக பதிவு செய்து செயல்பட்டு வந்தன. இருப்பினும் இதற்கென்று சொந்தமாக கட்டிடம் இல்லாமையால் மன்றத்தின் செயல்கள் நிலைத்து விட்டன.

அங்கே திருவோண குழுவினர்கள் முன்னிலையில் ஆண்டுதோறும் கலை மற்றும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்படுகிறது.

வாசக சாலைகள்

சாந்தன்பாறை பஞ்சாயத்து வாசகசாலையில் மொத்தம் 962 புத்தகங்கள் மட்டுமே உள்ளன. அவையில் கூடுதலானவை நாவல்களும் சிறு கதை புத்தகங்களும்தான், மன்றத்தின் 231 உறுப்பினர்களில் பெண் உறுப்பினர்கள் 10 பேர்.

புத்தக வினியோகத்திற்கும் மன்றத்தில் ஊழியர் எவரும் இல்லை.

மன்றத்தின் செயல்படும் நேரம் பிற்பகல் 3மணி முதல் இரவு 7மணி வரையில், இருப்பினும் படிப்பதற்கு வசதி மிக குறைவு, தொலைகாட்சியினால் பொது ஜனங்களுக்கு எந்தவித பிரயோஜனமும் இல்லை. தேவையுள்ள பிரதிகள் மன்றத்திற்கு கிடைப்பதில்லை. பிரதி மாத புத்தக வினியோகத்தில் 120 மட்டுமே கிடைக்கிறது.

பூபாறை புலரி கலை விளையாட்டு மன்றம் தொடங்கிய 1948ல் மன்றத்தில் 350 புத்தகங்கள் மட்டும் உள்ளன. பிரதிமாதம் 75 புத்தகங்கள்தான் வினியோகிக்கபடுகின்றன. தேவையுள்ள பிரதிகள் கிடைப்பதில்லை.

நாளிதழ் வார இதழ்.

இப்பஞ்சாயத்தின் எப்பகுதியிலும் பிரதிகள் அச்சாகுவது கிடையாது.

பஞ்சாயத்தில் பொதுமக்கள் வசிக்கும் நூல்கள் கூடுதலும் தமிழ்நாட்டில் இருந்தும் கோட்டயம், எரணாகுளம், ஆகிய பிரதேசங்களில் உள்ளவைதான்.

இங்கே மக்கள் மத்தியில் பிரபலமான நாளிதழ், வாரஇதழ் ஆகியவையின் பட்டியல் கீழே குறிப்பிட்டுள்ளது.

நாளிதழ், வாரஇதழ்

1.	மலையாள மனோரமா	150
2.	மாத்ருபூமி	121
3.	தோஸபிமானி	50
4.	சந்திரிகா	5
5.	மங்களம்	3
6.	கேரளா கவ்மதி	45
7.	ஜென்மபூமி	1
8.	இந்தியன் எக்ஸ்பிரஸ்	28
9.	தினதந்தி (தமிழ்)	28
10.	தினமலர்	26
11.	தினமணி	4
	மொத்தம்	461

வார ஏடுகள்

1.	மலையாள மனோரமா	300
2.	மாத்ருபூமி	8
3.	மங்களம்	300
4.	கேரளாகவ்மதி	10
5.	சித்திரபூமி	4
6.	சினிமா	10
7.	தொழில்வார்த	30
8.	தி வீக்	2
9.	ராணி	100
10.	நக்கீரன்	80
11.	ஜுனியர்விகடன்	60
12.	ஆனந்தவிகடன்	15
13.	குமுதம்	40
14.	மாலைமதி	30
15.	கல்கண்டு	15
	மொத்தம்	1004

மாதஇதழ்

1.	கேஸரி	300
2.	ராணிமுத்து	50
3.	ராணி காமிக்ஸ்	100
	மொத்தம்	450

இப்பஞ்சாயத்தில் படிப்பு ஆர்வம் மிக குறைவே, பெண்கள் பொதுவாக படிப்பதில் ஆர்வம் **மிக குறைவுதான்.**

அறிவுபூர்வமான படிப்பிலும் மனவளர்ச்சி முன்னேற்ற கல்வி அறிவிலும் உள்ள நூல்கள் இங்கே கிடைப்பது அரிது.

பஞ்சாயத்தில் இலக்கியவாதிகள் குறைவுதான். மேடை நாடகமன்றங்களோ, தன்நிலை தொழில் மன்றங்களோ கிடையாது. பஞ்சாயத்தில் வசிக்கும் மக்கள் நல்ல கலை ரசனை உள்ளவர்கள். குறிப்பாக சினிமா, இப்பஞ்சாயத்தில் பூ பாறையில் ஒரு சினிமா, தியேட்டர் (அரங்கு) உள்ளது. சுமார் 600பேருக்கு சொந்தமாக தொலைகாட்சி பெட்டி உண்டு. பஞ்சாயத்தில் வீடியோ மற்றும் பிலிம் அமைப்புகளோ கிடையாது.

பஞ்சாயத்தில் கல்வி சாலைகளில் கலை மற்றும் விளையாட்டு போன்ற விசயங்களில் அதில் பயில்வோருக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை.

மேலும் உபஜில்லா அடிப்படையில் மாணவர்கள் வெளியளவில் போட்டிகளில் கலந்து கொள்ள தகுதியற்றவர்களான பரிதாப நிலை உள்ளது.

பிரச்சனைகள்

1. சாந்தன் பாறை பஞ்சாயத்தில் ஒரு இடத்தில் போதுமான பொது குளியல் அறைகள் கிடையாது. கல்வி கூடங்களில் விளையாட்டு மைதானங்கள் மிகக்குறைவு.
2. கேரளா உல்ஷவம் என்ற மாநில தேசிய நிகழ்ச்சிகளில் பங்குபெறுவதைத் தவிர்த்துவிடுகின்றனர்.
3. கலை கலாச்சாரம் மற்றும் விளையாட்டு விசயங்களில் பெண்கள் சரியான பங்கு வகிப்பதில்லை.
4. கலை மற்றும் விளையாட்டுகள் பயில்வதற்கான சவுகரியங்கள் மிககுறைவு.
5. வாசகசாலையின் செயல்பாடுகள் மந்தமாக உள்ளது. அங்கு சென்று பொது நூல்களை பயில மக்கள் முன் வருவதில்லை.
6. இப்பஞ்சாயத்தில் பொதுவாக கல்வி அறிவு மிக குறைந்தவர்காளகவே உள்ளனர்.
7. கலை கலாச்சாரம் மற்றும் பண்பாட்டு ஸ்தாபனங்கள் முன்னேற்றம் அடைவதற்கோ அல்லது அதை நிலைநிருத்தவோ இப்பகுதியில் உள்ள இளைஞர்கள் முன் வருவதில்லை.

அறிகுறிகள்

1. எல்லா வார்டுகளிலும் பண்பாட்டு கழகங்கள் உருவாக்க வேண்டும். வார்டில் பதிவு செய்துள்ள மன்றங்கள் / கலை குழுவினர்கள் / பெண்கள் மேம்பாட்டுகுழு / ஆகியோருக்கு இலவசமாக இருப்பிட வசதி செய்து கொடுக்கவும்.
2. எல்லா வார்டிலும் பண்பாட்டு மையத்துடன் 1 ஏக்கர் விளையாட்டு மைதானம் உருவாக்க வேண்டும். இதற்கு இப்பகுதி ஜனபிரதிநிதிகளை பொறுப்புடையவர்களாக நியமிக்கவும்.

3. பாடசாலைகளுக்கு தேவையான விளையாட்டு திடல் ஏற்படுத்த வேண்டும். L-P-U-P- நிலையில் உள்ள பள்ளிகளில் விளையாட்டு துறையில் தேர்ச்சி பெற்றவர்களை நியமித்தல் வேண்டும்.

4. சுலபமான கலை வளர்ச்சிக்கு பஞ்சாயத்தில் கலை பயிலும் ஸ்தாபனம் உருவாக்க வேண்டும்.

5. வாரத்தில் ஒரு முறை பள்ளியில் கலையின் வளர்ச்சிக்கு தேர்சிபெற்ற கலை நிபுணர்களை நியமிக்கவும், இதற்கு தேவையான நிதியுதவியை பஞ்சாயத்தில் இருந்து வழங்க வேண்டும்.

6. பஞ்சாயத்தில், நடுத்தர விளையாட்டு அரங்கம் ஏற்படுத்த வேண்டும்.

7. பஞ்சாயத்தில் நிலையான வாசகசாலை ஊழியரை நியமிக்கவும், அறிவுபூர்வமான நூல்கள் கிடைக்க வகை செய்ய வேண்டும். எல்லா வார்டுகளிலும் குறிப்பிட்ட நாளில் வந்தடையும் நடமாடும் படிப்பகங்கள் உருவாக்க வேண்டும்.

8. பதிவு பெற்ற கலை மற்றும் விளையாட்டு ஸ்தாபனங்களுக்கு செயல்திறன் ஊக்கத்தொகை வழங்க வேண்டும். T.V. மற்றும் ரேடியோ ஆகியவைகள் அனுமதிக்க வேண்டும்.

9. சுற்றுலா வளர்ச்சி மற்றும் அதனுடன் சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு ஊக்கத்தொகை அனுமதிக்க வேண்டும்.

10. கபடி, கைபந்து, (வாலிபால்) கயிறு இழுத்தல் போன்ற விளையாட்டு துறையில் தேர்ச்சி பெற்றவர்களை ஒன்று சேர்க்க வேண்டும். போட்டிகள் (டூர்னமென்ட்) நடத்துவதற்கு தேவையான பரிசு பொருள்கள் மற்றும் நிதியுதவிகளும் அனுமதிக்க வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர், மலை ஜாதியினர்

நலம்

இந்தப்பஞ்சாயத்தில் 2687 பேர் தாழ்த்தப்பட்டவர்களும், 141 பேர் பழங்குடியினரும் இருக்கின்றனர். மொத்த மக்கள் தொகையில் 19 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களும், 0.1 சதவீதம் மட்டும் பழங்குடியினர் வாழ்கின்றனர். இந்த இனத்தவரின் விகிதாச்சார வார்டு அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வார்டு எண்.	தாழ்த்தப்பட்டவர்கள்		பழங்குடியினர்	
	ஆண்	பெண்	ஆண்	பெண்
1.	182	170	-	-
2.	63	61	-	-
3.	337	313	-	-
4.	14	14	5	5
5.	51	53	6	6
6.	241	237	7	10
7.	26	28	-	-
8.	448	449	49	53
மொத்தம்	1362	1325	67	74

கிராம நல (I.R.D.P.) அபிவிருத்தித் திட்டக் கணக்கெடுப்பின்படி இப்பஞ்சாயத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள தாழ்த்தப்பட்ட, பழங்குடியினரின் குடும்பங்களின் எண்ணிக்கையும் IRDP மூலம் உதவிபெற்ற குடும்பங்களின் எண்ணிக்கையும் அடுத்து வருமாறு;

வார்டுநம்பர்	குடும்பங்கள்	உதவிபெற்றவர்கள்
1	130	80
2	100	60
3	100	40
4	7	14
5	29	36
6	105	16
7	61	10
8	145	18
மொத்தம்	677	274

தாழ்த்தப்பட்டவர்களுக்கான காலனிகள் சுண்டல், காந்திகிராம் (IHDP) பத்து ஏக்கர் காலனியும், அறிவிக்கப்பட்டுள்ளது. சுண்டல் காலனி எட்டாம் வார்டிலும், பத்து ஏக்கர் காலனி மூன்றாம் வார்டிலும் உள்ளது. இக்காலனிகளைப்பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	பத்து ஏக்கர்காலனி	சுண்டல் காலனி
1. மொத்தக் குடும்பங்கள்	18	60
2. பெண்கள் எண்ணம்	41	152
3. ஆண்கள் எண்ணம்	30	148
4. சொந்த நிலம் உள்ளவர்கள்	18	42
5. சொந்த நிலமில்லாதவர்கள்	-	18
6. வீடு இல்லாத குடும்பங்கள்	8	18
7. கக்கூஸ் இல்லாத குடும்பங்கள்	-	25
8. வேலை செய்கிறவர்கள் எண்ணம்	33	210
9. பழக்காதவர்கள் எண்ணம்	3	90
10. டிரைவிங் பயிற்சி பெற்றவர்கள்	8	-
11. IRDP உதவி பெற்றவர்கள்	10	22
12. பிளாக் வழியாக வீடு கட்டியவர்கள்	5	30
13. தொழில் உபகரணங்கள் பெற்றவர்கள்	3	-

Employment Assurance Schemeல் தேவிகுளம் பிளாக்கின் மூலமாக நீர் தேக்கங்கள் கட்டி அத்தண்ணீரை விவசாயத்திற்கு உபயோகப்படுத்தக்கூடிய ஓர் திட்டம் சுண்டல் காந்திகிராம் IHDP காலனியில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. 4.5 லட்சம் ரூபாய் இத்திட்டத்திற்காக செலவழிக்கப் பட்டுள்ளது.

இப்பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களில் 75% சதம் பேர்களும் கல்வியறிவற்றவர் களாவர். நமது பஞ்சாயத்திலுள்ள பள்ளிகளில் படிக்கின்ற மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

பள்ளியின்பெயர்	SC/ST பிரிவினரின் மாணவ, மாணவியர் எண்ணிக்கை		
	ஆண்	பெண்	மொத்தம்
அரசு உயர்நிலைப்பள்ளி, சாந்தன் பாறை	39	39	78
M.G.M.U.P. ஸ்கூல், தொட்டிக்கானம்	30	22	52
பஞ்சாயத்து ஆரம்பப்பாட சாலை, பூப்பாறை	39	36	75
S.D.A. இங்கிலீஷ் மீடியம் பள்ளி, சாந்தன்பாறை	6	15	21

மேல்படி காலனிகள் இல்லாமல் தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மக்கள், டாங்கிமேடு பூப்பாறை, சேரியார், கூந்தப்பனைத்தேரி சென்ட்ரல் (நடு) தொட்டிக்கானம், தோண்டிமலை பேத்தொட்டி, ஆனயிரங்கல் போன்ற இடங்களில் வாழ்கிறார்கள். இங்குள்ள காலனிகள் அரசா அங்கீகரிக்கப்படாத காலனிகளாக உள்ளது. பழங்குடியினர் முள்ளந்தண்டு, ஆடு விழுந்தான் கோழிப் பண்ணைக்குடி போன்ற இடங்களில் வாழந்து வருகின்றனர்.

மலைவாழ் மக்கள் ஆடு விழுந்தான் குடியில்அதிகமாக வாழ்கிறார்கள்.

பிரச்சனைகள்

1. சொந்தமான இடமும், வீடும் இல்லாத தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் அதிகமாகவுள்ளன
2. IRDP பணஉதவி பெற தகுதியுள்ளவர்களுக்குக் கிடைக்கவில்லை. தகுதியள்ளவர்க தட்டியெடுக்கின்றனர்.
3. காலனிகளின், பாதை, குடிநீர், கக்கூஸ், மருத்துவம், மின்சாரம், கல்வி போன்ற அடிப்பட வசதிகள் கிடைக்காத இடங்களும் உண்டு.
4. தாழ்த்தப்பட்டோர், தாழ்த்தப்பட்ட மலை சாதியினர் காலனிகளில் முழுமையான அபிவிருத்
களும், எல்லா அரசுத்துறைகளின் செயல்பாடுகள் சரியில்லை. அவைகளுடைய முழுமையா செயல்பாடுமில்லை.
5. இச்சாதியினரில் படிப்பறிவில்லாதவர்கள் இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் பள்ளிக்கு வர நாட்கள் கூடிக்கொண்டே வருகிறது.
6. சொந்தமான தொழில் செய்ய திட்டங்கள் தீட்டப்படவில்லை.
7. சமுதாய சமத்துவங்கள் நிலை நிற்கின்றன. விவசாய, ஊராட்சிமையம் தாழ்த்தப்பட்ட களுக்கு பயனளிப்பதில்லை.

தீர்வுகள்

1. சொந்தமாக இடமில்லாதவர்களுக்கு இடமும், வீடு இல்லாதவர்களுக்கு வீடும் கொடுக்கப் படவேண்டும்.
2. காலனிகளில் எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்க வேண்டும்
3. கேரியார், சென்ட்ரல் தொட்டிக்கானம் காலனிகளில் தனிஅறைகள் கட்டி தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கவேண்டும்.
4. எல்லாக் காலனிகளிலும் மாதர் சங்கம் குழந்தைகள் காப்பகம் இவைகளின் செயல்பாடுகள் உறுதிப்படுத்தவேண்டும்.
5. கேரியார், சென்ட்ரல், தொட்டிக்கானம், டாங்கி மேடு, பூப்பாறை லட்சம் வீடு, பூப்பாறை குருசடி, ஆனயிரங்கல், தோண்டிமலை, பேத்தொட்டி போன்ற இடங்களிலுள்ள காலனிகளுக்கு அரசு அங்கீகாரம் வழங்க வேண்டும்.
6. SC/ST பிரிவில் மட்டவர்களுக்கு எழுத்தறிவு மையங்கள் அமைக்க வேண்டும். படிப்பவர்களுக்கு படிக்கும் காலங்களில் பொருளாதார உதவி செய்ய வேண்டும்.
7. காந்தன்பாறை, தொட்டிக்கானம், பூப்பாறை போன்ற இடங்களில் தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவ மாணவிகளுக்கு தங்கிப் படிப்பதற்கான இலவச விடுதிகள் கட்டித்தர வேண்டும்.
8. S.S.L.C வகுப்பில் தோல்வியடைந்த மாணவ மாணவிகளுக்கு, மீண்டும் படிப்பதற்காக தேவைப்படும் பண உதவி செய்யவும்.
9. தோண்டிமலையில் நியாயவிலை கடை (Ration shop) அமைக்கவேண்டும்.
10. தாழ்த்தப்பட்ட பழங்குடி விவசாயிகளின் மேம்பாட்டிற்கு தேவையான விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவேண்டும்.
11. விவசாய மையத்தோடு சேர்ந்துள்ள ஆக்ரோ சர்வீஸ் சென்ட்ரலின் செயல்பாடுகளில் பலனளிக்கக்கூடிய மேற்பார்வை உறுதிபடுத்தவும், விவசாயத்துறையினின்றும் ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்குத் தேவையான விவசாய பொருட்கள் வழங்குவது மட்டுமின்றி, பயிர் பராமரிப்பு செலவு அனுமதிக்க வேண்டும்.
12. காலனிகளில் பகலுணவு (daycave) மையங்கள் ஏற்படுத்த வேண்டும்.
13. ஒவ்வொரு வார்டுகளிலும் 4 சென்ட் நிலம் வழங்கும் திட்டத்தின் படி இடம் வழங்க வேண்டும்.

பெண்கள் நலம்

பஞ்சாயத்தில் 6,921 பெண்களும் 6,958 ஆண்களும் இருக்கின்றார்கள் என்றாலும் வாழ்க்கையில் எல்லா பகுதிகளிலும் பெண்களுக்கும், ஆண்களுக்கும் உள்ள வித்தியாசம் குறைவாகத் தெரிவதில்லை கூடுவதாகவே தெரிகிறது. அதோடு பெண்களுக்கு எல்லா இடங்களில் அநீதி நேரிடுகிறது பொதுவான செயல்பாட்டின் பல பிரசேசங்களில் பெண்களுடைய ஒத்துழைப்பும் மிகக் குறை பஞ்சாயத்து அளவில் செயல்படுகின்ற வெகு ஜன ஸ்தாபனங்களில் முக்கிய நிர்வாகிகளில் பெண்க யாருமேயில்லை. பெண்கள் யாருமே இல்லை என்பதுதான் உண்மை. பெண்களுக்கென கூட்டுற வங்கி இல்லை வேலை வாய்ப்பில்லாதவர்களில் கூடுதலும் பெண்களாகும்.

தொழில் துறையில் கூடுதலும் பெண் விவசாய தொழிலாளிகளே கூடுதலும் இருக்கின்றார்க விவசாயத் தொழிலாளிகளில் 70% பெண்களாகும். விவசாயம், தொழில், வியாபாரம், போக்குவரத்து விலங்கின பாதுகாப்பு முதலிய தொழில் பிரதேசங்களில் பெண்களின் ஒத்துழைப்பு வெறும் பெயரளவி மட்டுமே உள்ளது. மற்ற இதர பொது தொண்டு பிரதேசங்களில் கல்வி துறையில் மட்டு பெண்களுக்கு முன்னுரிமையுள்ளது. சாந்தன்பாறை பஞ்சாயத்தில் பல ஸ்தாபனங்களில் பெண்க ஆண்களின் ஒத்துழைப்பு எவ்வாறு என்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	ஸ்தாபனங்கள்	ஸ்தாபனங்களின் எண்ணம்	வேலை செய்பவர்களின் எண்ணிக்கை			பெண்கள் தலைமையிலுள்ள ஸ்தாபனங்களின் எண்ணம்
			ஆண்கள்	பெண்கள்	மொத்த வேலையாட்கள்	
1	சர்க்கார் ஆபீஸ்கள்	21	118	8	126	-
2	போஸ்ட் ஆபீஸ்கள்	6	14	3	17	-
3.	பள்ளிக்கூடங்கள்	4	24	31	55	1
4	கூட்டுறவு	4	6	4	10	2
5	பாங்குகள்	2	11	2	13	-
6	அரசு மருத்துவமனை	2	9	7	16	-
7	தனியார் மருத்துவமனை	3	2	11	3	1
8	எஸ்டேட் ஆபீஸ்கள்	4	62	11	73	-
9-	மற்ற ஸ்தாபனங்கள்	4	9	_	9	-
		50	255	67	322	4

இங்கு பெண்கள் 20% மட்டுமேயாகும் ஆண்களுக்கு வேலையும், பெண்களுக்கு கல்யாணமும் என்ற முறை சமுதாயத்தில் நிலவில் உள்ள முறையாகும். பெண்கள் சமுதாயத்தில் இறங்கி செயல்படுவதற்கும் சொந்தமாக தொழில் துறைகளில் அணிசேரவும் சொந்தம் குடும்பத்திலிருந்து எதிர்பார்ப்புகளாகும்.

பஞ்சாயத்தில் ஆண்களை விட பெண்களின் கல்வித்தரம், எழுத்தறிவும் மிகவும் குறைவாகும். பெண்களின் தாக்குதல், பெண் கொடுமை இந்த காரியங்களில் சாதாரணமாக சமமாக இருந்தாலும், தொடர்ந்து வழக்கில் இருந்து வருகிறது. வேலை செய்து சம்பாதிக்ககூடிய பெண்களுக்கு கூட குடும்பத்தில் பொருளாதார சுதந்திரம் இல்லை பல தொழில் மேகலைகளில் ஒரே வேலை செய்பவர்களாக இருந்தாலும், ஆண்களுக்கு கொடுக்கக்கூடிய சமமான சம்பளம் கொடுப்பதில்லை, தோட்டம் தொழிலாளி வேலைகளில் அடிப்படை கூலி ஆண்களுக்கு 60 ரூபாயாக இருக்கும் போது பெண்களுக்கு 45 ரூபாய் மட்டும் வழங்கப்படுகிறது. கட்டிட அமைப்பு துறையிலும் கடினமான வேலைக்கு 80 ரூபாயும் பெண்களுக்கு 70 ரூபாயும் நிலவில் சம்பளமாக உள்ளது.

வேலை இல்லாத பெண்களுக்கு, கணவனையும், குழந்தைகளையும், தாய், தந்தைகளையும் கவனித்தல், வீட்டு வேலைகள் முதலிய வேலைகள் செய்வது மட்டுமல்லாமல், ஆடு மாடுகளை பராமரிப்பது, விறகு சேகரிப்பது, கடைகளில் போய் பொருட்கள் வாங்குவது போன்ற கடினமான வேலைகள் செய்ய கூடிய நிலை உருவாகிறது. வேலை செய்கின்ற ஆண்கள் தங்களின் வேலை நேரம் போக குடும்பகாரியங்களில் அஜாக்கிரதை காட்டும் போது அந்தக் காரியங்களை பார்த்து நடத்திச் செல்வது பெண்களாகும். பெண்களின் சம்பாத்தியங்கள் குடும்பத்தில் முழுமையாக உபயோகப்படுத்தும் போது ஆண்களின் சம்பாத்தியம், குடிப்பழக்கத்திற்கும், மற்றும் பல தவறான காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. கடின உழைப்பு செய்வதன் மூலம் பெண்கள் பொருளாதார அடிப்படையில் செய்கின்ற தொண்டு என்று கருதப்படவில்லை. கஸ்ட்டப்படுகின்ற பெண்களுக்கு வேறு எந்த காரியத்திற்கும் நேரமில்லமல் போய் விடுகிறது.

பிரச்சனைகள் :

1. பொது அரங்கில் பெண்கள் பின்தங்கியவர்களாகும் சமுதாய, அரசியல், பண்பாடு அரங்குகளில் பெண்களின் பங்கு குறைவாகும்.
2. பெண்களில் தலைமையான செயல்பாட்டை கொண்டு செல்ல எந்த வித முயற்சிகளும் இல்லை.
3. பெண்களில் வேலையில்லாதவர்கள் மிகவும் அதிகமாகும்.
4. மக்கள் தொகையின் அடிப்படையில் பெண்களுக்கான முன்னுரிமை கொடுப்பதற்கு அரசியல் கட்சிகள் எந்தவித முயற்சியும் காட்டுவதில்லை.
5. பெண்களுக்கு உரியதான, ஆரோக்கியம், தொழில், சமூக ரீதியான பிரச்சனைகளுக்கு வாய்ப்புகள் உண்டாவதில்லை.

வாய்ப்புகள் :

1. எல்லா வேலைகளிலும் வேறுபாடுகள் இல்லாமல், உழைப்பிற்கு தகுந்த ஊதியம் என்பதை நடைமுறைப்படுத்த வேண்டும்.
2. எல்லா வார்டுகளிலும் மாதர் சபைகள் உருவாக்க வேண்டும்.
3. சொர்ந்த இடமும், கட்டிடமும் இல்லாத அங்கன்வாடிகளுக்கு அடிப்படை வசதிகளுடன் சொந்தமான கட்டிடம் கட்ட வேண்டும்.
4. P.H.C.யில் பெண்களுக்கான வியாதிக்கு தக்கவாறு சிறப்பாளர்களை நியமிக்க வேண்டும்.

பொது இடங்களில் பெண்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய வேண்டும்.

5. வெகுஜன சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், கலை, கலாச்சார பண்பாட்டு ஸ்தாபனங்கள் முதலியவை பதிவு செய்யும் போது ஒரு குறிப்பிட்ட அளவு பெண்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்; என்ற நிபந்தனை ஏற்படுத்த வேண்டும்.
6. பெண்களுக்கு பஞ்சாயத்தில் தனியான விளையாட்டு மைதானம், .லலித கலை கூடமும் அமைக்க வேண்டும். நடமாடும் நூலகம் ஏற்படுத்த வேண்டும்.
7. பெண்களுக்கான ஒரு கலை, கலாச்சார பண்பாட்டு குழுவிற்கு பஞ்சாயத்து அடிப்படையில் உருவாக்கவும்.
8. கோழி வளர்த்தல், காளான் விவசாயம், காய்கறி விவசாயம், ஆடு, மாடு வளர்த்தல், பன்றி வளர்த்தல் மற்றும் இதர விவசாயங்கள் முதலிய விவசாய பிரதேசங்களுக்கு பெண்களை முன்னுரிமை கொடுக்க வேண்டும், அதற்காக பொருளாதார உதவிகள் செய்து கொடுக்க வேண்டும். மேற்படி யூனிட்டுகள் ஒவ்வொன்றும், ஒரு வார்டில் 10 எண்ணம் வீதம் தொடங்கவும் இதன் தயாரிப்பவர்களுக்கு தேவையான பயிற்சி கொடுக்கவும்.
9. பெண் குட்டிகளுக்கு வாகன ஓட்டுதல், தையல், நர்சிங், ஸ்டெனோகிராபி, கம்ப்யூட்டர், காலணி செய்யுமிடம், எலக்ட்ரிக்கல்ஸ் முதலிய காரியங்களில் தனியான ரீதியில் கல்வி நிலையங்கள் தொடங்கவும்.
10. மகளிர் தொழில் தொடங்குதலை கண்டுபிடிப்பதற்கும் புத்துணர்வு கொடுப்பதற்கும், தேவையான மேகலைகளில் தேர்ந்தெடுக்கவும், உதவி செய்யவும், மகளிர் தொழில் கருத்தருங்குகள் நடத்தவும்.
11. மகளிர்களுக்கான பல தரப்பட்ட கூட்டுறவு வங்கிகள் உருவாக்கவும்.
12. மகளிர்களை சந்தைகளிலும் (மார்க்கெட்) மற்றமுற்ற இடங்களில் உதவுவதற்காக மாவட்ட அளவிலான மாவட்ட வங்கி ஏற்படுத்தவும்.
13. மகளிர் வளர்ச்சி கார்ப்பரேஷனின் ஒரு அலுவலகம் நெடுங்கண்டத்து தொடங்கவும்.
14. எல்லா வார்டுகளிலும் DWCRA யூனிட்டுகள் தொடங்கவும்.
15. பூரண மதுவிலக்கை நடைமுறைப்படுத்தவும், கள்ளச்சாராயத்தையும், மயக்க மருந்துகளின் உபயோகத்தையும் கண்டிப்பாய் தடுத்து நிறுத்தவும்.
16. மகளிர் காவல் நிலையம் தொடங்க வேண்டும்.

கூட்டுறவு

1970ல் ஆரம்பித்த சாந்தன்பாறை கூட்டுறவு வங்கி இந்த பஞ்சாயத்தில் முதன்முதலாக ஸ்தாபனம் ஆகும். இது இல்லாமல் சாந்தன்பாறையை மையமாக வைத்து இந்த ஸ்தாபனம் 7 பஞ்சாயத்துகளின் கீழ் சாந்தன்பாறை கார்டமம் மார்கெட்டிங் கூட்டுறவு சங்கம், பஞ்சாயத்தில் 2,3 வார்டுகளாக பிரித்து கூட்டுறவு பால் பண்ணைகள் இப்பஞ்சாயத்தில் கூட்டுறவு சங்கங்கள் ஆகும்.

	கூட்டுறவு சங்கம்	தொடங்கிய ஆண்டு	தற்போதைய அங்கத்தினர்கள்	ஊழியர்	மொத்த மூலதனம்	ஆரம்ப மூலதனம்	லாபம் நஷ்டம்
1.	சாந்தன்பாறை கூட்டுறவு வங்கி	1970	4150	6	6.19540	71,62,000	லாபம்
2	சாந்தன்பாறை கார்டமம் மார்க்கெட்டிங் கூட்டுறவு சங்கம்	1973	546	2	2,74,000	8,74,000	நஷ்டம்
3.	சாந்தன் கூட்டுறவு பால் பண்ணை	1990	77	2	2820	5000	லாபம்
4.	பள்ளி குன்று கூட்டுறவு பால் பண்ணை	1995	118	2	1180	19105	லாபம்

கூட்டுறவு வங்கி நஷ்டத்திலிருந்து விடுபட்ட முன்னேறும் வேளை, கண்டமம் மார்கெட்டிங் கூட்டுறவு மையம் கூடுதலான நஷ்டத்தில் போய் கொண்டிருக்கிறது. கூட்டுறவு வங்கி 95-96 ஆம் ஆண்டுகளில் 59523.49 ரூபாய் லாபத்தை தந்தது என்றாலும் சென்ற ஆண்டுகளில் மிக கூடுதல் நஷ்டத்தை வங்கி அடைந்தது. வாங்கியவர்கள் திரும்ப பணம் அடைக்காத குறையால் ஏற்ற நஷ்டம் 3,17,065.10 ரூபாயாகும். இவ்வங்கி ரூபாய் 2,00,000 வரையிலான சீட்டுகளையும் தொடங்கியது.

குறுகிய கால கடன், இடைக்கால கடன், நீண்ட கால கடன்கள் IRDP கடன்கள் சாதாரண கடன்கள் வியாபார கடன்கள் தங்கத்தின் மேல் கடன் போன்ற இனங்களில் 60,64,221 ரூபா கொடுத்து உதவியிருக்கிறது. கொடுத்த கடன்களை காலவதி தீர்ந்தும் கிடைக்காத ரூபாய் மொத்தம் 7,09,941 ரூபாயுமாகும். மொத்த கடன்களுடைய 11%ம்பாக்கி திரும்ப அடைத்தால்தான் வங்கி நல்ல முறையில் இயங்கும்.

சாந்தன்பாறை கூட்டுறவு வங்கி கொடுத்த கடன்கள்

	குனம்	ரூபாய்
a	**விவசாய கடன்கள்**	
	1 S.T.கடன்	29,99,060
	2 L.T. கடன்	4,32,700
	3 L.T.கடன்	93,511
	4 M.T., IRDP Dry	56,186
	5 O.F.கடன்	3,36,900
	மொத்தம்	**39,18357**

b.	மற்ற கடன்கள்	
	1. O.L.	3,93,883
	2. IRDP Try	27286
	மொத்தம்	**4,21,169**
c.	தனிப்பட்ட கடன்கள்	
	1. தங்க நகை கடன்கள்	10,36,535
	2. ஈட்டுக்கடன்	67,750
	3. O.F. வியாபாரக் கடன்	6,20,410
	மொத்தம்	**17,24,695**
	ஆக மொத்தம்	**60,64,221**

மற்ற இடங்களில் இருந்து வாங்கிய கடன்கள்			கொடுத்த கடன்கள் காலவதி தீர்ந்தும் கிடைக்காத பாக்கி தொகை	
நிலையம்	குணம்	ரூபாய்	குணம்	ரூபாய்
இடுக்கி ஜில்லா கூட்டுறவு வங்கி	1 S.T. கடன்	30,00,000	1 S.T. கடன்	5,29,660
	2 MT, TRDP, Pry	35,027	2 O.F. கடன்	32,500
	3 MT, Try	8,158	3 MT, IRDP Pry	18,726
	4 OL	3,99,500	4 MT, Try	18,766
	5 LT ஏலக்காய் கடன்	4,29,800	5 OL	65,408
	6 LT மாட்டு தொழு கடன்	80,703	6 LT மாட்டு தொழு கடன்	10,331
			7 நகை கடன்	34,100
	மொத்தம்	**39,53,188**	**மொத்தம்**	**7,09,491**

சேமிப்புத் திட்டத்தில் இனியும் பல நபரை முன்னேற்ற வேண்டியுள்ளது. பொது மக்களிடமிருந்து 21,22,105 ரூபாய் நிரந்தரமான சேமிப்பு 6,18,930 ரூபாயும் இடைக்கால சேமிப்பாகவும் இருக்கிறார்கள். வங்கிக்கு சொந்தமான இடமும், இருமாடி கட்டிடமும் உண்டு.

கார்டமம் மார்கட்டிங் கூட்டுறவு சங்கத்தில் இன்றைய நிலவரம் கௌரவமான முறையில் முன்னேற்ற வேண்டியுள்ளது உரம், பூச்சி கொல்லி மருந்து தெளிப்பான், போன்றவையும் விற்கப்பட்டும், ஏலம், காப்பி, மிளகு, நாற்றங்காள் நடத்தி வந்த இச்சங்கம் 93ற்கு பின்பு உரம் மொத்த வியாபாரம் மட்டும் அதும் அதற்கு மட்டுமாகவே நடக்கின்றது 30.6.96 வரையுள்ள கால அளவில் மொத்த நஷ்டம் 27 லட்சம் ரூபாயாக வளர்ந்து நிற்கிறது. (செயல்பாட்டு மூலதானத்தில் மூன்றில் இரண்டு பங்கு) மாவட்ட வங்கியில் இருந்து எடுத்த 6 லட்சம் ரூபாய் நிலைவையாக இருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் செயல்பாட்டு மூலதனம் இல்லாமல் செயல்பாடு இழந்து நிற்கிறது. இச்சங்கம், வங்கிக்கு சொந்தமாக 10 சென்ட் இடம் இருந்தாலும் தற்போதும் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

ஏலம் போன்ற விளை பொருட்கள், உரம் பூச்சிக் கொல்லி மருந்துகள் போன்றவை மார்க்கெட்டிங் சங்கத்தின் கீழ் கொடுத்து விவசாயிகளை ஊக்கு விக்க வேண்டியதுமாகும். கம்பெனி மேனேஜர்கள், தனியார் எஸ்ட்டேட் உடமையஸ்தர்களிடமிருந்தும், சாதாரன மக்களிடமிருந்தும் முழுமையான ஒத்துழைப்போடு, பொருளாதாரத்தில் முன்னேரியிருப்பவர்களிடமிருந்தும் அரசு உதவியோடும் இச்சங்கத்தை நிலை நிறுத்த வேண்டும்.

கூட்டுறவு பால் பண்ணைகளின் செயல்பாடுகள் பற்றிய விபரங்கள்

சங்கத்தின் பெயர்	95-96ல் சேகரித்த பால்	பஞ்சாயத்தில் விற்றது	வெளியே அனுப்பப் பட்டது
1. சாந்தன்பாறை பால் கூட்டுறவு சங்கம்	28535.4L	8197 L	20266.42 L
2. பள்ளி குந்து பால் கூட்டுறவு சங்கம்	88708L	9788 L	78920 L

சாந்தன்பாறை கூட்டுறவு பால் பண்ணையில் 77 நபர்களில் 3 பேர்கள் மட்டுமே பால் தருகிறார்கள். மில்ம சங்கத்தில் செயல்பாடுகள் நடத்த தேவையான கமிஷன் தருவதில்லை. உள்ளூர் விற்பனை நடத்துவதில் இருந்து கிடைக்கும் லாபத்தில் மட்டுமே இச்சங்கம் செயல்படுகிறது.

இப்பஞ்சாயத்தில் முழுவதும் உள்ள பால் கொடுக்க கூடியவர்கள் உபயோகபடுத்துபவர்கள் இனியும் இப்பகுதியில் கூட்டுறவு பால் பண்ணைகள் தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேல் குறிப்பிட்ட சங்கங்கள் இல்லாமல் சாந்தன் பாறையில் இடுக்கி மாவட்ட கூட்டுறவு வங்கி ஒரு கிளை இங்கு நடைமுறையில் இருக்கின்றது. மலநாடு கூட்டுறவு பூமி அடகு வங்கி ஒன்று செயல்பட்டு கொண்டு இருக்கிறது. இவ்வங்கியில் இருந்து பல தரப்பட்ட கடன்கள் நீண்ட கால அளவில் தரக்கூடிய கடன்கள் இப்பகுதியில் நல்லமுறையில் நடைமுறையில் உள்ளது இப்பஞ்சாயத்தில் முன்பு நடந்து வந்த ஒரு தோட்டம் தொழிலாளிகளின் கூட்டுறவு சங்கம் தற்போது செயல்பாடுகள் இல்லை.

இப்பஞ்சாயத்தின் பலதரப்பட்ட விரிவாக்கத்திட்டங்கள் நிர்ணயமான பங்கு வகிக்க கூடுமான கூட்டுறவு முறையில் நமது ஏரியாவில் அவ்வளவு நல்ல சக்தி இல்லை. உற்பத்தி - வழங்குதல் இடங்களில் ஒன்று பட்ட சக்தியோடு செயல்பட வேண்டியுள்ளது. மக்கள் மத்தியில் ஒரு பாகம் மட்டுமே கூட்டுறவு சங்கங்களில் அங்கமாகிறார்கள். மக்கள் அனைவரும் உள்வர கூடுமான வரையில் கூட்டுறவு சங்கத்தை வளர்க்க வேண்டும். சீட்டு நடத்தவும். கடன் கொடுக்கவும், ஓண சந்தைகள் நடத்தவும் இவைகளில் மட்டும் அடங்கி கிடக்கின்ற கூட்டுறவு வங்கியை செயல்பாடுகள் எல்லா பகுதிகளிலும் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் கார்டமம் மார்கட்டிங் கூட்டுறவு சங்கத்தை மக்களுக்கு சேவை செய்யும் நிலையமாக உருவாக்க வேண்டும்.

பிரச்சினைகள்

1. நிர்வாகிகளின் பொருப்பற்ற தன்மை
2. புதிய திட்டங்களில் சேருவதற்கு விருப்பமில்லாமை
3. ஊழியர்களின் மற்றும் அங்கத்தினர்கள் பஸ் கொடுத்தால் குறைவு
4. ஜனநாயக செயல் முறை குறைவு
5. நவீன தொழிற் நுட்பக் குறைவு
6. முறையற்ற போக்கு
7. தேவையற்ற அரசியல் அடிப்படையில் உள்ள போட்டிகள்

தீர்வுகள்

1. பணி நிர்வாக பயிற்சிகள் ஊழியர்களின் பயிற்சிகள் கூட்டுறவு அங்கத்தினர்களுக்கான கூட்டுறவு கருத்தரங்குகள் போன்றவை நடத்த வேண்டும்.
2. சங்கங்களின் செயல்கள் ஜனநாயக ரீதியாக்கில் ஆண்டறிக்கைகள் "ஏனோ தானோ" என்று ஆக்க எண்ணாமல் இருத்தல்.
3. பொது தனிக்கை நடைமுறைபடுத்தல்
4. கூட்டுறவு சங்கங்களின் கிளைகள் பள்ளிகுந்து பூப்பாறை, சேரியார், போன்ற இடங்களில் ஆரம்பிக்க வேண்டும்.
5. கூட்டுறவு சங்கங்களின் தலைமையில் நிறந்தர மாவேலி ஸ்டோர்கள் ஆரம்பிக்க வேண்டும்.
6. கார்டமம் மார்கட்டிங் கூட்டுறவு சங்கத்தை செயல் குழப்பில் இருந்து உயிர் கொடுத்து செயல்பட வைக்க ஒரு ரிவைவல் திட்டம் மார்கட்டிங் சங்கம் மாவட்ட கூட்டுறவு வங்கி சேர்ந்து நடைமுறை படுத்த வேண்டும்.
7. கூட்டுறவு பகுதியில் ஒரு மருத்துவமணை உண்டாக்க் வேண்டும்.
8. புதிய கூட்டுறவு சங்கங்கள் உண்டாக்க வேண்டும்
   a. வீட்டு வசதி கூட்டுறவு சங்கம்
   b. நுகர்வோர் கூட்டுறவு சங்கம்
   c மகளிர் கூட்டுறவு சங்கம்
   d தோட்டம் தொழிலாளி கூட்டுறவு சங்கம்
   e ஜெனரல் மார்கட்டிங் கூட்டுறவு சங்கம்
   f கூட்டுறவு பால் பண்ணை V, VI வார்டுகளில்
   g நெசவு தொழிலாளி கூட்டுறவு சங்கம்
9. கூட்டுறவு பகுதியில் விவசாய உற்பத்தியான, ஏலம், மிளகு, காப்பி, போன்றவை விவசாயிகளுக்கு பத்திரப்படுத்தக் கூடிய பாதுகாப்பு மையங்கள் அமைத்தும், அவற்றை அடவு வைக்கவும் (முன் பணம்) வேண்டிய வசதிகள் செய்து தர வேண்டும்.

பொருளாதாரம்

சாந்தன்பாறை பஞ்சாயத்தில் பொருளாதாரம் மிகவும் அதிகம் என்று சொல்ல முடியாது வளர்ச்சி திட்ட சம்பந்தமாக பரிசோதிக்கும் போது வருமானம் மிகக் குறைவாகும். பஞ்சாயத்தில் பொதுவான வருமானமான கட்டிட வரி, வருமான வரி ஆகியவைகள் மூலம் வருமானம் இருந்தாலும் செலவு தொகையுமாக ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த வரவு சாதாரணமாகும். சாந்தன்பாறை கிராம பஞ்சாயத்தில் 93-94 ஆண்டிற்கான வரவு ரூ. 8,42,555.70 செலவு ரூ. 8,93,129.55 ஆகும். 94-95 ஆண்டிற்கான வரவு ரூ. 920855.30 செலவு ரூ. 9,52,618.25 ஆகும். மூன்றாண்டை விட கிராம பஞ்சாயத்தில் வரி இனத்தில் தொகை பிரித்து கிடைக்க வேண்டியுள்ளது. வரி பிரிப்பதை கிடைக்க வேண்டியுள்ளது. வரி பிரிப்பதை கட்டாயப் படுத்த வேண்டும்.

வரவு சம்பந்தப்பட்ட விவரங்கள்

இனம்	பொருளாதார வரவு	பிரித்தது	மீதி
மனை வரி	317670.65	197693	119977.65
தொழில் வரி	307872	147940	159932
வணிக வரி	24871.13	24871.13	-
அடிப்படை வணிக வரி	14973.21	14973.21	
பார்வையாளர் நிதி	520.50	520.50	-
சந்தை வரவு	-	-	-
கட்டிட வாடகை	164614	1575.59	7055
உரிமம் பிரிவு	5622.80	5622.50	-
பஞ்சாயத்து இடத்தின் மேலுள்ள வரவு	30822	12034	18788
சொத்து விற்றதின் மேலுள்ள வரவு	30822	12034	7055
அரசு மூலம் நல்கிய தொகை	15770.35	15770.35	-
மற்ற இனம்	448697.06	447697.06	1000
முதலீடு	1150	1150	-
மொத்தம்	**1332535.4**	**1025782.75**	**306752.65**

வரவு சம்பந்தப்பட்ட விவரங்கள்

இனம்	தொகை
ஆட்சி	372663
போக்குவரத்தும் குடிநீரும் ஓடைகள் மக்கள் சுகாதாரமும்	350058
தெரு விளக்குகள்	20676
இதரம்	156410.20
மொத்தம்	**899807.20**

பொதுவான பொருளாதார தரம்

	பொது கணக்கு	மூலதனக்கணக்கு	கடன்கணக்கு
வரவு	20,69,500	75,000	1,20,490
செலவு	20,00,000	85,000	75,494

போக்குவரத்து வேலைகள் முன் மொழியப்பட்டவன் பற்றி பஞ்சாயத்து நேரிடையாகவும் போன்ற நிலைகளில் செய்வதுண்டு. உற்பத்தி செய்யக்கூடிய விவசாய மேல் பகுதிகளில் கிராம பஞ்சாயத்து எந்த விதமான காரியங்களும் செய்வதில்லை சிறப்பங்காடிக்காக கிராம பஞ்சாயத்து கடன் வாங்கிய தொகையில் மீதி ரூ. 693061 கொடுக்க வேண்டியுள்ளது. பஞ்சாயத்தில் இது வரையிலும் இருந்த கடனுடைய கஷ்டம் புதிய நிலை நிலவில் வந்ததோடு சில மாற்றங்களை எதிர் பார்க்கின்றோம். பஞ்சாயத்துக்களுக்கு கூடுதல் பொருளாதார அதிகாரம் கொடுத்தால் வங்கிகள் மற்ற இதர நிறுவனங்கள் மூலமாக கடனுதவி வாங்குவதற்கு முடியும். யூனியன் வங்கி, மாவட்ட கூட்டுறவு வங்கி, ஊரக கூட்டுறவு வங்கி முதலிய நிறுவனங்கள் நல்ல நிலையில் இங்கு செயல்பட்டு வருகின்றன. இந்த நிறுவனங்கள் பொருளாதார பகுதிகளில் பரவலாக இடுபாடுகள் வைப்பதுண்டு. பொருளாதார நிறுவனங்களிலிருந்து எடுக்கக்கூடிய கடன்களை பலரும் திருப்பி அடைப்பதில் கவனம் செலுத்துவதில்லை. இதனால் மற்றுள்ளவர்களுக்கு கடன் கொடுப்பதற்கு முடியாமல் போகின்றது. மாவட்ட கூட்டுறவு வங்கியின் சேமிப்பு கடன் சம்பந்தப்பட்ட விவரங்கள்

சேமிப்பு விபரம்	
93/94	7487288
94/95	10187031
95/96	9915404
கடன் சம்பந்தப்பட்ட விவரங்கள்	
93/94	13914564
94/95	16695054
95/96	23026595
1995-96 ஆண்டிற்கான தொகை	
விவசாய கடன்கள்	6116100
நடை அடகு மூலம்	1726253
மற்ற இதரங்கள்	1043600
பிரித்து கிடைக்கக்கூடியது	7080938

மாவட்ட கூட்டுறவு வங்கி கொஞ்சம் உயர்ந்த நிலையில் செயல்படுகின்றது. வங்கியில் ஒதுக்கப்பட்ட தொகை 95/96 1140000 ரூபாய் ஆகும். இந்த ஒதுக்கப்பட்ட தொகை அதிகரித்தால் பொருளாதார பகுதியில் வளர்ச்சியடைவதற்கு முடியும்.

யூனியன் வங்கியின் சேமிப்பும் கடன் சம்பந்தப்பட்ட விவரங்கள்

சேமிப்பு விவரம்	தொகை
94/95	7234000
95/96	5486000
முன்தொகை பாக்கி	**தொகை**
94/95	10595000
95/96	9412000
95/96 ஆண்டிற்கான கடன்கள்	**தொகை**
விவசாய கடன்கள்	2215000
விவசாய பகுதியில்	75000
மற்ற இதர வணிக பகுதிகளில்	**246000**
IRDP	**544000**

பொருளாதார பகுதிகளில் குறைந்த வட்டிக்கு பணம் கொடுக்கக் கூடிய நிறுவனங்கள் தனிப்பட்ட நபர்கள் போன்ற இந்த பகுதியில் உள்ளது. வெளிநாடுகளில் வேலை செய்து வருகின்றவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாகும். இப்படிப்பட்ட நபர்களுடைய சம்பாத்தியம் விவசாய பகுதிகளுக்கு உபயோகப்படுத்துவதற்கு முடியாமல் போய்விடுகிறது. மிகவும் பெரிய தேயிலை ஏலம் தோட்ட உடமைகள் வளர்ச்சி திட்ட செயல்களுக்கு எந்த விதமான உதவியும் செய்வதில்லை. விவசாய உற்பத்தியினுடைய வளர்ச்சி இந்தப் பஞ்சாயத்திற்கில்லை. தோட்ட உரிமைகளின் வருமானம் மற்ற இதர மாநிலங்களுக்குச் செல்கிறது. இதற்குக் காரணம் பொருளாதார ரீதியாக மிகவும் முக்கியமான லஞ்ச லாவண்ய ஊழலே இதற்குக் காரணம்.

கிராம சபைகளிலிருந்து வந்த அபிப்பிராயங்களை பரிசோதித்தால் இந்த பஞ்சாயத்தில் இளைஞர்களுடைய விளையாட்டுத் திறமையை பலன்படுத்துவதற்கும் வளர்ச்சி பகுதிகளில் அவர்களை உபயோகப் படுத்துவதற்கு முடியும் என்பது உண்மை.

மனிதனுடைய உழைப்பே இந்தப் பகுதியினுடைய மிகவும் பெரிய கடமை. இந்தப் பஞ்சாயத்தில் 11 வது வார்டில் பிணாக்காடன் சிற்றி, பள்ளிக்குன்று, ரோடு போன்றவைகள் மனிதனுடைய உழைப்பை உபயோகப்படுத்தி அமைக்கப்பட்டுள்ளதாகும். இது போல மனிதனுடைய உழைப்பை மிகவும் சக்தியாக உபயோகப்படுத்தி திட்டங்கள் தீட்ட வேண்டும்.

பிரச்சனைகள்

1. பஞ்சாயத்தின் பொருளாதாரத்தை சேகரிப்பதற்கு வேண்டிய முறைகளை முழுமையாக உபயோகப்படுத்துவதில்லை.
2. நிர்வாகத்தினுடைய செலவு மிகவும் கூடுதலாக அதிகரிப்பது வளர்ச்சியை மிகவும்

பாதிக்கக்கூடியதாகின்றது.

3. நிர்வாகத்திலுள்ள முறையற்ற நிர்வாகத்தினால் குறைவுகள் ஒப்பந்தக்காரர்களுடைய குறைந்த லாபம்.
4. பொருளாதார நிறுவனங்களிலிருந்து கடன் கொடுப்பதற்கான தடைகள்
5. மற்ற இதர செயல்பாடுகளை உபயோகப்படுத்துவதில்லை.
6. நிர்வாக நடவடிக்கைகளில் கூடுதலும் உண்மையும் நேர்மையும்.

வாய்ப்புகள்

1. வரி பிரிப்பதில் வஞ்சனை காட்டுவதை தடுக்க வேண்டும்.
2. நிர்வாகச் செலவை குறைக்க வேண்டும்.
3. நிர்வாக குழு உறுப்பினர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தேவையான பயிற்சி கொடுத்து நிர்வாகத்திலுள்ள குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.
4. ஒப்பந்தக் காரருடைய அதிக லாபத்தை தடை செய்ய வேண்டும். மக்கள் ஒத்துழைப்பை அதிகரிக்க வேண்டும்.
5. பொருளாதார நிறுவனங்களுடைய திட்டங்களை தேவையான அளவு உபயோகப்படுத்த வேண்டும்.

வனங்களில் இருந்து

63 ஹெக்டேர் ரிசர்வயில் இந்த பஞ்சாயத்தில் வனம் இருப்பதாக கணக்கு காட்டுகின்றது. சில இடங்களில் புல் மேடுகளும் உண்டு. சில இடங்களில் கார்டுகள் அழிக்கப்பட்டு ஏலத்தோட்டங்களாக மாற்றப்படுகிறது. இதனால் இயற்கை காடுகள் அழிக்கப்படுவதால் நீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் காடுகளில் வாழும் உயிரினங்கள் அழிவதோடு சிறு விவசாய்களும் பாதிக்கப்படுகின்றன. இந்த வனங்களில் அழிக்கப்படும் மரங்கள் அட்டவணையில்

முக்கியமரங்கள்

வேங்கை ஈட்டி, பூவரசு, நாங்கிள், வெள்ள பாலிமரம், பூவம், இலுப்பை, சந்தன வேம்பு, பாலிமரம், வெடிமலா, காட்டுபலா, குரங்காட்டி, அகில் பாதிரி, சந்தனம், காட்டுமா, நெல்லி, கருனை, முருங்கை, வெண்நிலா, எடனமரம், பத்திரி, குங்கிலிங்க மரம்.

உயிரினங்கள்

யானை, காட்டுபன்றி, முயல், முள்ளன்பன்றி, மான், கேளை, குரங்கு, அலுங்கு, கூறான், கீரி, மலை அணில், வெறுகு, நரி, கருங்குரங்கு, செந்நாய், பூனை, எலி, மலைப்பாம்பு, காட்டுக்கோழி,

வனச்செல்வங்கள்

தேன், குங்கிலிங்கம், நெல்லிக்காய், கடுக்காய், கழிப்பாக்கு பூ, பாசம், நாங்கிள் கொட்டை, இலுப்பை கொட்டை

மலைப்பகுதிகளில் வாழும் ஆதிவாசிகள் தங்களின் தொழிலாக இந்த பஞ்சாயத்தில் காடுகளில் இருந்து கிடைக்கும் மேல் குறிப்பிட்ட பொருட்களை கொண்டு வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். ஆனால் இவர்கள் காடுகளை அழிப்பதில்லை. காடுகளில் வேலைகள் நன்றாக நடக்கின்றன என்று கூற முடியாது. இந்த பஞ்சாயத்தில் அரசு உயர்நிலைப் பள்ளி 1 ஏக்கர் நிலத்தில் சவுக்கை பூக்காலி, போன்ற மரங்களை நட்டு வளர்க்கின்றார்கள்.

தீர்வுகள் :

1. இந்த பஞ்சாயத்தில் வனங்கள் அழிந்து கொண்டே இருக்கின்றன.
2. மரங்களை திருட்டுதனமாக வெட்டுகின்றார்கள்.
3. வனங்களிலிருந்து விறகு, மற்ற இனங்களும் சேகரிக்க அனுமதிக்கப்படுவதில்லை.
4. வனப்பகுதிகளில் மக்கள் வாழ்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.
5. இயற்கை சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் மரக்கன்றுகள் கிடைப்பதில்லை.
6. வனத்தைப் பற்றியும் இயற்கையமைப்பை பற்றியும் அதிகப்படியான மக்கள் அறிந்து கொள்ளவில்லை.

வாய்ப்புகள் :

1. காடுகள் அழிக்கப்படுவதைப் பற்றி மக்களுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.
2. மரங்கள் இல்லாத இடத்தில் மரத்தை உருவாக்க வேண்டும்.
3. காட்டு மரங்களின் பாகமான யூக்கலி மரத்தை வளர்ப்பதற்கு தேவையான அறிவுரையை மக்களுக்கு உணர்த்த வேண்டும். இயற்கையோடு ஒன்றி நிற்கும் மரக்கன்றுகள் மா, பலா, முதலான மரங்கள் மக்களுக்கு கொடுத்து உதவ வேண்டும்.

முடிவுரை :

நமது தேவைகள் உடனடியாக நிவர்த்தி செய்ய தேவையான பிரச்சினைகள் பலப்பல உண்டு. இவற்றை செயல்படுத்துவதற்கு முடியாமல் போவதன் காரணம் பொருளாதார பற்றாக்குறைகளும் ஒதுக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அளவுத் தொகையுமாகிறது. நாம் தீட்டுகின்ற திட்டங்கள் முழுவதும் உடனே செய்து முடிக்க இயலாது என்பதும் இக்காரணங்களினால்த்தான்.

இதற்கு மாற்று வழி என்ன என்பதை கண்டறிவோமேயானால் மேம்பாட்டு திட்டத்தின் சரியான அறிவு பூர்வமான திட்ட விளக்கங்கள் தேவைப்படுகின்றது. நமது தேவைகள் அனைத்தும் உடன் தீர்வு காணப்படுமேயானால் இந்த மேம்பாட்டு திட்டத்தின் தேவையே வேண்டி வருவதில்லை. தற்போது உள்ள சூழலில் அனுமதிக்கப்பட்ட தொகையின் அளவிற்குள் நின்று கொண்டு நமது உடனடித் தேவைகளை முன்னுரிமை வரிசைப்படி கால வரைகள் நிச்சயித்துக் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டி உள்ளது. முன்னுரிமை வரிசைப் படுத்துகையில் முற்றிலும் அது எதனைக் குறித்து என்றும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், அதற்கு விரிவான விவாதங்களும் அதற்கான கருத்துக்களும் தேவை. சுயநலங்களுக்கு அப்பாற்பட்ட பொது நல எண்ணங்களே இதில் முற்றிலும் நிலவ வேண்டும்.


அது போலவே வருவாய்க்கான மார்க்கங்களை ஆழ்ந்து பரிசோதிக்க வேண்டியுள்ளது. வரிகளை மட்டுமே வருமானங்களாய் கொண்டு வளர்ச்சி திட்டம் நடைமுறைபடுத்த முடியாது. வரி உயர்விற்கோ, வருவாய் பெருக்கத்திற்கோ வாய்ப்பில்லை. உற்பத்தியும் உற்பத்தி பெருக்கமும் கூடும்போது வருவாய்க்கான வாய்ப்புக்களும் உண்டாகிறது என்பதை நாம் மறக்கக் கூடாது. தூய்மையான மேம்பாட்டு திட்டங்களின் குறைவுகளினால் மக்களின் வரிப்பணத்தை வீணடிப்பதை நாம் அறிய வாய்ப்பில்லை அல்லது தடுக்க முடிவதில்லை.

இவை பற்றி புரிந்து கொள்ளவும் சரியான முறையில் நடைமுறைப்படுத்தவும் வேண்டியே மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் சிறப்பான வெற்றியை நாடுகிறது. ஆனால் இப்பகுதியில் போதுமான அளவு வருவாயை சேமிக்க வாய்ப்பில்லை. நீர்-நில வருவாய்களை உற்பத்தி மற்றும் உற்பத்தி பெருக்கத்திற்கு

ஏற்ப எவ்வளவு உயர்த்த உதவும் என்பதை இத்திட்டத்தில் அறியலாம். எரிவாயு கொண்டு உபயோகப்படுத்த அறிவுறுத்தப்படும். மேற்கூறிப்பிட்டுள்ளவைகள் யாவும் முடியாமையோ, செயலில்லாமையோ, அன்று. பஞ்சாயத்துராஜ் அலுவலகங்களின் மூலம் பரவலாக்கப்பட்டு கிராம அபிவிருத்தியினை உறுதிப்படுத்தப்படுகிறது.

இனி தேவையுள்ளது நமது ஒற்றுமை உணர்வும், ஒருமைப்பாடும் என்பதே. இவை இரண்டும் முதலாக்கி கொண்டு நமது கிராம வளர்ச்சியின் முன்னேற்றப் பாதையில் பங்கெடுப்போம்.

விவசாய - தொழில் பகுதிகளில் உற்பத்தி மற்றும் உற்பத்தி பெறுக்கத்தினை அதிகரித்து பொது நல மேகலையின் நிலைகளை மிகைப் படுத்தி வளர்ச்சி திட்டத்தில் ஏற்படுகின்ற சவால்களை சந்திக்க அதனை வெற்றிகாண மக்கள் மேம்பாட்டு திட்டத்தில் பங்கு பெற்று அனைவரையும் இதில் பங்காளிகளாக்குவதற்கு நம்மால் முடியும் என எதிர் பார்க்கிறோம்.



திரு. ஆப்ரகாம் ஐசக்,



* திருவிதாங்கூர் சுங்கவரி ஆலுவலகம்*

போடிமெட்டு

கேரளா-தமிழ் நாடு ஏல்லையில்

திருவிதாம்கூர் மன்னர் காலத்தில் கட்டி முடித்த இக்கட்டிடம்
இப்போது வணிகவரி பரிசோதனை நிலையமாக செயல்படுகிறது.



சாந்தன் பாறை கிராம பஞ்சாயத்தின் 7-ஆம் வார்டாகிய ஆணையிரங்கலில் அமைக்கப்பட்ட அணைக்கட்டு (பண்ணையார் நீர்மின் நிலையம்) 1967 ஜனவரி 26 ஆம் தேதி திரு.C.சந்துநாயர், சேர்மன், கேரள மாநில மின்வாரியம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

Printed at Samareka Impressions Ernakulam. Ph: Off: 336373, Resi: 557040